# திருமறைத்தீபம்



BIBLE LAMP

திருமறைத்தீபம்

**Issue No: 3 of 2003**

**ISBN 1173-7255**

இக்காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக்கூடாது.

ஆசிரியர்: ஆர். பாலா

**Editor**: R. Bala
**Publisher**: Sovereign Grace Publications
**Address:** P O Box 62 159
Sylvia Park, Auckland 1006
New Zealand
**Telephone**: 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**email**: blamp@ihug.co.nz
**Web site**: www.biblelamp.org

"கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத்தடங்கல் என்றுதான் கூறவேண்டும்."

சி. எச். ஸ்பர்ஜன்
1834-1892

*உலக சமுதாயம் எப்பொழுதுமே காலத்துக்கேற்ப மாறுதல் அடைந்து கொண்டே வரும். பாவம் தொடர்ந்தும் பாவமாகவே இருந்து சமுதாய மக்களைப் பாதித்து வந்தாலும், காலத்துக்குக் காலம் அது புதுக்கோணங்களில் மக்களின் சிந்தனைப் போக்கைப் பாதித்து செயல்பட வைக்கின்றது. நமது தமிழ் சமுதாயத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். கல்லூரிகளில் பாலியல் கல்வி போதிக்க வேண்டும் என்றளவுக்கு இன்று சிந்தனை போய்க்கொண்டிருக்கிறது. இதுபோல் இன்னும் எத்தனையோ மாற்றங்கள். இந்த மாற்றங்கள் சமுதாய மக்களைப் பாதிப்பதோடு கிறிஸ்தவர்களையும், சபைகளையும் பாதிப்பதாகவும் இருக்கின்றன. பாவத்தோடு கிறிஸ்தவர்கள் நடத்தும் போராட்டம் இந்த சமுதாய மாற்றங்களை நினைவில் கொண்டு நடத்தப்படுவதாக இருக்க வேண்டும். இந்த மாற்றங்களை நாம் புறக்கணித்துவிட முடியாது; அவை நம்மை ஒன்றும் செய்யாது என்று அலட்சியமாக இருந்துவிடவும் முடியாது. இந்த மாற்றங்களைக் கவனித்து, இவற்றின் போக்கில் போய்க்கொண்டிருக்கிற சமுதாய மனிதன் திருந்துமுகமாக நாம் சுவிசேஷத்தை வல்லமையோடு பிரசங்கிக்க வேண்டும். மேலை நாடுகளில் இன்றைய சூழ்நிலையில் சமுதாய மக்களைப் பாதித்திருக்கும் சிந்தனைப் போக்கைப் பின்நவீனத்துவம்* (Postmodernism) *என்று சமூகவியலாளர்கள் அழைக்கிறார்கள். இந்தப் பின்நவீனத்துவம் டெலிவிஷன், இணையம் மற்றும் பல நவீன தொழில்நுட்ப செய்திப்பரவல் சாதனங்களின் மூலம் தமிழ் மக்களையும் இன்று துரிதமாகப் பாதித்து அவர்களுடைய சிந்தனைப்போக்கிலும், வாழ்க்கையிலும் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது. இம்மாற்றங்களை மேலை நாடுகளில் வாழும் தமிழர் மத்தியில் வெட்டவெளிச்சமாகப் பார்க்கலாம். ஆனால், கீழைத்தேசங்களில் முக்கியமாக நகர்ப்புறங்களில் வாழ்பவர்களை அவை இன்று பெருமளவுக்கு பாதித்து வருகின்றன. இந்தப் பின்நவீனத்துவத்தை விளக்கி, இதை எதிர்கொண்டு நாம் எப்படிக் கிறிஸ்தவர்களாக வெற்றிகரமாக வாழ்வது? திருச்சபைகள் எவ்வாறு சுவிசேஷ ஊழியத்தைத் தொடர்வது? என்பதை "பின்நவீனத்துவமும், கிறிஸ்தவமும்" என்ற ஆக்கத்தின் மூலம் இந்த இதழில் ஆராய்ந்திருக்கிறோம். சிந்தித்து விளங்கிக் கொள்ள வேண்டிய இந்த ஆக்கம் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன். வழமையாக வரும் ஆக்கங்களோடு புதிய சில ஆக்கங்களையும் இவ்விதழில் காணலாம். தொடர்ந்து நீங்கள் சத்தியத்தில் வளரவும், வளம்பெறவும், உறுதிபெறவும் கர்த்தர் உங்களுக்கு இந்த இதழ் மூலம் உதவட்டும் - ஆசிரியர்*

# பிரசங்கம் தயாரித்தல்-1



தேவ செய்தியை ஆத்துமாக்கள் அறிந்து கொள்வதற்கு கர்த்தரால் தெரிவு செய்யப்பட்டுள்ளதும், பரிசுத்த ஆவியால் பயன்படுத்தப்படுகிறதுமான செய்திப் பரிமாறல் முறை பிரசங்கம் மட்டுமே என்று பார்த்தோம். அந்தப் பிரசங்கம் அதிகாரமுள்ளதாக, உலகப்பிரகாரமானதாக இல்லாமல், தேவபயத்துடன் செய்யப்பட வேண்டும் என்று கடந்த இதழில் பார்த்தோம். இனி இந்தப் பிரசங்கத்தை எப்படித் தயாரித்தளிப்பது என்று ஆராய வேண்டியது அவசியம். பிரசங்கம் உலகத்தில் நாம் பார்க்கிற ஏனைய செய்திப் பரவல் முறைகளையெல்லாம் விட சிறப்பானதும், கர்த்தரால் பயன்படுத்தப்படுகிறதும், ஆத்துமாக்களின் ஆத்மீகத் தேவைகளை நிறைவேற்ற அவசியமானதுமாக இருப்பதால் அதைத் தயாரிக்கும்போது வேதம் எதிர்பார்க்கின்ற சில காரியங்களை நாம் பின்பற்ற வேண்டியது அவசியமாகிறது. அவற்றை இனிப்பார்ப்போம்.

## பிரசங்கப் பொருளைத் தெரிவு செய்தல்

எந்தப் பிரசங்கியும் முதலில் தான் எதைப் பிரசங்கிக்கப் போகிறேன், அதை எந்த வேதப்பகுதியில் இருந்து பிரசங்கிக்கப் போகிறேன் என்பதை முதலில் தீர்மானிக்க வேண்டும். எதையும் ஏற்கனவே தயார் செய்யாது பிரசங்க மேடைக்குப் போனபின் அங்கே ஆவியானவர் திடீரென பிரசங்கப் பொருளைத் தருவார் என்ற பொய்யை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிற அனேக பிரசங்கிகளை நாமறிவோம். இவர்கள் தம்மையும் ஏமாற்றிக் கொண்டு தங்களுடைய அறிவீனத்தால் அநேக ஆத்துமாக்களின் ஆத்மீக வாழ்க்கையையும் பாதிக்கிறார்கள். ஆனால், மெய்யான பிரசங்கி பிரசங்கங்களை ஏற்கனவே தயார் செய்கிறவனாக இருப்பதால் அவன் முதலில் பிரசங்கத்திற்கான பொருளைத் தயார் செய்வதில் தனது முழுக் கவனத்தையும் செலுத்துவான். அதைச் செய்வதற்கு பிரசங்கி முதலில் இரண்டு முக்கியமான காரியங்களில் ஈடுபடுதல் அவசியம்.

## ஜெபம்

பிரசங்கம் தயாரிப்பதற்கு எந்தப் பிரசங்கியும் அதிகமாக ஜெபத்தில் தரித்திருத்தல் அவசியம். சிலர், ஜெபம் செய்வதோடு நின்று விடுவார்கள். பிரசங்கத்தைக் கவனத்தோடு தயாரிப்பதில்லை. அவர்களுடைய பிரசங்கம் ஆவிக்குரியதாக இருக்காது. பிரசங்கி முதலில் பிரசங்கப் பொருளுக்காக தன்னுடைய ஜெபத்தில் கர்த்தரை நாட வேண்டும். பிரசங்கங்களை ஆசீர்வதிக்கும் கர்த்தரே நாம் பிரசங்கிக்க வேண்டிய பிரசங்கத்திற்கான பொருளையும் காட்டித் தருகிறவராக இருக்கிறார். இதைக் கர்த்தர் எப்படிச் செய்கிறார் என்பதை விளங்கிக் கொள்வது அவசியம். நாம் அன்றாடம் வேதத்தைப் படிக்கும்போது ஜெபத்தோடு சிந்தித்துப் படிக்க வேண்டும். அப்படிக் கருத்தோடு படிக்கும்போது அந்தப் பகுதிகளில் எந்த நூலில் இருந்து, எந்தப் பகுதியில் இருந்து பிரசங்கிக்க வேண்டுமென்பதைக் குறித்து நாம் ஜெபத்தோடு சிந்திக்க வேண்டும். அப்படி ஜெபத்தோடு சிந்திக்கின்றபோது கர்த்தர் நாம்

பிரசங்கிக்க வேண்டிய பகுதியையும், பொருளையும் குறித்து நம்மை வழிநடத்துவார். இது மெஜிக் காட்சி போல திடீரென்று நடக்கின்ற ஒரு காரியமல்ல. நாம் நேரத்தை செலவிட்டு அன்றாடம் தொடர்ந்து ஜெபத்தோடு வேதத்தைப் படிக்கின்றபோது அதன் மூலமாக கர்த்தர் நமக்குத் தருகின்ற ஞானம். ஜெபித்துப் படிக்காத பிரசங்கியை கர்த்தர் வழி நடத்த மாட்டார்.

### ஆத்துமாக்களின் தேவை

பிரசங்கப் பொருளைத் தெரிந்து கொள்வதில் பிரசங்கிகள் அதிக கவனம் செலுத்துவது அவசியம். முக்கியமாக சபைகளில் போதகர்களாக இருப்பவர்கள் தொடர்ந்து தம் மக்களுக்கு ஆத்மீக உணவளிக்க வேண்டிய பொறுப்பைக் கொண்டிருப்பதால், ஆத்துமாக்களின் தேவைக்கேற்ப உணவளிக்க வேண்டியது அவசியம். பலவீனமானவர்களுக்கும், பலமுள்ளவர்களுக்கும், இளைஞர்களுக்கும், சிறுபிள்ளைகளுக்கும் அவரவர் தேவைக்கும் வளர்ச்சிக்கும் ஏற்றவிதத்தில் முழு வேதத்தில் இருந்தும் தகுந்த போதனைகளை அளிப்பது அவசியம். அத்தோடு ஒரேவிதமான உணவை எப்போதும் கொடுக்க முடியாது. அதேபோல ஒரே பொருளை ஒவ்வொரு வாரமும் தொடர்ந்து பிரசங்கிக்க முடியாது. கேட்பவர்களுக்கு அப்படிப்பட்ட பிரசங்கம் சலித்துப் போகும். வேதத்தின் பலபகுதிகளில் இருந்தும் சகல போதனைகளையும் ஆத்துமாக்களின் வளர்ச்சிக்குத் தேவையான விதத்தில் பிரசங்கிக்க வேண்டும். சுவிசேஷம், திரித்துவம், இயேசு கிறிஸ்து, கிருபையின் போதனைகள், வேதத்தின் தன்மைகள், கர்த்தரின் குணாதிசயங்கள், இரட்சிப்பின் நிச்சயம், மரணம், பரலோகம், நரகம், கிறிஸ்துவின் வருகை என்று வேதம் போதிக்கும் பல்வேறு சத்தியங்களையும் முறையாக முறைப்படுத்தி பிரசங்கிக்க வேண்டியது பிரசங்கியினுடைய கடமை. அத்தோடு ஒவ்வொரு வேத நூலையும் முறையாக வியாக்கியானம் செய்ய வேண்டியதும் பிரசங்கியின் பொறுப்பு. தங்களுடைய சபை மக்களை நன்றாக அறிந்து வைத்திருக்கும் போதகர்கள் பிரசங்கங்களைத் தயாரிக்கும்போது அவர்களை நினைவில் கொண்டே எப்போதும் பிரசங்கங்களைத் தயார் செய்வார்கள்.

### பிரசங்கப்பகுதியை ஆராய்தல்

பிரசங்கத்திற்கான வேதப்பகுதியையும், பொருளையும் கர்த்தரின் வழிநடத்தல் மூலமாக தெரிந்து கொண்டபின் பிரசங்கி பிரசங்கத்தைத் தயாரிக்கும் வேலையில் ஈடுபட வேண்டும். இதற்காக ஒவ்வொரு நாளும் பிரசங்கி தகுந்த நேரத்தை ஒதுக்குவது அவசியம். எவருடைய தலையீடும், இடையூறும் இல்லாத நேரத்தில் சில மணிநேரங்களை இதற்காக ஒதுக்கி அமைதியான ஓர் இடத்தில் இருந்து பிரசங்கத் தயாரிப்பில் ஈடுபட வேண்டும். பிரசங்கத் தயாரிப்பில் ஈடுபடுகிறபோது எடுக்க வேண்டிய ஆரம்ப நடவடிக்கைகளை இனிப் பார்ப்போம்.

### பிரசங்கம் தயாரிக்கும்போது எடுக்க வேண்டிய ஆரம்ப நடவடிக்கைகள் (Initial discipline)

#### அ. அப்பகுதி எங்கு ஆரம்பித்து எங்கு முடிகிறது (Context)

பிரசங்கி பிரசங்கத்தைத் தயாரிக்கும்போது சில ஆரம்ப நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். முதலில் பிரசங்கம் செய்வதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள வேதப்பகுதி எத்தகைய சந்தர்ப்பத்தில் அமைந்திருக்கிறது என்பதை ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும். அதாவது, அதைப் பலமுறைப் படித்து

அந்தப் பகுதி எங்கே ஆரம்பித்து, எங்கே போய் முடிகிறது என்று பார்ப்பது அவசியம். எப்போதும் அரைகுறையாக தொடர்பில்லாத ஒரு பகுதியை பிரசங்கிப்பதற்கு தெரிந்து கொள்ளக்கூடாது. பிரசங்கிக்கத் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கும் வேதப்பகுதிக்கு ஆரம்பமும் முடிவும் இருக்க வேண்டும். ஒவ்வொரு வேத வசனமும் அல்லது வசனங்களும் எப்போதும் ஒரு குறிப்பிட்ட பகுதியோடு தொடர்புடையதாகவே காணப்படும். அந்த வசனமோ, வசனங்களோ காணப்படும் வேதப்பகுதி எது என்பதைக் கண்டுபிடிப்பதுதான் பிரசங்கியின் ஆரம்ப வேலையாக இருக்க வேண்டும்.

முக்கியமாக, ஒரு வசனத்தை மட்டும் எடுத்துக் கொண்டு பிரசங்கிப்பது அவ்வளவு நல்லதல்ல. இன்று அனேகத் தமிழ் பிரசங்கிகள் மத்தியில் இந்தப் பழக்கத்தைக் காணலாம். ஒரு வசனத்தை மட்டும் எடுத்துக் கொண்டு அந்த வசனம் காணப்படும் வேதப்பகுதியை ஒரு முறையாவது ஆராயாது அந்த வசனத்தைப் பயன்படுத்தி தாம் நினைத்தை சொல்லுவது பல தமிழ் பிரசங்கிகளின் தொழிலாக இருக்கின்றது. எந்த ஒரு வார்த்தைப் பிரயோகமும், வசனமும் வேதத்தில், அவை காணப்படும் வேதப்பகுதியோடு தொடர்புடையதாக இருக்கின்றன. ஆகவே, எந்த வசனத்திற்கும் அது காணப்படும் வேதப்பகுதியோடு தொடர்புபடுத்தி ஆராயாமல் விளக்கம் கொடுப்பது அநீதியான காரியம். உதாரணத்திற்கு ரோமர் 15:1-ஐ எடுத்துக் கொள்ளுங்கள். இங்கே, "அன்றியும் பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும்" என்று எழுதியிருக்கிறது. இந்த வசனத்தைப் பிரசங்கப் பொருளாக எடுத்துக் கொண்டு, பலமுள்ளவர்கள் பலவீனருக்குத் துணையாக இருக்க வேண்டும் என்ற பொருளில் பிரசங்கம் செய்கிறவர்கள் அனேகர். அவர்கள் தொடர்ந்து பலமுள்ளவர்கள் எந்தவகையில் பலவீனருக்கு துணை செய்ய வேண்டும் என்று பல காரணங்களைக் கூறிப் பிரசங்கம் செய்வார்கள். இதில் என்ன தவறு என்று பார்ப்போம். பலமுள்ளவர்கள் பலவீனருக்கு எப்படி உதவியாக இருக்க வேண்டும் என்று பிரசங்கி பல நல்ல ஆலோசனைகளைக் கொடுத்திருந்தாலும் அவர் விடுகிற மிகப் பெரிய தவறு அந்த வசனத்தை அது காணப்படும் வேதப்பகுதியின் அடிப்படையில் பிரசங்கிக்காததுதான். ஒரு நல்ல பிரசங்கி அந்த வசனம், "அன்றியும்" என்ற வார்த்தையுடன் ஆரம்பமாகிறது என்பதை முதலில் கவனிப்பான். அடுத்ததாக, அதற்குக் காரணம் என்ன என்று ஆராய்வான். அப்படி ஆராய்கிறபோது அந்த வார்த்தை ரோமர் 15:1-ஐ அதற்கு முன்னால் காணப்படும் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்ற போதனைகளோடு இணைக்கிறது என்பதை அறிந்து கொள்வான். அவன் தொடர்ந்து அந்த வசனம் காணப்படுகின்ற பகுதி முழுவதையும் ஆராய்கிறபோது, அவ்வசனம் பொதுவாக பலமுள்ளவர்கள் பலவீனருக்கு செய்ய வேண்டிய உதவிகளைப் பற்றி விளக்காமல் விசுவாசிகளுக்கு மத்தியில் ஏற்பட்டிருந்த ஒரு பிரச்சனையைக் குறித்தும், அந்தப் பிரச்சனையை எப்படித் தீர்ப்பது என்பதற்கு பவுல் தந்துள்ள ஆலோசனைகளையுமே விளக்குகின்றது என்பதையும் அறிந்துகொண்டு பிரசங்கத் தயாரிப்பில் ஈடுபடுவான்.

இதனால்தான் ஒரு வசனத்தை மட்டும் பயன்படுத்தி பிரசங்கம் செய்யும் பழக்கத்தைக் கைவிடுவது நல்லது. தமிழ் வேதத்தில் ஆழ்ந்த அறிவில்லாத நம்முடைய மக்களுக்கு வேத சத்தியங்களை முறையாகப் போதிக்க அந்த முறை உதவாது. எத்தனை நல்ல காரியங்களை ஒருவசனத்தை மட்டும் பயன்படுத்தி சொல்ல முடிந்தாலும் நாம் சொல்லுகின்ற அனைத்தும் அந்த

*வசனம் காணப்படும் பகுதியோடு சம்பந்தப்படாமல் இருந்தால் அதனால் எந்தவிதமான பலனும் இல்லை. ஆகவே, பல வசனங்களை அல்லது பல பத்திகளைக் கொண்ட ஒரு வேதப்பகுதியை பிரசங்கிக்க எடுத்துக்கொள்வது எப்போதுமே பலன் தரும். அதாவது, பிரசங்கப்பகுதி ஒரு அதிகாரம் அல்லது அந்த அதிகாரத்தின் அரைவாசிப் பகுதியாகவாவது இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இதை ஒரு உதாரணத்திற்காகவே சொல்லுகிறேன். முக்கியமாக அப்படி எடுத்துக்கொள்கிற பகுதிக்கு ஆரம்பமும் முடிவும் இருக்க வேண்டும்.*

*பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபத்தின் முதலாவது அதிகாரத்தில் இருந்து பிரசங்கிக்கப் போவதாக வைத்துக்கொள்வோம். அது எங்கு தொடங்கி எங்கு முடிகின்றது என்று முதலில் பார்ப்பது அவசியம். இந்தப் பகுதியில் பவுல் கர்த்தரிடம் செய்யும் ஜெபத்தைப் பார்க்கிறோம். மூலமொழியில் இந்தப் பகுதியில் முற்றுப் புள்ளி இல்லாமல் முதல் 14 வசனங்களையும் பவுல் எழுதியிருக்கிறார். அதாவது பதினான்கு வசனங்கள் தொடர்ச்சியாக ஒரே வசனமாக இருக்கின்றன. இதைத் தெரிந்து கொள்ளாமல் இந்தப் பகுதியில் இருந்து பிரசங்கிக்கப் போவது ஆபத்து. இந்தப் பதினான்கு வசனங்களிலும் பவுல் தனது ஜெபத்தில் இரட்சிப்பின் பலன்களாக விசுவாசிகளுக்கு கர்த்தர் அளித்திருக்கும் ஆசீர்வாதங்களை படிப்படியாக அடுக்கி வைக்கிறார். ஆகவே, இந்தப்பகுதியின் ஆரம்பம் 1-ம் வசனத்தில் தொடங்கி 14-வது வசனத்தில் வந்து முடிகின்றது. இதை உதாசீனப்படுத்திவிட்டு இந்தப் பகுதியில் இருந்து பிரசங்கிப்பது கர்த்தரின் வார்த்தையை அலட்சியப்படுத்தும் செயலாகவே இருக்கும்.*

*சுவிசேஷ நூல்களில் காணப்படும் உவமைகளில் இருந்து பிரசங்கிக்கும்போது அந்த உவமை எங்கு ஆரம்பித்து எப்படி முடிகின்றது என்று பார்க்க வேண்டும். முக்கியமாக உவமைகளுக்கான அர்த்தம் அதன் ஆரம்ப வசனத்திலோ அல்லது அந்தப்பகுதியின் கடைசி வசனத்திலோ கொடுக்கப்பட்டிருக்கும். உவமை காணப்படும் பகுதியின் ஆரம்பத்தையும், முடிவையும் அலட்சியப்படுத்தினால் அந்த உவமையையே புரிந்து கொள்ள முடியாமல் போய்விடும். அது மட்டுமல்லாமல் சில வேளைகளில் இயேசு கிறிஸ்து தான் ஒரு உவமையின் மூலமாகப் போதிக்கப்போவதாக சொல்லாமலேயே உவமையைச் சொல்லத் தொடங்கியிருக்கிறார். அது உவமை என்பதை அது காணப்படும் பகுதி முழுவதையும் படித்தால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும். உதாரணத்திற்கு மத்தேயு 13-ம் அதிகாரத்தில் காணப்படும் உவமைகளை அவை உவமைகள் என்பதை "அவர் அனேக விஷயங்களை உவமைகளாக அவர்களுக்கு சொன்னார்" என்று 3-ம் வசனத்தில் இருந்தும், 18, 24, 31, 33 ஆகிய வசனங்களில் இருந்தும் தெரிந்து கொள்கிறோம். இந்த வசனங்கள் அங்கே தரப்பட்டுள்ள ஒவ்வொரு உவமையும் எங்கு ஆரம்பித்து எங்கு முடிகின்றன என்பதைத் தெரிந்து கொள்ள உதவுகின்றன.*

*ஆனால், சில வேளைகளில், "நான் இப்போது உவமையின் மூலமாக ஒரு கருத்தை விளக்கப் போகிறேன்" என்று சொல்லாமலேயே உவமையைத் தந்திருக்கிறார் இயேசு கிறிஸ்து. உதாரணத்திற்கு மத்தேயு 25-ம் அதிகாரத்தை எடுத்துக் கொள்வோம். இங்கே தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்த போதனைகள் காணப்படுகின்றன. இந்தப்பகுதியில் தேவனுடைய இராஜ்யத்தை விளக்குவதற்காக இயேசு சில உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார். இந்த*

அதிகாரத்தின் 1-ம் வசனம், 14-ம் வசனம் ஆகியவற்றில் காணப்படும் "ஒப்பாயிருக்கிறது", "ஒப்புக்கொடுத்ததுபோல் இருக்கிறது" ஆகிய வார்தைகளின் மூலமாக மட்டுமே இவை உவமைகள் என்று அறிந்து கொள்ள முடிகின்றது. இப்படி இன்னும் பல உதாரணங்களைக் காட்ட முடியும். ஆகவே, ஒவ்வொரு வேதப்பகுதியையும் ஆராய்ந்து அவை எங்கு ஆரம்பித்து எங்கு முடிகின்றன என்று பார்ப்பது அவசியம். தொடர்பற்றதாகக் காணப்படும் ஒரு பகுதியில் இருந்து பிரசங்கிக்க முயற்சி செய்தால் அந்தப் பகுதி சொல்லும் கருத்தையே புரிந்து கொள்ள முடியாது. நமது பிரசங்கமும் குழப்பத்தில் போய் முடிந்துவிடும்.

**ஆ. அப்பகுதியின் இலக்கிய அம்சத்தை** (Literary style) **ஆராய வேண்டும்**

அடுத்ததாக நாம் பிரசங்கிக்க எடுத்துக் கொண்டிருக்கும் வேதப்பகுதி எத்தகைய இலக்கிய வகையைச் சேர்ந்தது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். வேதத்தில் பல்வேறு இலக்கிய வகைகள் காணப்படுகின்றன. அதில் வரலாற்று நூல்கள் இருக்கின்றன. தீர்க்கதரிசன நூல்கள் உள்ளன. போதனைகளை அளிக்கும் பகுதிகளைப் பார்க்கிறோம். உவமைகளைக் காண்கிறோம். சங்கீதங்களைப் பார்க்கிறோம். இந்த முறையில் பலவிதமான இலக்கியங்களைக் கொண்டதாக வேதம் அமைந்திருக்கின்றது. ஆகவே, வேத போதனைகளை சரியாக விளங்கிக் கொள்ள பிரசங்கத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் வேதப்பகுதியின் இலக்கிய அமைப்பு பற்றிய அறிவு அவசியமாகிறது. அது உவமையா? வரலாறா? தீர்க்கதரிசனமா? சங்கீதமா? அடையாள மொழியா? என்று கேள்வி எழுப்பி பிரசங்கப்பகுதி எந்த இலக்கிய-வகையைச் சேர்ந்தது என்று தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு தீர்மானித்துக் கொண்டபிறகுதான் அந்தப் பகுதியை விளங்கிக் கொள்ளப் பயன்படுத்த வேண்டிய விதிமுறைகளைப் பயன்படுத்தி அதைப் படிக்க ஆரம்பிக்க வேண்டும். உதாரணத்திற்கு ஒரு பகுதி உவமையாக இருப்பின் அது உவமை என்பதை அறிந்து கொண்டபின் அதன் போதனைகளை ஆராய முற்பட வேண்டும். உவமையாக அமைந்து காணப்படும் ஒரு வேதப்பகுதிக்கு நாம் எழுத்துபூர்வமாக ஒருபோதும் விளக்கம் கொடுக்க முடியாது. முதலில் உவமையின் மூலம் முக்கியமாகப் போதிக்கப்படும் சத்தியம் என்ன என்பதை அறிய வேண்டும். உவமையின் எல்லாப் பகுதிகளுக்கும் பொருள் கொடுக்க முயற்சி செய்யக்கூடாது.

இதே முறையில்தான் தீர்க்கதரிசனமாக அமைந்திருக்கும் வேதப்பகுதிகளும், வெளிப்படுத்தல் நிருபமும் அநேக அடையாள மொழிகளைக் (Symbolical Language) கொண்டிருக்கின்றன. இவற்றை நாம் எழுத்துபூர்வமாக விளங்கிக் கொள்ள முடியாது. அடையாள மொழிகளைப் புரிந்து கொள்வதற்குப் பயன்-படுத்த வேண்டிய விதிகளைப் பயன்படுத்தி அவற்றின் மூலம் போதிக்கப்படும் சத்தியத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். சங்கீதங்களும், நீதிமொழியும் பாடல் இலக்கிய வகையைச்சேர்ந்தவை. ஏசாயா போன்ற தீர்க்கதரிசன நூல்-களிலும் பாடல்களைப் பார்க்கலாம். அந்தப்பகுதிகளைப் பிரசங்கப் பொருளாக எடுத்துக் கொண்டால் அந்த இலக்கியத்தில் காணப்படும் Paralalism என்று அழைக்கப்படும் தன்மையைக் கவனித்துப் படிக்க வேண்டும். அதாவது, ஒரு வசனத்தில் சொல்லப்பட்டுள்ள கருத்து அடுத்த வரியில் வித்தியாசமான விதத்தில் சொல்லப்பட்டிருக்கும். ஒரே கருத்து இரண்டு வரிகளில் வெவ்வேறு விதத்தில் சொல்லப்படுவதே Paralalism.

வரலாற்றம்சங்களைக் கொண்டு காணப்படும் பகுதிகளை அவை வரலாறு என்ற எண்ணத்தோடு ஆராய்ந்து படிக்க வேண்டும். வரலாறு நடந்து முடிந்த நிகழ்ச்சி. அப்போஸ்தலர் நடபடிகள் வரலாறு என்பதை உணராது அலட்சியம் செய்ததால்தான் தவறான பெந்தகொஸ்தே போதனையான "ஆவியின் அபிஷேகம்" உருவானது. வரலாற்று நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு. ஆகவே, பிரசங்கிக்கப்போகும் வேதப்பகுதிகளை முதலில் அவை எத்தகைய இலக்கிய வகையைச் சேர்ந்தவை என்று ஆராய மறக்கக்கூடாது.

## இ. இலக்கண அமைப்பு

அடுத்ததாக பிரசங்கிப்பதற்கு எடுத்துக்கொண்டுள்ள வேதப்பகுதியின் இலக்கணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அப்பகுதியை ஆராய வேண்டும். இலக்கணமில்லாத மொழிகள் உலகத்தில் இல்லை. வேத போதனைகள் அத்தனையும் நமது மொழியில் பல்வேறு இலக்கியங்களாக, இலக்கணக் கட்டுக்கோப்போடு தரப்பட்டுள்ளன. ஆகவே, இலக்கணத்தை நாம் அலட்சியப்படுத்த முடியாது.

பிரசங்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள வேதப்பகுதியை ஆராயும் போது, அதன் வசனங்களில் காணப்படும் வார்த்தைப் பிரயோகங்களையும், வசனங்களை ஒன்றோடொன்று தொடர்புபடுத்தும் வார்த்தைகளையும், அவை பயன்படுத்தப்பட்டிருக்கும் முறையையும், கவனத்தில் கொள்வது அவசியம். அத்தோடு அந்தப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கும் உண்மைகள் கடந்த காலத்தைச் சேர்ந்தவையா, நிகழ்காலத்தோடு சம்பந்தமுடையவையா அல்லது எதிர்காலத்தைக்குறிப்பவையா என்று ஆராய்வதும் அவசியம். இதையெல்லாம் அறிந்துகொள்ள வசனங்களைத் தொடர்புபடுத்துகின்ற வினைச் சொற்கள், இடைச்சொற்கள் (Particles), தெரிநிலை வினைகள், விகுதிகள் (Termination), உருபுகள் ஆகியவற்றில் முக்கிய கவனம் செலுத்தி, அவை எந்தவிதத்தில் வசனங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

புதிய ஏற்பாடு எழுதப்பட்டுள்ள கிரேக்க மொழியில் இந்த இடைச்சொற்கள் (Particles) ஒரு பொருளை அழுத்தத்தோடு வலியுறுத்திச் சொல்லுவதற்காக அடிக்கடி பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. அவற்றை நாம் கவனிக்காமல் விட்டுவிட்டால் அவை காணப்படும் வேதப் பகுதியின் போதனையைத் தெளிவாக அறிந்து கொள்ள முடியாது. உதாரணத்திற்கு யோவான் 4:4-ல் "அவர் சமாரியா நாட்டின் வழியில் போக வேண்டியதாயிருந்தபடியால்" என்றிருப்பதை வாசிக்கிறோம். எழுத்துபூர்வமான மொழிபெயர்ப்பின்படி அவர் சமாரியா நாட்டின் வழியில் "நிச்சயம்" போகவேண்டியிருந்தபடியால் என்றிருக்க வேண்டும். ஏனெனில், இந்த வசனத்தில் கிரேக்க மொழியில் dei (particle of necessity) என்ற இடைச்சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது இயேசு இந்தப் பகுதிக்கு கர்த்தருடைய பாராமரிப்பின்படி நிச்சயமாக போக வேண்டியிருந்தது என்ற சத்தியத்தை வெளிப்படுத்துகிறது. இந்த இடைச்சொல் தமிழ் மொழி பெயர்ப்பில் "போகவேண்டியிருந்தபடியால்" என்ற வார்த்தையில் மறைந்து காணப்படுகின்றது. இதேவிதமாகத்தான் மாற்கு 8:31-லும் இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டு, இயேசு நிச்சயமாக சிலுவையில் மரிக்க வேண்டியிருந்தது என்ற சத்தியத்தை விளக்குகிறது. ஆனால், தமிழ் மொழிபெயர்ப்புகளில் எல்லா இடங்களிலும் இந்த அழுத்தம் வெளிப்படையாகத் தெரியாமல் மொழிபெயர்க்-

கப்பட்டிருக்கின்றது. உதாரணத்திற்கு லூக்கா 19:4-ஐயும் கவனிக்கவும். இடைச் சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கும் விதத்தைக் கவனித்துப் படிப்பது வேத சத்தியங்களைத் தெளிவாக விளங்கிக் கொள்ள உதவும்.

அத்தோடு, அந்த வேதப்பகுதியில் காணப்படும் தன்வினை (Verb denoting direct action), பிறவினை (Causative verb), செய்வினை (Active verb), செயப்பாட்டு வினைகளுக்கும் (Passive verb) முக்கியத்துவம் கொடுத்து அவை பயன்படுத்தப்பட்டிருக்கும் முறைகளைக் கவனித்துப் படிக்க வேண்டும். ஆனால், ஆகையால், ஆதலால், அன்றியும், ஆகவே, அந்தப்படி, எப்படியென்றால் போன்ற வார்த்தைப் பிரயோகங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கும் விதத்தையும் கூர்ந்து கவனித்தல் அவசியம். அவை வசனங்களைத் தொடர்புபடுத்தி வேதப்பகுதியில் விளக்கப்படும் உண்மைகள் எவ்வாறு தரப்பட்டிருக்கின்றன என்பதை விளங்கிக் கொள்ளத் துணை செய்கின்றன. அத்தோடு சொல்லியலுக்கும் (Etymology) முக்கியத்துவம் கொடுத்து ஒரு சொல் எந்தத் திணை, பால், இடம், வேற்றுமையைக் கொண்டு அமைந்திருக்கின்றது என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். 1 கொரிந்தியர் 13:10-ல் வேதத்தைக் குறிக்கும் "நிறைவானது" என்ற வார்த்தை பொருட்பாலில் (Neuter gender) தரப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தை வேதத்தைத்தான் குறிக்கிறது என்பதைத் தீர்மானிக்க இது எந்தப்பாலில் அமைந்திருக்கிறது என்பதையும் கவனிக்காமல் இருக்க முடியாது.

மார்டின் லொயிட் ஜோன்ஸ் என்ற பிரசங்கி எபேசியர் 2:4-ன் "தேவனோ" என்ற ஒரு வார்த்தையைப் பயன்படுத்தி செய்த ஒரு பிரசங்கத்தை எடுத்துக் கொள்வோம். (ஒரு வார்த்தையைப் பயன்படுத்தி அவர் பிரசங்கித்திருந்த போதும், பிரசங்கம் அந்த வார்த்தை காணப்படும் முழு வேதப்பகுதியின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது.) இந்த வார்த்தை ஆங்கில வேதத்தில் "But God" என்று இருக்கின்றது. But (ஆனால்) என்ற வார்த்தை தமிழ் வேதத்தில் "தேவனோ" என்ற வார்த்தைக்குள் அடங்கியிருக்கிறது. "ஆனால் தேவன்" என்றும் அதனைத் தமிழில் எழுதலாம். இந்த இடைச்சொல் இந்தப்பகுதியில் மிகவும் முக்கியமானது. பார்ப்பதற்கு சாதாரணமாகத் தோன்றும் இந்த வார்த்தை அதற்கு முன்னால் காணப்படும் 3 வசனங்களை அதற்குப் பின்னால் வரும் வசனங்களோடு இணைக்கின்றது. அத்தோடு, முன்னால் உள்ள வசனங்களில் கூறப்பட்டுள்ள உண்மைகளை வலியுறுத்தி விளக்குவதற்கும் உறுதுணையாக இருக்கின்றது. எபேசியர் 2:1-3 வரையுள்ள வசனங்கள் விசுவாசிகள் எத்தகைய மோசமான பாவிகளாக இரட்சிப்பை அடையுமுன் இருந்திருக்கிறார்கள் என்பதை விளக்குகின்றன. 4-ம் வசனம் அத்தகைய பாவிகளைக் கர்த்தர் எப்படிக் கரைசேர்த்தார் என்பதை விளக்க ஆரம்பிக்கிறது. இவ்வசனத்தில் "ஆனால்" என்ற இடைச்சொல் வசனங்களை இணைக்கும் வெறும் இடைச்சொல்லாக மட்டும் இல்லாமல் மனிதன் பாவத்தில் மூழ்கிக் கரை சேர முடியாத நிலையில் இருந்தபோது கர்த்தர் இடைப்பட்டு அவனை எப்படிக் கரைசேர்த்தார் என்பதையும் அழுத்திச் சொல்லுவதற்கு உதவுகிறது. இந்த வார்த்தையை நாம் அலட்சியப்படுத்தினால் இந்தப்பகுதி போதிக்கும் சத்தியத்தின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளாமல் போய்விடும். மார்டின் லொயிட் ஜோன்ஸ் இலக்கணத்துக்கு முக்கியத்துவம் கொடுத்ததால் இந்தப் பகுதியில் "ஆனால்" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருந்த விதத்தைப் புரிந்து கொண்டு இப்பகுதி போதிக்கும் சத்தியத்தை அருமையாக பிரசங்கித்திருந்தார். அந்தப் பிரசங்கமும் பலராலும் பாராட்டப்பட்ட, ஆசீர்வதிக்கப்-

பட்ட ஒரு பிரசங்கமாக இருந்தது.

எடுத்துக் கொண்டுள்ள வேதப்பகுதியின் இலக்கண அமைப்பை ஆராயும் போது எத்தகைய அழுத்தத்தோடு அதன் கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதை அறிந்து கொள்ள முடியும். அப்பகுதியின் இலக்கண அமைப்பைக் கவனிக்காவிட்டால் அந்தப் பகுதி தரும் போதனையையே நாம் மாற்றிச் சொல்லிவிடக்கூடிய ஆபத்து உண்டு. உதாரணத்திற்கு எபேசியர் 1:3-14 வரையுள்ள வசனங்களை மறுபடியும் பார்ப்போம். அதில் சொல்லப்படும் இரட்சிப்பின் ஆசிர்வாதங்கள் கடந்த காலத்தில் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு செலுத்திய பலியின் காரணமாக இப்போது நிகழ்காலத்தில் விசுவாசியாக இருந்து நாம் அனுபவிக்கும் பலன்களை விளக்குகின்றன. அத்தோடு, அந்தப்பகுதியில் எதிர்காலத்தில் நாம் பரலோகத்தில் அனுபவிக்கப் போகும் ஆசீர்வாதங்களும் சுட்டிக் காட்டப்படுகின்றன. "பரிசுத்த ஆவியினால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்" என்று 13-ம் வசனத்தில் கூறப்பட்டுள்ள உண்மை ஏற்கனவே நம்மில் நடந்து முடிந்து விட்டதும், இப்போது நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறதுமான ஆவியின் ஆசீர்வாதத்தைச் சுட்டிக்காட்டுகிறது. "விசுவாசிகளானபோது . . . பரிசுத்த ஆவியினால் முத்திரை போடப்பட்டீர்கள்" என்ற வார்த்தைப்பிரயோகத்தில் "விசுவாசிகளானபோது" என்பதற்கும், "முத்திரை போடப்பட்டீர்கள்" என்பதற்கும் இடையில் இலக்கணத்தின்படி கால இடைவெளி இருப்பதாகவும், விசுவாசிகளானவுடன் கிறிஸ்தவர்கள் ஆவியின் முத்திரையை உடனேயே அடைவதில்லை என்றும் ஒரு போதனை இருக்கிறது. இந்தப்போதனை தவறானது. இது தவறா? சரியா? என்று இலக்கணம் தெரியாமல் நாம் ஒரு தீர்மானத்திற்கு வரமுடியாது. உண்மையில் இலக்கணப்படி அப்படி ஒரு இடைவெளி அந்த வார்த்தைகளுக்கிடையில் இல்லை. விசுவாசிகளானபோது நமக்குக் கிடைத்த அனுபவத்தையே அந்த வார்த்தைகள் விளக்குகின்றன.

வேதத்தில் பல பகுதிகளில் காணப்படும் உணர்ச்சிக் குறிப்பு வினாக்களையும் (Rhetorical questions) நாம் கவனத்தில் எடுப்பது அவசியம். 1 கொரிந்தியர் 12:29, 30 ஆகிய வசனங்கள் இதற்கு நல்ல உதாரணம். இங்கே பவுல் கேட்கும் கேள்விகளுக்கு "இல்லை" என்ற பதில் எதிர்பார்க்கப்படுகிறது. இதை விளங்கிக் கொள்ளாமல் இந்தப் பகுதியின் போதனையை அறிந்து கொள்ள முடியாது.

மேலும் வேதத்தில் பல போதனைகள் கட்டளைகளாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன (Imperative). பிரசங்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் பகுதியில் காணப்படும் வசனங்களையும், அவற்றின் இலக்கண அமைப்பையும் ஆராய்வதன் மூலம் மட்டும்தான் அவற்றை நாம் அறிந்து கொள்ள முடியும். அந்தந்த வேதப்பகுதிகளின் இலக்கண அமைப்பை ஆராயாமல் வேதபோதனைகளை விளங்கிக்கொள்ளவோ, பிரசங்கம் செய்யவோ முடியாது. இலக்கணத்தை அலட்சியப்படுத்தினால் வேதம் நமக்குப் புரியாத நூலாக இருந்துவிடும். ஆகவே, இலக்கணத்துக்கு மதிப்புக் கொடுத்து பிரசங்கப்பகுதியை வாசித்து விளங்கிக் கொள்வது அவசியம். இதற்கெல்லாம் நேரத்தை செலவிட்டுப் படிக்க பிரசங்கி ஒருபோதும் தயங்கக்கூடாது.

### ஈ. மொழிக்கு அழகு சேர்க்கும் அணிகள்

உலகத்தின் எல்லா மொழிகளுமே அணிகளையும், பழமொழிகளையும் கொண்டு எழுத்தை அழகு செய்கின்றன. அதேபோல் வேதமும் தன்னுள் அது எழுதப்பட்ட காலத்து மொழிக்குரிய பழமொழிகளையும், பல அணிவகை-

களையும் கொண்டு காணப்படுகின்றது. உவமையணி, உருவக அணி, வஞ்சப்புகழ்ச்சியணி, உயர்வு நவிற்சி அணி போன்றவற்றை வேதம் முழுவதும் பார்க்கலாம். இவை மொழியையும், வேதத்தையும் அழகுபடுத்துவதோடு வேதசத்தியங்களைத் தெளிவாக விளங்கிக் கொள்ளத் துணைபுரிகின்றன. ஆகவே, பிரசங்கி தான் பிரசங்கிப்பதற்கு எடுத்துக் கொண்டுள்ள வேதப்பகுதி-களில் காணப்படும் அணிகள் பயன்படுத்தப்பட்டிருக்கும் விதத்தை ஆராய்ந்து விளங்கிக் கொள்ள வேண்டும்.

உதாரணத்திற்கு பவுலினுடைய எழுத்துக்களில் பல இடங்களில் வஞ்சப்-புகழ்ச்சியணி (Irony) பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். 1 கொரிந்தியர் 14-ம் அதிகாரத்தில் இந்த அணி அழகாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதை அடையாளம் கண்டு கொள்ளாவிட்டால் இந்தப்பகுதியை நாம் தவறாக விளங்கிக் கொள்ள நேரிடும். 1 கொரிந்தியர் 14:12-ல் அந்நியபாஷை பேசுகிறவன் அதற்கு விளக்கம் கிடைப்பதற்காக ஜெபிக்க வேண்டும் என்று பவுல் சொல்லுகிறார். ஏனெனில் அந்நியபாஷை ஒரு மொழியில் இருப்பதால் அதைக் கேட்பவர்கள் புரிந்து கொள்ள அதற்கு விளக்கம் சொல்லப்பட வேண்டும். இதை மேலும் விளக்கும் பவுல் அடுத்த வசனத்தில் தான் அந்நியபாஷையில் பேசநேரிட்டால் அது ஆவியானவரால் தன்னில் நடக்கிற காரியமாக இருந்தாலும் அதற்குரிய விளக்கம் தனக்கு இல்லாமலிருக்கும் என்கிறார். பேசப்பட்ட பாஷையின் மூலம் சொல்லப்பட்ட கருத்து விளங்காவிட்டால் அதனால் ஒரு பிரயோஜனமும் இல்லை என்கிறார் பவுல். இதை விளக்குவதற்காக 15-ம் வசனத்தில், "இப்படியிருக்க செய்ய வேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன், நான் ஆவியோடும் பாடுவேன்; கருத்தோடும் பாடுவேன்" என்கி-றார். இந்த வசனத்தில் பவுல், தான் அந்நிய பாஷையில் விண்ணப்பம் செய்யப் போவதாகவும், பாடப்போவதாகவும் சொல்லவரவில்லை. இது வஞ்சப்-புகழ்ச்சியணி. இதில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது ஒரு கருத்தும், ஆழ்ந்து சிந்திக்கும்போது நேர் எதிர்மாறான பொருளும் தொனிக்கும் வகையில் எழுதப்பட்டிருக்கிறது. இவ்வசனத்தில் பவுல், தான் எதைப்பேசினாலும் கருத்தில்லாமல் (பொருள் இல்லாமல்) பேசமாட்டேன் என்கிறார். இந்த வசனத்தில் வஞ்சப்புகழ்ச்சியணி பயன்படுத்தப்பட்டிருப்பதை அறியாத பெந்தகொஸ்தே இயக்கத்தைச் சேர்ந்தோர் பவுல் சொல்வது போல் நாம் ஆவியிலும் விண்ணப்பிக்கலாம், ஆவியிலும் பாடலாம் என்ற தவறான போதனையை உருவாக்கியிருக்கிறார்கள். உண்மையில் 16-17 ஆகிய வசனங்கள் நான் சொல்வதை மேலும் உறுதிப்படுத்துகின்றன. அந்த வசனங்களில் பவுல், "நீ சபையில் ஸ்தோத்திரம் பண்ணும்போது (ஜெபம் செய்யும்போது) ஒருவருக்-கும் விளங்காத மொழியில் பேசினால் மற்றவர்கள் எப்படி ஆமேன் சொல்ல முடியும், அவர்கள் அதனால் எந்தப்பயனும் அடைய மாட்டார்கள்" என்கிறார். இதே முறையில் இந்த அணி பின்வரும் வசனங்களிலும் பயன்படுத்தப்பட்-டிருக்கிறது: நியாயாதி. 10:14; 1 இராஜா. 18:27; 22:15; மாற்கு 7:9; 1 கொரி.4:8.

1 கொரிந்தியர் 13:1-ல் உயர்வு நவிற்சி அணி பயன்படுத்தப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இங்கே பவுல் "தூதர் பாஷை" என்று சொல்வது இல்லாததை இருப்பதுபோல் உயர்த்திப் பேசும் உயர்வு நவிற்சி அணி. இதன் மூலம் பவுல், நான் எத்தனை பெரிய பாஷைகளைப் பேசினாலும் என்னிடம் அன்பு இல்லா-விட்டால் ஒரு பயனுமில்லை என்ற உண்மையை விளக்குகிறார்.

இதைத்தவிர உவமைகளும் (Simile), உருவகங்களும் (Metaphor) வேதத்தில் பயன்படுத்தப்பட்டிருப்பதை பல இடங்களிலும் பார்க்கிறோம். உவமைகளுக்கு உதாரணங்களாக மத்தேயு 13; 24 ஆகிய அதிகாரங்களை எடுத்துக் கொள்ளலாம். இயேசு இப்பகுதிகளில் உவமைகளைப் பயன்படுத்தி தேவராஜ்யத்தைக் குறித்த சத்தியங்களை விளக்கியுள்ளார். யோவானின் சுவிசேஷத்தில் இயேசு தன்னை ஜீவ அப்பமாகவும், கதவாகவும், மேய்ப்பனாகவும், திராட்சைச் செடியாகவும், ஒளியாகவும் உருவகப்படுத்திப் பேசியிருப்பதைப் பார்க்கிறோம். பிரசங்கத்திற்கெடுத்துக்கொள்ளப்பட்ட பகுதியில் இவை காணப்படுமானால் அவற்றை நாம் கவனத்தில் எடுத்து ஆராய்ந்து விளங்கிக் கொள்வது அவசியம்.

**உ. அப்பகுதியின் மையப் போதனை** (Central message)

அடுத்தபடியாக பிரசங்கிக்க எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள வேதப்பகுதி போதிக்கும் மையக்கருத்து, அல்லது அதன் முதன்மையான போதனை என்ன என்பதை ஆராய்தல் அவசியம். பிரசங்கப் பகுதி எப்போதும் ஒரு மையக்கருத்தை வலியுறுத்துவதாக இருக்க வேண்டும். அந்த மையக்கருத்து பிரசங்கிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள பகுதியில் தெளிவாகக் காணப்பட வேண்டும். இன்று 90% தமிழ்ப் பிரசங்கிகள் பிரசங்கத்திற்காக ஒரு வசனத்தைத் தெரிவு செய்து கொண்டு, அந்த வசனத்தை ஆராய்ந்து பார்க்காமல் இதைத்தான் அந்த வசனம் சொல்லுகிறது என்று தாம் நினைப்பதை அந்த வசனத்திற்குள் திணிப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஆதியாகமம் 4:1-5 வரையுள்ள வசனங்களைப் பாருங்கள். இந்த வசனங்களில் அடிக்கடி “காணிக்கை” என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருப்பதைப் பார்த்து இந்தப்பகுதி காணிக்கை கொடுப்பதைப் பற்றித்தான் பேசுகிறது என்று தீர்மானித்து, இந்த வசனங்களைப் பயன்படுத்தி காணிக்கை என்ற தலைப்பில் பிரசங்கம் செய்கிற பிரசங்கிகள் அனேகர். இது பிரசங்கிக்கப்போகிற வேதப்பகுதியை ஆராய்ந்து படிக்காததால் ஏற்படுகின்ற விளைவு. ஒரு வேதப்பகுதியின் மையக்கருத்தை அந்தப்பகுதியில் இருந்துதான் பெற்றுக்கொள்ள வேண்டுமே தவிர அதை நாம் அந்தப்பகுதிக்குள் ஒருபோதும் திணிக்கப் பார்க்கக்கூடாது.

ஒரு பிரசங்கத்தில் பல மையக்கருத்துக்கள் இருக்கக்கூடாது. அவை ஒன்றோடொன்று தொடர்பில்லாமல் அமைந்து கேட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு சலிப்பைத் தந்து அவர்களை சிந்திக்கவிடாமல் செய்து விடும். அத்தோடு, பல மையக்கருத்துக்களை அவர்களால் ஒரே நேரத்தில் சுமக்க முடியாமலும் போய்விடும். ஒரே வேதப்பகுதியில் இருந்து கிறிஸ்துவின் பிறப்பு, இறப்பு, மீட்பு, அவருடைய வருகை அனைத்தையும் பிரசங்கத்தில் கொடுக்க முனைந்தால் ஆபத்து. ஒவ்வொரு பிரசங்கமும் எப்போதும் ஒரே ஒரு மையக்கருத்தை மட்டும் போதிப்பதாக இருக்க வேண்டும். அப்போதுதான் அதைக் கேட்பவர்களும் இன்று இந்த சத்தியத்தைத்தான் நான் கேட்டுத் தெரிந்து கொண்டேன் என்ற மன அமைதியுடன் போகமுடியும். சிறுவர்களும்கூட அதை இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருக்கும். ஓய்வுநாளில் நான் சபையில் இருந்து வீடு திரும்பும்போது என்னுடைய பிள்ளைகளிடம் அன்றைய பிரசங்கத்தின் மையப் போதனை என்ன என்று கேட்பது வழக்கம். பிள்ளைகள் இன்று வளர்ந்துவிட்டாலும்கூட இதைத் தொடர்ந்து செய்து வருகிறேன். பிரசங்கம் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் அந்த மையப்போதனையை அவர்கள் விளங்கிக் கொண்டிருப்பார்கள்.

*முதலில் நாம் பார்த்த எபேசியர் 1:3-14-ஐ மறுபடியும் எடுத்துக் கொண்டால் அதன் மையப் போதனையாக "கிறிஸ்து இலவசமாகத் தந்துள்ள இரட்சிப்பின் ஆசீர்வாதங்கள்" இருப்பதைக் காண்கிறோம். 3-ம் வசனம் அந்த மையக்கருத்தை விளக்குவதாக இருக்கிறது. அந்தப் பகுதியின் ஏனைய வசனங்கள் ஒவ்வொன்றாக நமது இரட்சிப்பின் பலன்களைப் படிமுறையாக விளக்குகின்றன. மையக் கருத்தைச் சுற்றியே அந்தப்பகுதியில் காணப்படும் ஏனைய உண்மைகளும் அமைந்திருக்கின்றன. அங்கே ஒன்றுக்கொன்று முரண்பாடானதும், ஒன்றோடொன்று தொடர்பில்லாததுமான சத்தியங்களை நாம் பார்க்க முடியாது. இந்தப் பகுதியில் காணப்படும் சத்தியங்களை ஒன்றுக்கு மேற்பட்ட பிரசங்கங்களின் மூலமாக பிரசங்கிக்க முடிந்தாலும் முழுப்பகுதியும் ஒரே மையப் போதனையைக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இந்த முறையில்தான் பிரசங்கத்திற்கு நாம் எடுத்துக்கொள்ளும் எந்த வேதப்பகுதியும் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.*

*இன்னொரு உதாரணமாக யோவான் 3:1-18 வரையுள்ள வசனங்களை எடுத்துக் கொண்டால் அப்பகுதியின் முக்கிய போதனையாக "மறுபிறப்பு" இருக்கின்றது. மறுபிறப்பின் அவசியத்தையே நிக்கொதேமு இயேசுவை இரவில் சந்தித்துப் பேசிய நிகழ்ச்சி மூலம் அறிந்து கொள்ளுகிறோம். அதேபோல் யோவான் 4:1-26-ஐ எடுத்துக் கொண்டால் "ஜீவத்தண்ணீரான நித்திய ஜீவன்" அந்தப்பகுதியின் முக்கிய போதனையாக, பிரசங்கப் பொருளாக இருக்கின்றது. பிரசங்கத்திற்கு எடுத்துக்கொண்டுள்ள வேதப்பகுதியை கவனத்தோடு ஆராய்ந்து படிக்கும்போது அதன் முக்கிய போதனையைக் கண்டு கொள்ளலாம். சில பகுதிகளில் அவை தெளிவாகப் புலப்படும். அப்படித் தெளிவாகத் தெரியாமல் இருக்கும் பகுதிகளை ஆழமாகப் படிப்பதன் மூலம் அப்பகுதிகளின் பிரதான போதனையைக் கண்டுகொள்ளலாம். எது எப்படியிருந்தபோதும் எந்தப் பகுதியை பிரசங்கிக்க எடுத்துக் கொண்டாலும் அந்தப்பகுதியின் பிரதான போதனையை கண்டுகொள்ள வேண்டியது பிரசங்கத்திற்கு மிகவும் அவசியம்.*

## முடிவாக

*இதுவரை நாம் பார்த்து வந்துள்ள பிரசங்கம் தயாரிப்பதற்கான வழிமுறைகளை வாசித்ததும், இதையெல்லாம் செய்வதற்கு நமக்கெங்கே நேரம் கிடைக்கப் போகிறது என்று சிலர் எண்ணக்கூடும். வேறுசிலர், வாசிப்பதற்கு இது நன்றாய்த்தான் இருக்கிறது, ஆனால் நடைமுறைக்கு உதவாது என்று அங்கலாய்ப்பார்கள். இத்தகைய சோம்பேரித்தனமான போக்கைக் கொண்டிருப்பவர்களாலும், பிரசங்க ஊழியத்தைக் குறித்த அலட்சிய மனப்பான்மை கொண்டவர்களாலும்தான் பிரசங்க ஊழியம் இன்று தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் தலைகுனிந்து நிற்பதோடு வல்லமையான ஆத்மீக வாழ்வளிக்கும் பிரசங்கங்களுக்கும் இடமில்லாமல் இருக்கிறது. கஷ்டப்பட்டு உழைத்துப் பிரசங்கிப்பதில் வாஞ்சையுள்ளவர்களை இந்த வழிமுறைகள் பயமுறுத்தாது; மாறாக உற்சாகப்படுத்தி அவர்களை மேலும் பாடுபட வைக்கும். பெரிய படிப்பும், பட்டமும் பெற்றவர்களாக அவர்கள் இல்லாதிருந்தாலும் நேரத்தைப் பயன்படுத்தி நேர்மையுடன் உழைத்துப் பிரசங்கிக்க வேண்டும் என்ன நோக்கத்தைக் கொண்டவர்களாக இருப்பார்கள். அப்படியானவர்களே இன்று திருச்சபைகளுக்குத் தேவையானவர்கள். அவர்கள் மட்டுமே ஆத்துமாக்களின் வளர்ச்சிக்கு உதவக்கூடியவர்கள்.*

# பின்நவீனத்துவமும், கிறிஸ்தவமும்

கிறிஸ்தவம் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு வரலாற்றில் வளர்ந்த ஒரு வாழ்க்கை நெறி. வரலாறு, சமுதாய வளர்ச்சியையும், சமுதாய நிகழ்ச்சிகளையும் படம்பிடித்துக் காட்டுவதாக இருக்கிறது. உலக சமுதாயங்கள் மெய்யான விடுதலையை எதன் மூலம்? எப்படி? அடைய முடியும் என்பதைக் காட்டுவதே கிறிஸ்தவம். ஆகவே, கிறிஸ்தவர்களும், கிறிஸ்தவ சபைகளும் தாங்கள் வாழும் சமுதாயம் எந்த விதத்தில் சிந்திக்கிறது? எந்தப்போக்கில் போகிறது? என்ற கேள்விகளைக் கேட்காமல் இருந்துவிட முடியாது. அப்படி சமுதாயத்தின் போக்கை அறிந்துகொள்வதில் அலட்சியம் காட்டினால் சுவிசேஷத்தை நாம் பயனுள்ள முறையிலும், தெளிவாகவும் மக்களுக்கு ஒருபோதும் எடுத்துவிளக்க முடியாது.

கிறிஸ்தவத்தின் அடிப்படை செய்தியில் எவரும் எந்தவிதமான மாற்றத்தையும் ஒருபோதும் ஏற்படுத்த முடியாது. சமுதாயத்தின் மாற்றத்திற்கேற்றவிதத்தில் சுவிசேஷத்தை மாற்றி அமைக்கிறவன் உண்மையான பிரசங்கியாக இருக்க முடியாது. ஆனால், சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களை உன்னிப்பாகக் கவனித்து, அம்மாற்றங்களுக்கு மத்தியில் சுவிசேஷம் மட்டுமே கொடுக்கக்கூடிய நித்திய மாற்றத்தையும், சமுதாய விடுதலைக்கான வேதத்தின் அடிப்படைப் போதனைகளையும் சமுதாய மக்கள் புரிந்து கொள்ளும்படி தெளிவாக எடுத்துச் சொல்லுவதே ஒரு பிரசங்கியின் போதக சமர்த்து.

உலக சமுதாயத்தின் இன்றைய போக்கான பின்நவீனத்துவம் (Post-modernism) கிறிஸ்தவ சமுதாயத்தில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறதா? அப்படிப் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தால், அந்தப் பாதிப்புகள் யாவை என்பதை ஆராய்ந்து, பின்நவீனத்துவத்தை எப்படி வேதபூர்வமாக எதிர்கொண்டு வெற்றி காண்பது என்பதை இந்த ஆக்கத்தின் மூலம் நாம் பார்க்கப் போகிறோம்.

முதலில் நவீனத்துவம் (Modernism), பின்நவீனத்துவம் ஆகிய வார்த்தைகளுக்கு நாம் பொருளை அறிந்து கொள்ள வேண்டும். பின்நவீனத்துவம் என்ற பதம் சமூகவியல் சிந்தனையாளர்களால் இன்று அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வருகின்ற ஒரு வார்த்தை. அனேக கிறிஸ்தவர்கள் இந்த வார்த்தையை இதுவரை கேட்டிராமலும், கேள்விப்பட்டிருந்தால் அதன் பொருள் தெரியாமலும் இருக்கலாம். ஆகவே, முதலில் இவ்வார்த்தையின் பொருளை அறிந்து கொள்வது அவசியம்.

## நவீனத்துவமும், பின்நவீனத்துவமும்

பின்நவீனத்துவம் என்ற வார்த்தையைப் பார்த்தால் அதன் முன்னால் உள்ள "பின்" என்ற வார்த்தை பின்நவீனத்துவத்திற்கு முன்னால் "நவீனத்துவம்" இருந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுக்காட்டுவதை அறியலாம். நவீனத்துவம், பின்நவீனத்துவம் ஆகிய இந்த இரண்டு வார்த்தைப் பிரயோகங்களும் சமூகவியல் சிந்தனையாளர்களால் பயன்படுத்தப்பட்டுவருகின்றன. இவ்வார்த்தை-

களுக்கு கிறிஸ்தவர்கள் உருவம் கொடுக்கவில்லை. மேலைத் தேசத்து ஐரோப்பிய சமூகவியல் சிந்தனையாளர்கள் (Sociologists) தாங்கள் வாழும் சமுதாயத்தின் போக்குகளை ஆராய்ந்து அவற்றின் வளர்ச்சியைப் படம்பிடித்துக் காட்டப் பயன்படுத்துகின்ற வார்த்தைப்பிரயோகங்களே இவை. ஆகவே, நவீனத்துவம், பின்நவீனத்துவம் ஆகிய பதங்கள் மேலைத்தேய சமுதாயத்தின் சிந்தனை-களையும், போக்குகளையும் விவரிக்கின்றன. இந்நூற்றாண்டில் தொழில் நுட்பசாதனங்களின் அதிவேக வளர்ச்சியால் செய்திப்பரவலும், மேலைத்தேய, கீழைத்தேய மக்கள் தொடர்பும் பேரளவுக்கு, பெரும்பாலும் பெருநகர்ப்புறங்-களில் வளர்ந்திருப்பதால் பின்நவீனத்துவம் கீழைத்தேய சமுதாயங்களிலும் தனது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஆகவே, பினநவீனத்துவத்திற்கும் தமிழ் சமுதாயத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று கூறி அதை நாம் நிராகரித்துவிட முடியாது. ஏற்கனவே கிறிஸ்தவர்கள் அல்லாத தமிழ் இலக்கிய விமரிசகர்கள் பின்நவீனத்துவம் என்ற வார்த்தையைப் பயன்படுத்த ஆரம்பித்-துள்ளதோடு, அதன் மூலம் தமிழ் சமுதாயத்தைக் கவரவும் முனைந்துள்ளனர். இதை முக்கியமாக மேலைத்தேய தமிழர் மத்தியில் பார்க்கலாம். பிரான்சில் இருந்து வெளிவரும் தமிழ் பத்திரிகையான எக்சில் (Exile) மற்றும் கனடாவில் இருந்து வெளிவரும் சில தமிழ்ப் பத்திரிகைகளிலும் பின்நவீனத்துவத்தின் வாடையை அதிகமாகவே பார்க்க முடிகின்றது.

## நவீனத்துவம்

முதலில் நவீனத்துவத்தை ஆராய்வோம். டொக்டர் ரொபட் லேத்தம் என்பவர் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் நவீனத்துவம் 1700-களில் ஆரம்பித்து 20ம் நூற்றாண்டின் முக்கால் பாகங்கள்வரைக் காணப்பட்டதாகக் கூறுகிறார். அதாவது 1975 வரை என்று கூறலாம். இந்தக் காலப்பகுதியின் சிந்தனைப் போக்கை சமூகவியல் சிந்தனையாளர்கள் அறிவொளிக்காலம் (Enlighten-ment) என்று அழைக்கிறார்கள். இக்காலப்பகுதியில் மனிதனுடைய முன்-னேற்றத்தைக் குறித்து அதிக எதிர்பார்ப்பு காணப்பட்டது. கிறிஸ்தவ வேதம் விளக்கும் உலகக் கண்ணோட்டத்தை நவீனத்துவம் நிராகரித்தது. மனிதன் தனது புலன்களைப் பயன்படுத்தி அறிந்து கொள்ளும் காரியங்களின் அடிப்-படையில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை நிரூபிக்கலாம் என்பது நவீனத்துவத்-தின் நம்பிக்கையாக இருந்தது. ஆனால், கிறிஸ்தவ வேதம் தனது நம்பிக்கை-களுக்கு விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளில் தங்கியிருக்கவில்லை. அது விஞ்-ஞானத்துக்கு புறம்பே இருந்து எழுந்த நம்பிக்கையாக இருந்தது. அறிவொளிக்-காலத்தின் முக்கிய நபர்களில் ஒருவராக இருந்த இமானுவேல் கான்ட் (Immanuel Kant 1724-1804) மனிதனுடைய புலன்களின் கண்டுபிடிப்பு-களாலேயே விஞ்ஞான அறிவு ஏற்படுகின்றது என்றார். இத்தகைய சிந்தனைப் போக்கு, எதுவும் மனிதனுடைய புலன்களின் அனுபவத்தாலேயே உறுதியாக்-கப்பட வேண்டும் என்ற எண்ணத்தை சமுதாயத்தில் வளர்த்து மனித புலன்களின் அனுபவத்திற்கு அப்பாற்பட்ட, இயற்கையை மீறிய விளக்கங்கள், செயல்கள் அனைத்தையும் நிராகரிக்கும் போக்கை சமுதாயத்தில் உருவாக்கியது. இந்த சிந்தனைப் போக்கைப் பின்பற்றியவர்கள் வேதத்தில் நாம் வாசிக்கின்ற அற்புதங்கள், கிறிஸ்துவின் கன்னிப்பிறப்பு, உயிர்த்தெழுதல், கிறிஸ்துவின் தெய்வீகம் ஆகியவற்றை நிராகரித்தார்கள். இங்கிலாந்தில் ஆங்கிலிக்கன் சபைத்தலைவர்கள் மத்தியிலும், நியூசிலாந்தில் 1960-களில் பிரஸ்பிடீரியன் சபைகளிலும் (பேராசிரியர் லோர்ட் கியரிங்) இவை தலைதூக்கி-

யிருந்ததை நினைவு கூறலாம். இந்தப் போக்கு மேலைத் தேசங்களில் மட்டுமல்லாமல் கீழைத்தேசங்களிலும் இருந்திருப்பதைப் பார்க்கலாம்.

இந்தவிதமான நவீனத்துவ சிந்தனை விசுவாசத்தையும், வரலாற்றையும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாததாக விளக்கின. நவீனத்துவக் காலத்தில் விசுவாசம், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்கும், வரலாற்று சாட்சியங்களுக்கும் அப்பாற்பட்டதாக விளக்கம் கொடுக்கப்பட்டது. இவ்வாறு சிந்தித்தவர்கள் வரலாற்றுக் கிறிஸ்தவத்தை முற்றாக நிராகரித்தார்கள். வரலாற்று நிகழ்ச்சிகள் மூலமாக விசுவாசத்தை நிலைநாட்ட முடியாது என்ற சிந்தனைப்போக்கு வரலாற்றுக் கிறிஸ்தவத்தின் அடிப்படை வரலாற்று நிகழ்ச்சிகளான கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை ஏற்றுக் கொள்ள மறுத்தது. அத்தோடு, நவீனத்துவ காலத்தில் காரண காரியங்களின் அடிப்படையிலான மனிதனுடைய சிந்தனைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதால், மனித சிந்தனையால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத எதுவும் நிராகரிக்கப்பட்டது. இதனால் வேதத்தின் தனித்துவமான அதிகாரம் நிராகரிக்கப்பட்டு மனித சிந்தனைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. கிறிஸ்தவமும் மனித சிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆனால், நவீனத்துவத்தைப் போல அது மனித சிந்தனையை தனித்துவமான அதிகாரம் கொண்டதாக விளக்குவதில்லை. மனித சிந்தனை வேதத்தின் அதிகாரத்திற்கும், கிறிஸ்துவின் போதனைகளுக்கும் கட்டுப்பட வேண்டும் என்று கிறிஸ்தவம் விளக்குகிறது.

மனிதனுடைய சிந்தனையின் அதிகாரத்திலும், விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளின் சாட்சியங்களிலும் அதிக நம்பிக்கை வைத்து நவீனத்துவம் செயல்பட்டதால் அது கிறிஸ்தவ சபைகளையும், சமயப்பிரிவுகளையும் பாதித்து லிபரலிசம் (Liberalism) வளரத் துணை புரிந்தது. 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் லிபரலிசம் தனது உச்ச நிலையை அடைந்திருந்ததாக டொக்டர் லேத்தம் கூறுகிறார். இக்காலத்தில் சுவிசேஷ நூல்களின் வரலாற்று சம்பவங்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டு, வரலாற்றுக் கிறிஸ்துவைக் குறித்து அதிக கேள்விகள் எழுப்பப்பட்டன. வேத சம்பவங்கள் அனைத்தும் விஞ்ஞான ஆய்வுகளுக்கும், வரலாற்று ஆய்வுகளுக்கும் உட்படுத்தப்பட்டன. இக்காலத்தில் லிபரலிசம் சபைகளையும், வேதாகமக்கல்லூரிகளையும் அதிகளவுக்குப் பாதித்தன. இந்தியாவிலும், இலங்கையிலும் உள்ள இறையியல் கல்லூரிகளும் இந்தவகையில் லிபரல் கோட்பாடுகளைப் பின்பற்றின. இந்தியாவில் இன்றும் யூனியன் பிபிலிக்கள் செமினரியும் (Union Biblical Seminary), அரசரடி இறையியல் கல்லூரியும் (Arasaradi Theological College, Madurai) மேலும் பல கல்லூரிகளும் லிபரலிசப் போதனைகளையே பின்பற்றி வருகின்றன.

இந்தக் காலத்தில் அடிப்படைக்கோட்பாட்டியக்கம் (Fundamentalism) நவீனத்துவத்திற்கு கிறிஸ்தவம் அளித்த பதிலாக இருந்தது. அடிப்படைக் கோட்பாட்டியக்கம் நவீனத்துவத்தை நிராகரித்தது. லிபரலிசத்திற்கு எதிராக ஜிம் பெக்கர் (J. I. Packer) எழுதிய Fundamentalism and the Word of God என்ற நூலையும், இக்காலத்தில் பிரிட்டனில் டாக்டர் மார்டின் லொயிட் ஜோன்சின் சிறப்பான ஊழியத்தையும் குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஆனால், சுவிசேஷ இயக்கம் (Evangelicalism) இந்தக் காலத்தில் நவீனத்துவத்தின் சில அம்சங்களைத் தன்னுள் சேர்த்துக் கொண்டது வருந்த வேண்டிய காரியம். அடிப்படைக் கோட்பாட்டியக்கத்தின் நல்ல சில அம்சங்களை - மறுபிறப்பு,

பரிசுத்தவாதம், சுவிசேஷ ஊழியம் - இது சேர்த்துக் கொண்டாலும், சுவிசேஷ ஊழியத்தில் வரலாற்றுக் கிறிஸ்தவ விசுவாசத்தைவிட மனிதனுடைய தேவைகளிலேயே அதிக நாட்டம் செலுத்தியது. அதாவது, வேதத்தின் அடிப்படை வரலாற்றுப் போதனைகளிலும், விசுவாச அறிக்கைகள் விளக்கும் கோட்பாடுகளிலும் நாட்டம் காட்டாது, மனிதனுடைய தனிப்பட்ட இரட்சிப்பிலும், அவனுடைய அனேக சுய தேவைகளைப் பூர்த்தி செய்வதிலுமே நாட்டம் கொண்டது.

### பின்நவீனத்துவம்

நவீனத்துவம் பாதிக்கப்பட்டு பின்நவீனத்துவம் உருவாக உலகில் நிகழ்ந்த அனேக சம்பவங்கள் காரணமாக இருந்தன.

பௌதீகவியலில் வளர்ச்சி (Physics) - பௌதீகவியலில் ஏற்பட்ட வளர்ச்சியால் இம்மானுவல் கான்டின் கோட்பாடு சிதறடிக்கப்பட்டது. கான்ட் சரீரம், ஆன்மீகம் என்று இரண்டு வேறுபட்ட பிரிவுகள் இருப்பதாக அனுமானித்தார். பௌதீகவியலில் ஏற்பட்ட வளர்ச்சியால் அந்த அனுமானம் சிதறடிக்கப்பட்டது. விஞ்ஞான அளவுகள், கணக்கியல் ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றங்களும், வளர்ச்சியும் நவீனத்துவத்தைப் பாதித்தன. மொத்தத்தில் பௌதீகவியலின் தத்துவத்திற்கும், மனித சிந்தனைக்கும் ஒரு எல்லையுண்டு என்பதை நிரூபித்தன. நவீனத்துவம் காரண காரிய அடிப்படையிலான மனித சிந்தனையின் வளர்ச்சியில் மட்டுமே நம்பிக்கை கொண்டிருந்தது. அந்நம்பிக்கையை பௌதீகவியல் அசைத்தது. இயற்கை உருவாக்கப்பட்டது; மனித சிந்தனையால் அதைக் கட்டுப்படுத்த முடியாது என்ற எண்ணம் உருவானது.

சமுதாயத்தில் மனித சிந்தனையின் வளர்ச்சியில் (Human reasoning) இருந்த நம்பிக்கை தகர்ந்தது இன்னுமொரு காரணம். இக்காலத்தில் ஏற்பட்ட இரண்டு உலகப்போர்களும், வியட்நாம் போரும், அமெரிக்காவை உலுக்கிய நிக்சனின் வாட்டர்கேட் நிகழ்ச்சியும் மனித வளர்ச்சியிலும், மனித சிந்தனையின் சக்தியிலும் நவீனத்துவம் வைத்திருந்த நம்பிக்கையை வீணாக்கின. இச்சம்பவங்கள் மனிதசிந்தனைகள் மனித குலத்தில் சேதத்தை ஏற்படுத்தி ஆபத்தை விளைவித்ததை சுட்டிக்காட்டின. மனிதகுல வளர்ச்சிக்கு மனித சிந்தனையின் வளர்ச்சி காரணமாக அமையும் என்ற நவீனத்துவத்தின் கோட்பாட்டை இவை தகர்த்து மனிதனின் நம்பிக்கைகளைக் குழைத்தன. மனிதன் அமைதியிழந்து கீழைத்தேய சமயங்களிலும், புத்திக்கு எட்டாத காரியங்களிலும் (Images) அமைதிகாணத் தொடங்கினான். ஹிப்பி இயக்கத்தையும், சமாதான இயக்கங்களையும், பீட்டில்ஸின் ஜோர்ஜ் ஹெரிசன் (George Harrison) போன்றோர் இந்திய சாதுக்களை நாடியலைந்ததையும் நினைவு கூரலாம். போதைப் பொருளிலும் மனிதன் அமைதி காணப்பார்த்தான். இவற்றோடு நியூ ஏஜ் இயக்கமும் (New Age Movement) தோன்றியது. இவற்றால் மனித சிந்தனை வளர்ச்சியில் நாட்டம் குறைந்து, மனித உணர்வுகளுக்கு (Emotions and feelings) அதிகம் மதிப்பளிக்கப்பட்டது. கண்ணால் காணக்கூடிய பொருட்களைவிட (Objective substance), கண்ணால் காண முடியாத சிந்தனைத் தோற்றங்களுக்கு (Images) விளக்கம் காண்பதில் அதிக நாட்டம் ஏற்பட்டது.

இவற்றால் கடந்த நூற்றாண்டின் கடைசி இருபத்தைந்து வருடங்கள் மனித வளர்ச்சியை குறித்த சந்தேகம் கொண்டதாக இருந்தது. இதுவரை கண்டுபிடிக்கப்பட்டிருந்த விஞ்ஞான ஆய்வுகளை உலகம் சந்தேகக் கண்ணோடு

பார்க்கத் தொடங்கியது. மனித சிந்தனையில் இருந்த மதிப்புக் குறைந்து மனித உணர்வுகளுக்கு அதிகம் மதிப்புத் தரப்பட்டது. பொதுவாகவே உணர்ச்சிகளை வெளிப்படுத்தத் தயங்கும் பிரித்தானிய மக்கள் டயானா (Diana) இறந்தபோது உலகந்தெரிய வெளிப்படுத்திய உணர்ச்சியலைகளை நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். அது சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தைக் குறிக்கின்றது. ஒருவருடைய உணர்ச்சியை நாம் பாதித்துவிடக்கூடாது என்பதிலேயே அதிக கவனம் செலுத்தப்படுகிறது. உலகத்தில் இன்று காணப்படும் புளூரலிசம் (Pluralism) இன்னொரு அம்சம். எல்லா மதங்களிலும், சமயக்கோட்பாடுகளிலும் அடிப்படை உண்மைகள் இருக்கின்றன என்பதே புளூரலிசம். கிறிஸ்தவமும் இந்தப் பாதிப்புகளைச் சந்தித்தது. சுவிசேஷ இயக்கம் பழைய நம்பிக்கைகளை இழந்து பின்நவீனத்துவத்துவத்திற்கு இடம் கொடுத்தது. இதன் மூலம் பிறந்ததே மனித உணர்ச்சிகளுக்கு மட்டுமே அதிக முக்கியத்துவம் கொடுக்கும் கெரிஸ்மெட்டிக் இயக்கம். அதுமட்டுமல்லாமல் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளித்து எழுதப்பட்டு, பாடப்பட்டு வந்த கீர்த்தனைகள், ஞானப்பாடல்களுக்கு கைகாட்டிவிட்டு திருச்சபைகள் இசைக்கும், உடலசைவுக்கும், காதுக்கும் மட்டுமே தீனிபோடும் நான்கு ஐந்து வரிகளில் அமைந்த கோரஸ்களுக்கும் இடம் கொடுத்தன.

இனி பின்நவீனத்துவத்தின் பிரதானமான நம்பிக்கைகளை ஆராய்வோம்:

**1. பின்நவீனத்துவம் தெளிவானதும், ஆணித்தரமானதுமான சத்தியமென்றொன்றில்லை (absolute truth) என்று வாதாடுகிறது**

நவீனத்துவத்திற்கு உருவம் கொடுத்தவர்கள் விஞ்ஞானிகளாக இருந்தனர். அவர்கள் தங்களுடைய கண்டுபிடிப்புகளை வார்த்தைகளாலும் செயல்களாலும் விளக்கினார்கள். ஆனால், பின்நவீனத்துவப் போக்கிற்கு உருவம் கொடுக்கிறவர்கள் இலக்கிய விமர்சகர்களாகும் (Literary Critics). இந்தப் பின்நவீனத்துவ சிந்தனையாளர்களின் எழுத்துக்களில் objective truth க்கு இடம் இருக்கவில்லை. அவை வெறும் எழுத்துக்கள் மட்டுமே. வெறும் அடையாளங்களைக் கொண்ட தெளிவான உண்மைகளைக் கொண்டிராத இந்த உலகத்தோடு சம்பந்தமில்லாத எழுத்து வடிவங்கள்.

பின்நவீனத்துவ சிந்தனையாளர்கள் தெளிவான உண்மைகளை சந்தேகக் கண்ணோடு பார்க்கிறார்கள். அத்தகைய உண்மைகளை மனிதர்களை ஆளுவதற்காகப் பயன்படுத்தப்படும் சிந்தனைகளாகக் கருதுகிறார்கள். இந்த சிந்தனை வரையறுக்கப்பட்ட சத்தியத்தை அடிப்படையாகக் கொண்ட கிறிஸ்தவத்தைப் பாதிப்பதாக இருக்கிறது. கிறிஸ்தவ சத்தியம் மனிதர்களை சிறைப்படுத்தி அடிமைகளாக்குகிறது என்பது அவர்களுடைய கருத்து.

பின்நவீனத்துவம் எந்த உண்மையையும் ஒரு குறிப்பிட்ட கலாச்சாரப் பிரிவினரின் தனிப்பட்ட கருத்துக்களாக அணுகுகின்றது. உதாரணமாக, ஒருவருக்கு ஒரு வகை உணவு நன்மையானதாகத் தெரியும். இன்னொருவருக்கு வேறொருவகை உணவு நன்மையானதாகத் தெரியலாம். இரண்டு வகை உணவிலும் எந்தத்தீமையும் இல்லை. இரண்டும் நன்மையானதே; இரண்டு பேரின் கருத்துக்களும் உண்மையே. இந்த வகையிலேயே பின்நவீனத்துவ சிந்தனை அமைகின்றது. நீங்கள் கிறிஸ்தவர்களாக இருந்தால், அதேவிதமான சிந்தனைப்போக்குள்ளவர்களோடு நீங்கள் இணைந்திருப்பதால் உங்களுக்கு அது நன்மையானதாகவும், இன்பமளிப்பதாகவும் இருக்கின்றது. அதே

எண்ணத்தைக் கொண்டிராத மற்றவர்களுக்கு அது உண்மையில்லை. இத்தகைய சிந்தனைப்போக்கு புளூரலிச சமுதாயத்திற்கு ஒத்துப்போவதாக இருக்கிறது. ஏனெனில் அந்த சமுதாயம் எல்லா சமயத்திலும் உண்மையைக் காண்கிறதாகவும், எல்லா சமயங்களுக்கும் சம இடம் கொடுப்பதாகவும் இருக்கிறது. இந்தவகையான சிந்தனையின்படி எந்தக்குழுவும், சமயப்பிரிவும் தங்களுடைய போதனைகள் மட்டுமே சத்தியமாகக் காணும்.

இந்த அடிப்படையில் பார்க்கும்போது பின்நவீனத்துவ சமுதாய மக்கள் கிறிஸ்தவத்தை மட்டும் வரையறுக்கப்பட்ட சத்தியத்தைக் கொண்ட வாழ்க்கை நெறியாகப் பார்க்கமாட்டார்கள். அவர்களைப்பொறுத்தவரையில் அது ஒரு குறிப்பிட்ட பிரிவினரின் சிந்தனைப்போக்கு மட்டுமே. கிறிஸ்தவம் மட்டுமே சத்தியம் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். வரையறுக்கப்பட்ட சத்தியம் என்றொன்றில்லை என்று சிந்திக்கும் அவர்களுக்கு கிறிஸ்தவம் சரியானதாகப்படாது. இந்தவகை சிந்தனையை விளக்க நியூசிலாந்தின் கல்விமுறையின் பின்நவீனத்துவப் போக்கை உதாரணத்துக்குக் காட்ட விரும்புகிறேன். இங்கே சிறுவர்களை ஒரு அறையில் விளையாடவிட்டு அவர்கள் விரும்பியதை செய்ய வைத்து, ஒவ்வொருவரும் கண்டுபிடித்த, அல்லது செய்து முடித்தவற்றை அடிப்படை சத்தியமாக அறிவிக்கும் கல்வி முறை வழக்கத்தில் இருக்கிறது. ஒவ்வொரு சிறுவனுடைய கண்டுபிடிப்பும் அந்தந்த சிறுவர்களைப் பொறுத்தவரையிலும் சத்தியம். ஆகவே, கல்லூரிகளில் ஆசிரியர்களை வைத்து உறுதியாக எதையும் போதிக்கும் வழக்கம் இல்லாமல் போகிறது. இன்னுமொரு உதாரணமாக தன்னினச்சேர்க்கையில் ஈடுபடுபவர்களை (Homosexual, lesbian) எடுத்துக் கொள்வோம். இந்த சமுதாயத்தைப் பொறுத்தவரையில் அந்த முறையிலான வாழ்க்கை தனிப்பட்டவர்களின் விருப்பத்தைப் பொறுத்தது. அதைத் தீமையானது என்று இன்னொருவர் கூறுவது தவறாகக் கருதப்படுகிறது. ஒருவருக்கு அது பிடித்தமில்லாததாக இருந்தால் அது அவருடைய தனிப்பட்ட கருத்தாகக் கருதப்படுகின்றது. இது பின்நவீனத்துவ சிந்தனைப்போக்கு.

இச்சிந்தனை சமுதாயத்தை மட்டுமல்லாமல் கிறிஸ்தவர்களையும், சபைகளையும் பாதிக்கிறது. இன்று சபைகளில் சகலவிதமான கருத்துக்களும் சத்தியமாகக் கருதப்பட்டு ஒருவரும் எதையும் வரையறுக்கப்பட்ட உண்மையாக அறிவிக்க முடியாமல் இருப்பதை நாம் பார்க்கவில்லையா? வேதப்பாடம் நடக்கும் இடங்களில் அதை நடத்துகிறவர்கள் இல்லாமல், எல்லோரும் தங்களுக்கு விருப்பமானதை சொல்ல, சொல்லப்பட்ட கருத்துக்களில் எல்லாம் ஒருவகை உண்மை இருப்பதாக சொல்லப்பட்டுவருவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இன்று அனேக சபைகள் நடத்துகின்ற வீட்டு வேதப்பாட வகுப்புகளில் (Home Bible Studies) இதைப்பார்க்கலாம். தகுதியுள்ள ஒருவர் வேதத்தைப் படித்துப் பாடத்தை நடத்தாமல் அவர் அதில் கலந்து கொள்கிறவர்களைப் பேசவைத்து அவர்களுடைய கருத்துக்களுக்கு (தவறானதாக இருந்தாலும்) மதிப்புக்கொடுத்து ஏற்றுக்கொள்கிறவராக இருக்கிறார். இது பின்நவீனத்துவ வேத பாடத்திற்கு உதாரணம்.

அத்தோடு அனேக இறையியல் கல்லூரிகளில் (மேலைத்தேசங்களிலும்) வரையறுக்கப்பட்ட (முறைப்படுத்தப்பட்ட) இறையியலுக்கு (Systematic Theology) மதிப்புக் கொடுப்பதில்லை. மாணவர்கள் Biblical Studies போன்ற பாடங்களுக்கே முக்கியத்துவம் தருமாறு வழிநடத்தப்படுகிறார்கள். இதனால் அனேகர் முறைப்படுத்தப்பட்ட இறையியல் அறிவு இல்லாமலேயே பிரசங்கி-

*களாக இருக்கின்றனர். அவர்களுடைய பிரசங்களில் வேத போதனைகள் இருந்தாலும் அவை உறுதியானதாகவும், இறையியல்பூர்வமானதாகவும் இருப்பதில்லை. உதாரணத்திற்கு அப்படிப்பட்ட ஒரு பிரசங்கியின் பிரசங்கத்தில் இருந்து அவர் எத்தகைய இறையியல் கோட்பாட்டைப் பின்பற்றுகிறார் என்பதை அறிந்து கொள்ள முடியாது. இதைத் தமிழர்கள் மத்தியில் இருக்கும் பிரசங்கிகளிடம் அதிகம் பார்க்கலாம். பின்நவீனத்துவம், தெளிவான, உறுதியான உண்மை என்றொன்றில்லை என்று நிராகரிக்குமானால் அது நிச்சயம் இன்று அனேக பிரசங்கிகள் மத்தியிலும், இறையியல் கல்லூரிகளிலும் காணப்படுகின்றது என்பதை மறுக்க முடியாது.*

**2. பின்நவீனத்துவ சமுதாயம் ஒழுக்கத்தில் உறுதியற்றும் (Unstable), பல்வகைப் பிரிவுகளைக் கொண்டும் (Diversity), சிறுசிறு கூறுகளாகவும் (Fragmentation) காணப்படுகின்றது**

*பின்நவீனத்துவம் தெளிவான உண்மைகள் எதையும் நம்பாததால் பிடிப்போடு எதையும் பின்பற்றி அதனால் வாழ முடியாது. இதனால் அந்த சமுதாயம் உறுதியுள்ளதாக இருக்காது. இதுதான் ஒழுக்கம் என்று விளக்கும் எந்தப் போதனையும் பின்நவீனத்துவத்தில் காணப்படவில்லை. ஒழுக்கத்தை சமுதாய மக்களின் தனிப்பட்ட கருத்து என்று அது விளக்குவதால் பத்துக் கட்டளைகளுக்கு பின்நவீனத்துவத்தில் இடமில்லை. ஒழுக்கத்தைப் பொறுத்தவரையில் சமுதாயத்தின் கருத்துக்களும் அடிக்கடி மாறிக்கொண்டும் போகலாம். உதாரணமாக தன்னினச் சேர்க்கை பற்றிய இன்றைய சமுதாயத்தின் கருத்துக்கள், மற்றும் பில் கிளின்டனின் ஒழுக்கமற்ற செய்கை என்பவற்றை உதாரணமாகக் கூறலாம். பில் கிளின்டன், மொனீகா லுவின்ஸ்கியுடன் தனக்கு இருந்த தொடர்பை முழு உலகத்துக்கும் முன்பாக மறுதளித்தபோது அமெரிக்க மக்களால் உடனடியாக உறுதியான முடிவை எடுக்கமுடியவில்லை.அதே கிளின்டன் பின்பு அதை ஒத்துக்கொண்டபோதும் அமெரிக்கா ஒன்றும் செய்யவில்லை. வாட்டர்கேட் சம்பவத்துக்காக நிக்சனை ஓரங்கட்டிய அதே அமெரிக்கா கிளின்டனை தப்பவிட்டுவிட்டது. ஒழுக்கத்தைப் பொறுத்தவரையில் அமெரிக்காவை உறுதியற்ற ஒரு நிலைக்கு கொண்டுபோகும் முயற்சி எடுத்ததில் பில் கிளின்டனுக்கு முக்கிய இடமுண்டு. இது அமெரிக்க சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது.*

*இதை இன்று சின்னத்திறைகளில் வரும் அமெரிக்க படங்களிலும் பார்க்கலாம். அனேக வருடங்களுக்கு ஓடிய டல்லஸ்* (Dallas), *ஓடிக்கொண்டிருக்கும் த போல்ட் அன்ட் பியூட்டிபுல்* (The Bold and Beautiful), *டேய்ஸ் ஒப் அவர் லைவ்ஸ்* (Days of our lives) *போன்ற சின்னத்திறைப் படங்களில் திருமணமானவர்கள் பல முறை விவாகரத்து செய்து வேறொருவரை திருமணம் செய்து கொள்வதும், மனைவியுடன் இருக்கும்போதே வேறு பெண்களுடன் எந்தவித மனச்சாட்சியும் இன்றி தொடர்பு வைத்திருப்பதும் ஒவ்வொரு நாள் காட்சியிலும் காட்டப்படும் சம்பவங்களாக இருக்கின்றன. வெளிப்படையாக, எந்தவிதக் கூச்சமோ தயக்கமோ இல்லாமல் பாலுறவுக் காட்சிகளைப் பகல் நேரங்களிலும்கூட சின்னத்திரைகளில் காட்டுவது எந்தளவுக்கு பின்நவீனத்துவ சிந்தனைப் போக்கிற்கு சமுதாயம் இடம் கொடுத்திருக்கிறது என்பதை விளக்குகிறது. இது சமுதாயத்தை ஒழுக்கமற்றதாகவும், உறுதியற்றதாகவும் வைத்திருக்கிறது.*

*சாமுவேல் வால்டிரன்* (Samuel Waldron) *என்ற அமெரிக்க போதகர் இந்தப்*

பின்நவீனத்துவப்போக்கை "நவீன லிபரலிசம்" என்று தன்னுடைய நூலில் வர்ணிக்கிறார் (A Warning against Modern Liberalism). அமெரிக்காவை இன்று தீவிர தனிநபர் தனித்துவத்தின் மூலமும் (Radical Individualism), எந்த வேறுபாடுகளுக்கும் இடங்கொடுக்காத தீவிர சமத்துவப்பார்வையின் மூலமும் (Radical Egalitarianism) இந்த நவீன லிபரலிசம் தாக்கிவருவதாக அந்நூலில் குறிப்பிடுகிறார். டெலிவிஷன், விடியோ, கணினி, இன்டர்நெட் அனைத்தையும் இந்த நவீன லிபரலிசம் கட்டுப்படுத்தி, கர்த்தரின் அதிகாரத்திற்கு எதிராக சமுதாயத்தைத் திருப்பக் கங்கணம் கட்டியிருப்பதாக வால்டிரன் கூறுகிறார். கிறிஸ்தவத்திற்கு எதிராக இன்று கிளம்பி இருக்கும் முதலாவது எதிரி நவீன லிபரலிசம் (அதாவது, பின் நவீனத்துவம்) என்பது வால்டிரனின் கணிப்பு.

இந்த உலகமும் இன்று அடிக்கடி மாறிக் கொண்டிருக்கிறது. அதி தீவிர வேகத்தில் மாறிவரும் தொழில்நுட்ப வளர்ச்சி எந்த ஒரு புதிய பொருளையும் ஆறுமாதங்களில் மியூசியம் பீஸ் ஆக்கிவிடுகிறது. இன்று எந்த வேலைகளிலும் இருப்பவர்கள் தாங்கள் தொடர்ந்து வேலையில் இருப்பதற்காகவும், துரித வேகத்தில் மாறிவளர்ந்துவரும் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கவும் அடிக்கடி தங்களுடைய அறிவைப் பெருக்கிக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள் (Upgrade). அவர்களால் தொடர்ந்து அதே நிலையில் இருக்க முடியவில்லை. இத்தகைய அதிவேக மாற்றம் இன்றைய சமுதாயத்தின் ஒரு அங்கம்.

இன்று வேறுபட்ட குழுக்களைக் கொண்ட சமுதாய அமைப்பை நியாயப்படுத்தி அனைத்துக் கலாச்சாரங்களையும், வேறுபாடுகளையும் பிரதிபலிப்பதாக சமுதாயம் இருக்க வேண்டும் என்ற கோஷத்தை மேலைத் தேச நாடுகளில் கேட்க முடிகின்றது. கட்டுப்பாட்டோடிருந்த ஒற்றுமை என்ற நிலை மாறி பிரிவுகளையும், பல இன, மத, கலாச்சார எண்ணங்களின் பிரதிபலிப்பையும் நாடி நிற்கிறது உலகம். பிரித்தானியாவில் வேல்ஸும், ஸ்கொட்லாந்தும் இத்தகைய தனித்துவத்தை நாடுகிறார்கள். கனடாவில் குபெக்கும், ஒன்டாரியோவும் இத்தகைய தனித்துவத்தை ஏற்கனவே சமுதாயத்தில் காண்கின்றன. நியூசிலாந்தில் இன்று முக்கியமாக ஆக்லாந்தில் பல இன மக்கள் வாழ்கிறதோடு அரசாங்கம் அந்த இனங்களினதும், கலாச்சாரங்களினதும் பிரிதிபலிப்புகள் சமுதாயத்தில் இருக்க வேண்டும் என்றும், அவர்கள் எல்லோரும் ஒருங்கிணைந்து ஒரேவிதமாக இருக்க முயலக்கூடாது என்பதிலும் அதிக நாட்டம் காட்டுகின்றது. ஒற்றுமையாக இருக்க வேண்டும், ஒரே மொழி பேச வேண்டும் என்ற கொள்கை பிற்பட்டதாக பலருக்குத் தெரிகிறது. பல்வகைப்பிரிவுகளையும், சிறுசிறு கூறுகளானதுமாக சமுதாயம் இருக்க வேண்டும் என்பதிலேயே அதிக நாட்டம் காட்டப்படுகிறது. இது பின்நவீனத்துவத்தின் பிரதிபலிப்பு. இது நாடுகளில் பிரச்சனையை ஏற்படுத்தாமலில்லை. ஆனாலும், இந்தச் சிந்தனைக்கோட்பாட்டையே பின்நவீனத்துவம் வளர்க்கிறது.

இது கிறிஸ்தவத்தைப் பாதிக்காமல் இல்லை. மேலை நாடுகளில் திருச்சபைகளில் பல இனங்களுக்கான ஆராதனைகள் நடைபெற்று வருவது இன்று சகஜம். அமெரிக்காவில், ஹிஸ்பானிக் (Hispanic) மக்களுக்கான சபைகளும், டொமினிக்கன் ரிபக்லிக்கில் (Dominican Republic) இருந்து வந்தவர்களுக்கான சபைகளும், சீனர்களுக்கான சபைகளும் அதிகம். இதை பின்நவீனத்துவம் வரவேற்கிறது. ஒரு சபையில் இருக்கும் பல இன மக்களின் பல மொழி ஆராதனைகள் தொடர்வதோடு அவர்கள் தனித்தனி இனங்களாக

*தொடர்ந்தும் வளர்ந்து வருவது வற்புறுத்தப்படுகிறது. அத்தகைய அமைப்பில் திருச்சபை இன்று அமைதி காண்கிறது. இது வேதபோதனைக்கு முரணானது. வெளிநாட்டில் இவர்கள் எல்லோரும் வேலைத்தளங்களிலும், பொது இடங்களிலும் ஆங்கில மொழியைப் பேசினாலும் ஆராதனையில் மட்டும் தங்கள் சொந்த மொழியையும், கலாச்சார பிரதிபலிப்புகளையும் நாடி நிற்கிறார்கள். வீட்டில்கூட இவர்கள் பிள்ளைகளோடு ஆங்கிலத்தில் பேச வேண்டிய நிலமையை இவர்களால் தவிர்த்துவிட முடியாமல் இருக்கிறது. இதற்கு வேதத்தில் எங்கே இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. (எபேசியர் 2).*

*பல மொழிகள் இருக்கும் ஒரு நாட்டில் சமுதாய மக்கள் தங்கள் மொழிகளில் ஆராதனை நடத்துவது ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றே. ஆனால், ஒரு மொழி பேசும் நாட்டில் பல மொழிகளை வற்புறுத்துவதும் அம்மொழியில் ஆராதனை நடத்துவதும், கலாச்சாரப் பிரிவுகளை வற்புறுத்துவதும் கிறிஸ்தவர்களுக்கிடையில் ஒற்றுமையை ஒருபோதும் ஏற்படுத்தாது. பின்நவீனத்துப்போக்கு இந்த வகையில் இன்று சபையைத் தாக்குகிறது.*

**பின்நவீனத்துவம் ஏற்படுத்தியுள்ள பிரச்சனைகள்**

*1. தெளிவான சத்தியத்தைப் பொறுத்தவரையில் பின்நவீனத்துவம் உண்மை என்றொன்றில்லை என்று வாதிட்டபோதும் தனது கொள்கைகளை மட்டும் சத்தியமாகக் கருதி சமுதாயம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. ஒரு குறிப்பிட்ட பிரிவினரின் கொள்கையை அது பெரிதுபடுத்தி உயர்த்தும்போது அதை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அது வாதிடுகிறது. அவ்வாறு வாதிடும்போது அதுவே பின்நவீனத்துவத்தின் கோட்பாடாக அமைந்துவிடுகிறது. தெளிவான கோட்பாடென்றொன்றில்லை என்று கூறும் பின்நவீனத்துவத்தால் அப்படியொன்றிருக்கிறது என்பதை மறுக்க முடியவில்லை. ஆகவே, தெளிவான உண்மைகள் இல்லாமல் சமுதாயம் இருக்க முடியாது; மக்கள் வாழ முடியாது. அத்தகைய சத்தியங்களை நிராகரிக்கும்போது சமுதாயம் தன்னையே அழித்துக்கொள்ளும்.*

*2. உறுதியற்றதும், சிறுசிறு கூறுகளாகவும் இருக்கும் சமுதாயத்தைப் பொறுத்தவரையில், அடிக்கடி ஏற்பட்டு வரும்மாற்றங்களால் அதன் உறுதி குழைந்துவிடும். இது தீவிரவாதத்திற்கு வழி வகுக்கிறது. சிறுசிறு குழுக்களாக சமுதாயத்தைப் பிரிப்பதில் ஆர்வம் காட்டி, பல்லின, மத, கலாச்சார பிரதிபலிப்புகளுக்கு உற்சாகமூட்டினால் அப்பிரிவுகள் தங்களுக்குள் போராடுவதைத் தடுக்க முடியாது. பின்நவீனத்துவம் பிரிவினையை வலியுறுத்துகிறது. இது சமுதாயத்தை உடைத்துவிடும். பின்நவீனத்துவ புரோகிராமில் பிரிவினை முக்கிய இடம் வகிக்கிறது. இது வேதத்தில் பார்க்க முடியாததொன்றாகும்.*

**பின்நவீனத்துவத்தை எதிர்கொள்ள நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்**

*பின்நவீனத்துவத்தை நாம் எவ்வாறு எதிர்கொண்டு சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது? இந்தக் கேள்விக்குப்பதிலளிப்பதற்கு முன்பாக ஒரு முக்கியமான உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நவீனத்துவம், பின்நவீனத்துவம் எதுவாக இருந்தாலும், அல்லது இவற்றிற்குப்பின் வேறு மாற்றங்கள் சமுதாயத்தில் ஏற்பட்டாலும் இவற்றிற்கெல்லாம் காரணம் மனிதனைப் பிடித்திருக்கும் பாவம்தான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். பாவத்தின் காரணமாக மனித சிந்தனைகள் எப்படியெல்லாம் போகும் என்பதற்கு பின் நவீனத்துவம்*

*உதாரணமாக இருக்கின்றது. பின்நவீனத்துவத்தைப் பார்த்து நாம் கலங்கிப்போக வேண்டிய அவசியமில்லை. பின்நவீனத்துவத்தைப் பெரிதுபடுத்தி இதை சமாளிக்க முடியாது என்று பிற்போக்குத்தனமாக சிந்திக்கத் தேவையில்லை. சமுதாயத்தில் ஆரம்பத்தில் இருந்தே இத்தகைய பல மாற்றங்கள் தொடர்ந்து நிகழ்ந்து வந்திருக்கின்றன. இருந்தபோதும் நமது சுவிசேஷம் அத்தனை மாற்றங்களையும் எதிர்கொண்டு வெற்றி அடைந்திருக்கின்றது.*

*பின்நவீனத்துவத்தைப் புரிந்து கொள்வதால் ஓரளவுக்கு சமுதாயத்தின் இன்றைய போக்கு என்ன என்பதை நாம் விளங்கிக்கொள்ளலாம். சமூகவியல் சிந்தனையாளர்களின் கருத்துக்கள் இந்தமுறையில் நமக்கு உதவுகின்றன. ஆனால், அவர்களுடைய கருத்துக்கள் வேதமாகிவிட முடியாது. அவர்கள் தரும் ஆலோசனைகள் மனித வர்க்கத்துக்கு வாழ்வளித்துவிடாது.*

*பின்நவீனத்துவதை எதிர்கொள்ள நாம் சுவிசேஷத்தை நம்ப வேண்டும். அதை எதிர்கொள்ள இதுவரை செய்யாத ஒன்றையும் நாம் பெரிதாக செய்துவிட வேண்டியதில்லை. பின்நவீனத்துவதை எதிர்கொள்வது எப்படி? என்று புத்தகம் எழுதி, நமக்கு ஆலோசனை சொல்லி அனேகர் பணம் சம்பாதித்து விடுவார்கள். வேதத்தில் இல்லாத எதையும் எவரும் நமக்கு ஆலோசனையாகத் தந்தால் அதை நாம் ஏற்றுக்கொள்ளக்கூடாது. சமுதாயப் பிரச்சனைகளைச் சந்திக்கவும், தீர்க்கவும் வேதமறியாத புதுமையான ஆலோசனைகள் இந்த உலகத்தில் இருக்க முடியாது. ஆகவே, நம் கையில் கர்த்தருடைய தெளிவான வேதம் இருக்கிறது என்ற நம்பிக்கையில் நாம் பின்நவீனத்துவத்தை எப்படி எதிர்கொள்வது? என்று பார்ப்போம்.*

**1. கர்த்தருடைய இறையாண்மையில் நம்பிக்கைவைத்து நாம் அதை வலியுறுத்திப் பிரசங்கிக்க வேண்டும்.**

*பின்நவீனத்துவம் கர்த்தரையும் அவருடைய இறையாண்மையையும் எதிர்க்கிறது; நிராகரிக்கிறது. அதை வெற்றிகொள்ள நாம் கர்த்தரின் இறையாண்மையில் அதிக நம்பிக்கை வைத்து பிரசங்கிக்க வேண்டும். கர்த்தருடைய ஆளுகையைப் பற்றிய அறிவை ஆத்துமாக்கள் பெற்றுக்கொள்ள நமது பிரசங்கங்களிலும் போதனைகளிலும் கர்த்தரின் இறையாண்மை பற்றிய போதனை முக்கிய இடம் பெற வேண்டும். அனைத்தையும் ஒழுங்கோடும், கட்டுப்பாட்டோடும் உருவாக்கி நடத்திவருகின்றதோடு சமுதாய மக்களின் வாழ்வுக்காகவும், வளத்துக்காகவும் பத்துக் கட்டளைகளைத் தந்திருக்கின்ற கர்த்தரின் வழிமுறைகளை ஆணித்தரமாக பிரசங்கிக்க வேண்டும்.*

**2. வேதத்தின் தெளிவான அடிப்படைப் போதனைகளை நாம் தொடர்ந்து வலியுறுத்திப் போதிக்க வேண்டும்.**

*இன்று முறைப்படுத்தப்பட்ட இறையியலே தெரியாது வளர்ந்துவரும், கிறிஸ்தவர்கள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் கூட்டம் அதிகமாக இருக்கின்றது. தமிழ் கிறிஸ்தவர்களிடம் இருந்து எனக்கு வரும் அனேக கடிதங்களில் வேதத்தின் அடிப்படை உண்மைகள்பற்றி கேள்விகள் கேட்டு வரும் கடிதங்கள் அதிகமானவை. திரித்துவத்தைப்பற்றியும், வேதத்தின் அதிகாரத்தைப் பற்றியும் சரியாகத்தெரிந்து வைத்திராத அனேக கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எப்படி வல்லமையுள்ள கிறிஸ்தவர்களாக, மெய்க்கிறிஸ்தவர்களாக வாழ முடியும் என்பது எனக்குத் தெரியவில்லை. அன்றாடம் ஜெபம் செய்வதற்கும், வாராவாரம் சபையில் ஆராதனை செய்வதற்கும் அத்தியாவசியமாக தேவைப்-*

படும் வேதஅறிவும், திரித்துவத் தேவனைப்பற்றிய ஞானமும், வேதத்தின் அதிகாரத்தைக்குறித்த நம்பிக்கையும் இல்லாமல் அனேக கிறிஸ்தவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இப்படித் தொடர்ந்து வாழ்கின்ற கிறிஸ்தவன் கர்த்தரை அவருடைய சித்தத்திற்கேற்ப ஆராதிக்க முடியாது. இது பலருக்குத் தெரிவதில்லை.

கெரிஸ்மெட்டிக் இயக்கமும், நவீன சுவிசேஷ இயக்கமும் முறைப்படுத்தப்பட்ட இறையியலுக்கு இடமளிப்பதில்லை. மனிதனின் உணர்ச்சிக்கு மட்டுமே அவை உணவூட்டிக் கொண்டிருக்கின்றன. சத்தியத்தை ஒதுக்கிவைத்துவிட்டு கிறிஸ்தவத்தின் பெயரில் ஒரு கூட்டத்தை இந்த இயக்கங்கள் உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. அது நிலைக்காது. அது கர்த்தருடைய பரீட்சையில் வெற்றி அடைய முடியாது. ஆகவே, நமது சபைகளில் வேதப்பிரசங்கங்கள் முறைப்படுத்தப்பட்ட இறையியலுக்கு (Systematic theology) மதிப்புக் கொடுப்பதாக இருக்க வேண்டும். நமது சபை மக்களுக்கு நாம் அடிப்படை வேத போதனைகளை அளிக்க வேண்டும். சபை போதகர்களுக்கு மட்டும் அதில் அறிவிருந்து பலனில்லை; சபை மக்களுக்கு அதில் ஞானம் இருக்க வேண்டும். அதற்குத் துணை செய்யும் நூல்களை அவர்கள் வாசிக்கும்படிச் செய்ய வேண்டும். இன்று நம்மத்தியில், நம் கண்முன்னால் ஒரு சந்ததியே வேதம் தெரியாது கண்போன போக்கில் போய்க் கொண்டிருக்கிறது. இதிலிருந்து விடுபட 1689 விசுவாச அறிக்கையையும், வினாவிடைப் போதனையையும் சபைகள் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை சபை மக்கள் அனைவருக்கும் போதிப்பது அவர்கள் சத்தியத்தில் நிலைத்திருக்க உதவி செய்யும். இளைஞர்களும், சிறு பிள்ளைகளும் அவற்றைப் படிக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த அடிப்படை சத்தியங்களை அவர்கள் அறிந்து கொண்டு வளரும் போது பின்நவீனத்துவத்தை அவர்கள் சமுதாயத்தில் எதிர்த்து நிற்க முடியும். ஒழுக்கமென்றொன்றில்லை என்று சமுதாய மனிதன் பேசி நடந்து கொள்ளும் போது அது தவறு என்று உணர்ந்து அறிவோடு கிறிஸ்தவர்கள் நடந்து கொள்ள முடியும். வேத ஞானமில்லாத அனேக சபைகள் இன்று சுலபமாக பின்நவீனத்துவப்போக்கிற்கு இரையாகி சபை மக்கள் கேட்பதைக் கொடுத்து வருகின்றன. ஆத்துமாக்களுக்கு வேத அறிவு இல்லாததாலேயே உணர்ச்சிக்கு உணவூட்டும் பெந்தகொஸ்தே போதனைகளை அவர்கள் நாடி அலைகிறார்கள்.

**3. கிறிஸ்துவின் சரீரத்தில் காணப்படும் ஒற்றுமையில் உள்ள வேற்றுமையையும், வேற்றுமையின் மத்தியில் உள்ள ஒற்றுமையையும் கிறிஸ்தவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.**

பிரிவினையில் இன்பம் காண்கிறது பின்நவீனத்துவம். அதைத் தொலைக்க வேண்டுமானால் திருச்சபைகளில் கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒற்றுமையும், ஐக்கியமும் இருக்க வேண்டும். நாம் கிறிஸ்தவர்கள் என்ற எண்ணத்தைத் தவிர வேறு எண்ணங்கள் நமக்கு ஏற்படக்கூடாது, சாதி, குலம், கோத்திரம், நிறம், பணக்காரன், ஏழை, மொழி வேறுபாடுகளுக்கு மெய்க்கிறிஸ்தவர்களிடம் இடம் இருக்காது. சபையின் நன்மைக்காக நமக்குக் கர்த்தர் கொடுக்கும் ஈவுகளில்தான் வேறுபாடு காணப்படுமே தவிர வேறு வித்தியாசங்களுக்கு நம்மத்தியில் இடம் இருக்கக்கூடாது. இன்று தமிழ் கிறிஸ்தவர்களிடம் கடவுளை அறியாதவர்களிடம் பார்க்கக்கூடிய பிரிவினைகள் காணப்படுவது வருத்தத்துக்குரியது. எந்தப் பேதமும் பார்க்காமல் நம்மீது கிறிஸ்து காட்டிய அன்பை நாம் நமது சகோதரர்களிடமும் காட்ட வேண்டும். பின்நவீனத்துவப் பிரிவினைப் பேதங்களுக்கு நம்மத்தியில் இடமிருக்கக்கூடாது.

# உலகத்தில் அன்புகூராதிருங்கள்

**பகுதி 1**

யோவான் தன்னுடைய நிருபத்தில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்: "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவை களல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதன் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ நிலைத்திருப்பான்."

விசுவாசி உலக இச்சைகளுக்கு தன்னைப் பலிகொடுத்து தன்னுடைய சாட்சியை இழந்துவிடக்கூடாது என்று உலக இச்சைகளின் ஆபத்தைப்பற்றி எச்சரித்து யோவான் எழுதிய வார்த்தைகள் இவை. இன்று இந்த வார்த்தை களையெல்லாம் உதறித்தள்ளிவிட்டு உலக இச்சைகளை நாடிப்போய்க் கொண்டிருக்கிறது திருச்சபை. உலகம் ஆசையாய் அனுபவிக்கின்றவற்றை நாமும் அனுபவிப்பதில் என்ன தவறு என்று கேட்டு உலகத்தை பிரதிபலிக்கும் இசையையும், ஆராதனை முறைகளையும், வியாபாரரீதியிலான ஊழிய முறை-களையும் சபைக்குள் நுழைத்து அழகு பார்க்கிறது சபை. உலகத்தைப் பின்பற்றி சபைகளிலும், ஊழியத்திலும் இன்று அனேகர் செய்துவரும் அட்டூழியங்கள் சொல்லி மாளாது.

சமீபத்தில் எனக்கு ஒருவர் தான் எழுதி இசையமைத்த பாடல்களின் பாட்டுக்கெசட்டை அனுப்பி வைக்கப்போவதாகக் கூறி பாடல் வரிகளை மட்டும் அனுப்பி வைத்திருந்தார். அதில் ஒரு பாடலின் வரிகள் இப்படி இருந்தது:

ஜிம்சக் ஜிம்ஜிம் ஜிம்சக் - (2)
தில்லானா பாட்டியத்தான் ஏசு நாதர் தேடுறார் - ஜிம்சக்
சீப்பான ஆளு வேணாம் வெய்ட்டா தான் கேக்குறார் - ஜிம்சக்

அறுவடைக்கு எஜமானர் ஆவியானவர் ஆளெடுத்தா
அப்பாயின்மன்ட் ஆடரோட ஒபன் டோர் உனக்கிருக்கு - ஜிம்சக்

இது ஒரு உதாரணம்தான். அதிலிருந்த அத்தனை பாடல்களும் இந்த வகையில்-தான் இருந்தன. வாலியும், வைரமுத்துவும் கிறிஸ்தவ உலகில் இல்லாத குறையைத் தீர்க்கப் பாடுபட்டுக்கொண்டிருக்கும் கூட்டங்களின் சேவைதான் இத்தகைய பாடல்கள். உலக இச்சை பலரை எந்தளவுக்கு இன்று ஆக்கிரமித்-திருக்கிறது என்பதற்கு இத்தகைய பாடல்கெசட்டுகள் நல்ல உதாரணம்.

உலக ஆசை இன்று இத்தோடு மட்டுமா நிற்கிறது. ஆராதனை, ஊழியம், சொந்த வாழ்க்கை என்று தமிழ் கிறிஸ்தவ உலகத்தில் அது ஆக்கிரமிக்காத இடமில்லை. போட்டியும், பொறாமையும், எரிச்சலும், குரோதமும், பெண்-ணாசையும், மண்ணாசையும், பொருளாசையும் ஊழியக்காரர்களையும், கிறிஸ்தவர்களையும் இன்று மகுடி நாதத்தில் மயங்கி நிற்கும் நாகத்தைப் போல

*மயக்கி வைத்திருக்கின்றன.*

*உலக இச்சை எது? உலக ஆசையைத் துறந்து விசுவாச வாழ்க்கையை நாம் இந்த உலகத்தில் எப்படி வெற்றிகரமாக வாழ்வது? உலக இச்சைக்கு திருச்சபையில் இடம்கொடாமல் இருப்பதெப்படி? என்று அறிந்து கொள்வதற்கு வேதம் உலகத்தைப் பற்றியளிக்கும் பொதுவான போதனைகளையும், உலகத்தில் நாம் நியாயபூர்வமாக எதை, எப்படி அனுபவிக்க வேண்டும் என்பதையும் முதலில் தெரிந்து கொள்வது அவசியம்.*

## உலகத்தைப் பற்றிய வேத போதனை

*"உலகம்" என்ற வார்த்தை வேதத்தில் பலவிதங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கர்த்தர் படைத்துள்ள, மனிதனும் ஏனைய ஜீவராசிகளும் வாழும் இடமாக அதை வேதத்தின் மூலம் அறிந்து கொள்கிறோம். உலகத்தைக் கர்த்தர் உருவாக்கினார் (ஆதி. 1:26-31). மனிதன் வாழவும் தன்னுடைய படைப்புகள் மேல் அவன் ஆதிக்கம் செலுத்தி அனுபவிக்கவும் கர்த்தர் உலகத்தைத் தோற்றுவித்தார் (ஆதி. 3). மனிதனோடு உலகமும் பாவத்தினால் கறைபடிந்து தன்னுடைய மீட்சியை எதிர்பார்த்து நிற்கின்றபோதும் (ரோமர் 8), அது தொடர்ந்து தேவனுடைய நித்திய வல்லமை, தேவத்துவம் என்பவைகளை உலக மக்களுக்குப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது (ரோமர் 1:20). பாவத்தால் கறைபடிந்த இந்த உலகத்தின் மூலம் கர்த்தர் தொடர்ந்து தன்னுடைய சித்தங்களை நிறைவேற்றி வருகிறார். இந்த உலகம் கர்த்தருக்கு சொந்தமானது என்றும், கர்த்தருடைய காரூண்யம் இந்த பூமியில் தொடர்ந்து நிறைந்திருக்கிறது என்றும் சங்கீதக்காரன் சொல்லுகிறான் (சங். 89:11; 24:1; 33:4; 104). பாவத்தின் காரணமாக ஒரு காலத்தில் உலகம் அழியப்போகிற போதும் அந்தக்காலம் வருகிறவரை கர்த்தர் தொடர்ந்து தன்னுடைய மக்களை இந்த உலகத்திலிருந்து இரட்சித்து தனது மகிமைக்காக திருச்சபைகளை உருவாக்கி வருகிறார்.*

*அதேவேளை, இந்த உலகத்தில் வாழும் மக்களின் சிந்தனைப்போக்கையும், வாழ்க்கை முறையையும் குறிப்பதாகவும் "உலகம்" என்ற வார்த்தை வேதத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த உலகத்தின் தேவனாக சாத்தான் இருந்து வருகிறான் (யோவான் 12:21; 14:30). பிசாசான சாத்தான் தன்னுடைய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக இந்த உலகத்தையும், உலகத்து மக்களையும் பயன்படுத்திக் கொள்கிறான். சாத்தானின் பிடியில் இருக்கும் மக்கள் கர்த்தரின் வழிகளின்படி வாழாமல் பாவ சிந்தனைகளோடு பாவத்தைச் செய்துவருகிறார்கள். பாவத்தில் இருக்கும்வரை சாத்தானின் வழிகளின்படி இவர்களுடைய சிந்தனை அமைந்திருக்கும். இந்தப் பாவகரமான சிந்தனைப்போக்கைப் பின்பற்றும் மக்களைக் குறிக்கவும் "உலகம்" என்ற வார்த்தை வேதத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தவிதத்திலேயே 1 யோவான் 2:15; யாக்கோபு 4:4; 1:27; கொலோசெயர் 2:20; 2:8; எபேசியர் 2:2; ரோமர் 12:2 ஆகிய பகுதிகளில் உலகம் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருப்பதைப் பார்க்கலாம்.*

## தேவன் நமது நன்மைக்காக அனைத்தையும் படைத்தார்

*இந்த உலகத்தில் மனிதர்கள் அனுபவிப்பதற்காக கர்த்தர் ஜீவராசிகளையும், தாவர வகைகளையும் படைத்தார். அவற்றைக் கவனமாக பராமரித்து தன்னுடைய தேவைகளுக்காக மனிதன் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது கர்த்தரின் கட்டளை. இவற்றைத் தவிர மனிதனுக்குத் துணையாக கர்த்தர் பெண்ணைப் படைத்தார். மனிதன் திருமண வாழ்க்கையில் ஈடுபட்டு*

*தன் வம்சத்தை விருத்தி செய்து கொள்ளும்படி அவனைக் கர்த்தர் ஆசீர்வதித்தார். கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கின்ற இவை அனைத்தும் மனிதனுடைய பக்திவிருத்திக்கு பங்கமாக இருந்துவிடாது. இவற்றை அனுபவிக்கக்கூடாது என்று தடைசெய்பவர்களைப் பொய்யர்கள் என்று அழைத்து பவுல் கண்டித்து எழுதினார் (1 தீமோ. 4:1-4). கிறிஸ்தவ வரலாற்றில் கத்தோலிக்கர்கள் குருமார்களையும், கன்னியாஸ்திரிகளையும் தோற்றுவித்து அவர்கள் திருமண வாழ்க்கையில் ஈடுபடத் தடை செய்தனர். இதேபோல் அனாபாப்திஸ்துகளும் நடந்து வந்தனர். இவர்கள் வேதத்திற்கு முரணான போக்கைப் பின்பற்றினர். அனாபாப்திஸ்துகளும், அவர்களுக்கு முன்பு வரலாற்றில் காணப்பட்ட சபைத்தலைவர்களில் சிலரும் உலகம் தங்களுடைய பக்தி விருத்திக்குப் பங்கம் விளைவித்துவிடும் என்ற தவறான நம்பிக்கையால் காடுகளில் போய் மறைந்து வாழ்ந்தனர். சிலர் உயரமான தூண்களை நிறுவி, மனிதத்தொடர்பே வேண்டாம் என்று விலகிப்போய் அத்தூண்களில் ஏறி இருந்து வாழ்ந்தனர். பக்தியான வாழ்க்கைக்கு தம்மைச் சுற்றி இருக்கும் மனிதர்களே இடையூராக இருக்கிறார்கள் என்ற தவறான எண்ணத்தினால் இவர்கள் இவ்வாறு நடந்து கொண்டனர்.*

*கர்த்தர் படைத்திருக்கும் அனைத்தையும் நாம் ஜெபத்தோடு அனுபவிக்கலாம் என்று வேதம் போதிக்கிறது (1 தீமோ. 4:4). கர்த்தருடைய பெயருக்கு களங்கம் ஏற்படுத்தாதவிதத்திலும், நாம் நியாயபூர்வமாக அனுபவிக்க வேண்டியவற்றின் மூலம் பாவத்தைச் செய்துவிடாமலும், பிறருடைய விசுவாசத்திற்கு பங்கம் ஏற்படுத்தாதவிதத்திலும் கர்த்தர் படைத்திருக்கும் அனைத்தையும் நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். உணவில் எதையும் கர்த்தர் தடை செய்யவில்லை (அப்போஸ். 11:1-10). ஆனால், அளவுக்கதிகமாக சாப்பிடுவது பாவம். ஏனெனில், அது நமது சரீரத்திற்கு தீங்கு விளைவிக்கும். பெருங்குடியனாக இருப்பது பாவம். ஏனெனில், அது நமது சரீரத்தையும் கெடுத்து, மற்றவர்களுடைய விசுவாசத்திற்கும் இடையூராக அமையும். பத்துக்கட்டளைகளில் ஒன்றான ஆறாம் கட்டளை நமது சரீரத்திற்கு நாம் எந்தத் தீங்கும் விளைவிக்கக்கூடாதென்று வலியுறுத்துகிறது. அத்தோடு, பிறருடைய விசுவாசத்திற்குப் பங்கம் வராமல் இருக்க வேண்டுமென்பதற்காக சிலைகளுக்கு படைக்கப்பட்ட உணவை நாம் அவர்கள் முன் அருந்தாமல் இருப்பது நல்லது என்கிறார் பவுல் (ரோமர் 14:14; 1 கொரி. 10:23-33). சிலைகளுக்கு படைக்கப்பட்ட உணவில் ஒருபோதும் எந்த மாற்றமும் ஏற்படுவதில்லை. ஆனால், பலவீனமானவர்களுக்கு அந்த அறிவு இல்லை என்பதால் அவர்களுக்கு உதவ வேண்டும் எனறு பவுல் அறிவுரை செய்கிறார். பவுலின் இந்தப் போதனையைத்தான் நாம் அனுபவிக்கும்படியாக கர்த்தர் அனுமதித்திருக்கின்ற அனைத்துக் காரியங்களிலும் பின்பற்ற வேண்டும். நமக்கு சுதந்திரம் இருக்கிறது என்பதற்காக மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் அசட்டையாக வாழ்கின்ற கிறிஸ்தவர்கள் மிகவும் பலவீனமானவர்கள். அவர்கள் கிறிஸ்து தந்திருக்கும் சுதந்திரத்தை தங்களுடைய சுயநலத்துக்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். பவுல் சொல்கிறார்: "எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது, எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்." (கலா.6:12). இதிலிருந்து அப்போஸ்தலனான பவுல் தன்னுடைய கிறிஸ்தவ சுதந்திரத்தை மற்றவர்களுக்கு பங்கம் வராதபடி தன் வாழ்வில் கவனத்தோடு அனுபவித்ததோடு, கர்த்தர் அனுமதித்திருந்த அனைத்தையும் சுத்தமான மனச்சாட்சியுடன் அனுபவித்திருந்தார் என்பதை அறிகிறோம்.*

## எது உலக இச்சை?

*யோவான், "உலகத்தின் மீது அன்புகூராதிருங்கள்" என்று சொன்ன வார்த்தைகளுக்கு அர்த்தம் நாம் வாழ்கின்ற இந்த உலகத்தை நாம் வெறுக்க வேண்டுமென்பதல்ல. கர்த்தர் படைத்திருப்பவற்றை நாம் நியாயபூர்வமாக, சுதந்திரத்தோடு அனுபவிக்கும் உரிமைக்கும், உலகத்தின் மீது அன்பு கூறுவதற்கும் இடையில் பெரும் வேறுபாடுண்டு. யோவான் நமக்கு உலக இச்சைதான் (உலக ஆசை) இருக்கக்கூடாதென்று சொல்கிறார். இந்த உலக இச்சையை பவுல் மாம்சத்தின் இச்சையாக வர்ணிக்கிறார். இதையே வேதம் சாத்தானின் பிடியிலுள்ள இந்த உலக மக்களின் வாழ்க்கைத் தத்துவம் என்று விளக்குகிறது. பவுல் ரோமர் 12:2-ல் இதை "பிரபஞ்சத்துக்குரிய வேஷம்" என்று வர்ணிக்கிறார். இது விசுவாசிகள் போடக்கூடாத வேஷம்.*

*உலக இச்சை என்பது நம்முடைய சரீரத்தோடும், கண்களோடும், சித்தத்தோடும் சம்பந்தமுடையதென்று யோவான் விளக்குவதைப் பார்க்கிறோம். நம்முடைய சரீரத்தை பாவமான காரியங்களுக்கு உட்படுத்தும்போதும், நமது கண்கள் பாவமானவற்றைப் பார்த்து இரசிக்கின்றபோதும், நமது மனம் பாவமான எண்ணங்களைச் சுமந்து அவற்றை எண்ணி ஆனந்தமடைகின்றபோதும் நாம் உலக இச்சைக்குக்குக் கட்டுப்பட்டிருக்கிறோம் என்று அர்த்தம். இதனால் தான் இத்தகைய மனப்போக்கும், செய்கைகளும் பிதாவிடமிருந்து வந்தவையல்ல என்கிறார் யோவான் (1 யோவான் 2:16). இந்த இச்சைகள் பாவத்தின் காரணமாக மனிதனுடைய மனதில் உருவெடுத்து, அவனுடைய சித்தத்தைப் பாதித்து, அவனுடைய சரீரத்தையும் பாவச்செயல்களுக்கு உட்படுத்துகின்றன. விசுவாசி இந்த சிந்தனைப் போக்கிற்கும், செயல்களுக்கும் தன்னை ஒப்புக் கொடுக்கக் கூடாதென்றாலும், பாவத்தின் எச்சங்களைத் தன்னில் கொண்டிருப்பதாலும், பாவ உலகில் வாழ்ந்து கொண்டிருப்பதாலும் அடிக்கடி பாவத்தின் தாக்குதலுக்கு உள்ளாகி அதனால் பாதிக்கப்படலாம். ஆனால், பாவத்தை எதிர்த்துப் போராடி வெற்றி கொள்வதே விசுவாச வாழ்க்கை என்று வேதம் விளக்குகிறது. ஆகவே, உலக ஆசைக்கு தன்னை ஒப்புக் கொடுக்காமல், அதை வெறுத்து, எதிர்த்துப் போராடி கர்த்தருக்குப் பிரியமான பரிசுத்த வாழ்க்கை வாழ வேண்டியது ஒவ்வொரு விசுவாசியினுடையதும் கடமை.*

*உலகத்தின் மீது அன்புகூர்ந்து அதன் வாழ்க்கைத் தத்துவத்திற்கு அடிமைப்பட்டு வாழ்கிறவர்கள் தேவ இராஜ்யத்தை அடைய மாட்டார்கள் என்கிறார் பவுல் (1 கொரி. 6:9, 10). அத்தகைய வாழ்க்கைமுறையிலிருந்து விடுபட்டிருக்கிற விசுவாசிகள் அதற்கு மறுபடியும் தங்களை ஒப்புக்கொடுப்பது அநியாயம். உலக ஆசை பலவிதங்களில் விசுவாசியைப் பாதிக்கின்றது. அவனைக் கர்த்தருக்காக வாழவிடாமல் தடுக்கிறதாய் இருக்கிறது. பலவீனமான விசுவாசிகளின் மூலமும், போதகர்கள், ஊழியக்காரர்கள் மூலமும் திருச்சபைகளுக்குள்ளும் அது நுழைந்து விடுகிறது. அதனால் ஏற்பட்டுள்ள பாதிப்பைத்தான் இன்று உலகத்தைப் பிரதிபலிக்கும் சபை ஆராதனை முறைகளிலும், வியாபார ரீதியிலான ஊழிய முறைகளிலும், பெண்ணாசையாலும், பொருளாசையாலும், மண்ணாசையாலும் விழுந்து போகிற ஊழியக்காரர்களிலும் தமிழ் கிறிஸ்தவ உலகில் பார்க்கிறோம்.*

*"உலக ஆசை நிலைக்காது; தேவனுடைய சித்தத்தின்படி வாழ்கிறவன் மட்டுமே நிலைத்திருப்பான்" என்கிறது வேதம்.*

*(வளரும்)*

# திறமைவாய்ந்த சில திருச்சபைத் தலைவர்கள் - 1

ஆதி சபையின் பொற்காலமாக 4-ம் 5-ம் நூற்றாண்டுகளை வரலாற்றாசிரியர்கள் வர்ணிக்கின்றனர். இக்காலப்பகுதியில் பல சிறப்பான தலைவர்களை திருச்சபை பெற்றெடுத்திருந்தது. ஏற்கனவே அத்தனேசியஸ், அம்புரோஸ் போன்றவர்களைப் பற்றி அறிந்து கொண்டோம். இந்த இதழில் சபை கண்ட மூன்று முக்கிய தலைவர்களில் இருவரைப்பற்றி அறிந்து கொள்ளப் போகிறோம். இவர்களுடைய வாழ்க்கையும், ஊழியமும் 4-ம் நூற்றாண்டுகளில் ஆரம்பமாகி 5-ம் நூற்றாண்டுகளில் முடிந்திருந்தது.

## ஜோன் கிறிசொஸ்தொம் (John Crysostom 344-407)

ஜோன் கிறிசொஸ்தொம் (John Chrysostom) திருச்சபையின் சிறப்பான பிரசங்கிகளில் ஒருவராக இருந்தார் என்று வரலாறு கணிக்கிறது. 344-345-களில் அந்தியோகியாவில் (Antioch) பிறந்தார் கிறிசொஸ்தொம். போர்வீரராக இருந்த தந்தை, கிரிசொஸ்தொம் சிறுவனாக இருந்தபோதே மரித்தததால் கிறிஸ்தவராக இருந்த தாயே கிறிசொஸ்தொம்மை வளர்த்தார். இளம் கிறிசொஸ்தொம் சட்டம் படிப்பதில் ஆர்வம் கொண்டு லைபேனியஸ் என்பவரிடம் சட்டம் பயின்று அவருடைய சிறந்த மாணவனாக இருந்தார். 370-ல் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட கிறிசொஸ்தொம் சட்டத்துறையில் இருந்த ஆர்வத்தைக் கைவிட்டு குருத்துவத்தை நாடினார். அப்பயிற்சியில் கடுமையாக ஈடுபட்டு தன்னைத் தயாரித்துக் கொண்ட கிறிசொஸ்தொம் 370-ல் அந்தியோகியாவுக்கு வந்து அதற்கு அடுத்த வருடமே திருச்சபையில் உதவியாளராக நியமிக்கப்பட்டார். அந்தியோகியாவின் சபைத்தலைவராக இருந்த பிசப் பிளேவியன் (Bishop Flavian) கிறிசொஸ்தொம்மை மூப்பராக 386-ல் நியமித்தார்.

அடுத்த 12 வருடங்களுக்கு அந்தியோகியாவில் கிறிசொஸ்தொம் அற்புதமாக பிரசங்க ஊழியத்தில் ஈடுபட்டார். மக்களால் மிகவும் பாராட்டப்பட்டார். அவர் இறந்த பிறகு மக்கள் அவருக்கு கிறிசொஸ்தொம், அதாவது “பொற்குரலோன்” என்ற பட்டத்தை அளித்தனர். வேதத்தில் இருந்து ஒவ்வொரு வசனமாக வியாக்கியானப் பிரசங்கம் செய்தார் கிறிசொஸ்தொம். அவருடைய பிரசங்கங்கள் நேரடியாகவும், கேட்பவர்களின் பாவங்களை சுட்டிக்காட்டுவதாகவும், முக்கியமாக உலகப்பிரகாரமான வாழ்க்கை வாழ்பவர்களைக் கண்டிப்பதாகவும் இருந்தது. பணக்காரர்களாக இருந்த கிறிஸ்தவர்கள் தங்களுடைய சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்தியதையும் கிறிசொஸ்தொம் கண்டித்துப் பிரசங்கித்தார். இவருடைய பிரசங்கங்களைப் பலர் கேட்டு எழுதிவைத்திருந்தனர். அதன் காரணமாக அவருடைய பிரசங்கங்களில் சங்கீதப்புத்தகத்திலிருந்து 58 பிரசங்கங்களும், மத்தேயு சுவிசேஷத்திலிருந்து 90 பிரசங்கங்களும், யோவானில் இருந்து 80 பிரசங்கங்களும் இன்றும் அச்சில் இருக்கின்றன.

ஓரிகன் (Origen), வேதவசனங்களில் காணப்படும் நேரடி அர்த்தத்தின் அடிப்படையில் பிரசங்கிக்காது உருவகப்படுத்தல் முறையைப் பயன்படுத்திப் பிரசங்கித்திருந்ததை நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம். ஆனால், கிரிசொஸ்-

தொம் அந்த முறையைப் பின்பற்றவில்லை. மாறாக இலக்கண, வரலாற்று அடிப்படையில் வேதப்பகுதிகளை ஆராய்ந்து பிரசங்கிக்கும் முறையை கிறிசொஸ்தொம் பயன்படுத்தினார். வேத வசனங்கள் அவற்றின் மூல மொழிகளான எபிரேயம், கிரேக்கம் ஆகியவற்றில் எந்த நோக்கத்தில், எந்த அர்த்தத்தில் தரப்பட்டிருக்கின்றனவோ அந்த அடிப்படையில் அவற்றின் நேரடியான அர்த்தத்தை இலக்கணபூர்வமாகவும், வரலாற்றுபூர்வமாகவும் விளங்கிக்கொண்டு பிரசங்கங்களை கிறிசொஸ்தொம் தயாரித்தார். பிரசங்கிக்க எடுத்துக்கொண்டுள்ள வேதப் பகுதியில் தரப்பட்டுள்ள போதனைகளின் மூலம் கர்த்தர் ஆத்துமாக்களிடம் எதை எதிர்பார்க்கின்றார் என்பதையும் கிறிசொஸ்-தொம் வலியுறுத்திப் பிரசங்கம் செய்தார். இந்த முறையிலான இலக்கண, வரலாற்று அடிப்படையில் வேதத்தை விளக்கும் முறையையே சீசரியாவின் பெசிலும் (Basil of Caesarea) வற்புறுத்தி வந்திருக்கிறார். அந்தியோகியாவின் திருச்சபை பெசிலினுடையதும், கிறிசொஸ்தொம்மினுடையதுமான வேதவிளக்க முறையையே பின்பற்றி வந்தது. இதனால் வரலாற்று அறிஞர்கள் இந்த வேதவிளக்க முறைக்கு "அந்தியோகிய வேதவிளக்க முறை" என்ற பெயரை அளித்திருந்தனர். ஒரிகனுடைய உருவகப்படுத்திப் பிரசங்கிக்கும் முறையை அலெக்சாந்திரிய சபை பின்பற்றியதால் அதற்கு "அலெக்சாந்திரிய வேதவிளக்க முறை" என்ற பெயர் கொடுக்கப்பட்டிருந்தது.

போதக ஊழியத்தைக் குறித்த ஒரு பிரபலமான நூலையும் (On the Priest-hood) எழுதி வெளியிட்டார் கிறிசொஸ்தொம். அவருடைய ஏனைய எழுத்துக்-கள் எல்லாவற்றையும் விட இந்நூல் அனேக தடவைகள் பிற மொழிகளிலும் கூட மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது.

398-ல் கொன்ஸ்தாந்திநோபிளின் தலைவனாக இருந்த நெக்டாரியஸ் (Nectarius) இறந்தான். அவனுடைய இடத்தைப் பிடிக்கப் பலரும் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். பேரரசனான ஆர்கேடியஸ் கிறிசொஸ்-தொம்மைக் குறித்து தனது மந்திரியின் மூலம் கேள்விப்பட்டு தன்நாட்டுக்கு அவரைக் கொண்டு வரத் தீர்மானித்தான். கிறிசொஸ்தொம்மின் புகழ் இக்-காலத்தில் எங்கும் பரவியிருந்தது. அந்தியோகியாவின் மக்கள் தன் நோக்கத்-திற்கு இடம் கொடுக்கமாட்டார்கள் என்பதை உணர்ந்திருந்த ஆர்கேடியஸ் தன்னுடைய படையை அனுப்பி கிறிசொஸ்தொம்மை சந்திக்க வரும்படி அந்தி-யோகியாவின் கவர்னர் மூலம் அழைப்பு அனுப்பினான். எதையும் சந்தேகிக்-காத கிறிசொஸ்தொம் பேரரசன் அனுப்பியவர்களைப் பார்க்கப்போனபோது அவர்கள் கிரிசொஸ்தொம்மை சிறைபிடித்து கொன்ஸ்தாந்திநோபிளுக்கு கொண்டு சென்றார்கள். கொஸ்தாந்திநோபிளின் மக்கள் கிறிசொஸ்தொம் தங்களுடைய நகரில் பிரசங்க ஊழியத்தை நடத்தும் வாய்ப்பை எண்ணி மகிழ்ந்தனர். கிறிசொஸ்தொம் முதலில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தபோதும் பின்பு வேறு வழியில்லாமல் உடன்பட வேண்டியதாயிற்று.

கொன்ஸ்தாந்திநோபிளின் பிரதான சபையான பரிசுத்த ஞான சபையில் கிறிசொஸ்தொம் பிரசங்கித்தபோது அந்நகர மக்கள் மத்தியில் அவருக்குப் பேரும் புகழும் கிடைத்தது. அதேவேளை, பணபலமும், அதிகார பலமுமுள்ள மோசமான எதிரிகளையும் அவர் தேடிக்கொள்ள நேர்ந்தது. அநீதியும், கேடும், அரசியல் தந்திரங்களும் நிறைந்திருந்த கிழக்குத் தேசத்தின் தலைநகரான கொன்ஸ்தாந்திநோபிளுக்கு கிறிசொஸ்தொம்மின் பரிசுத்தமும், ஒழுக்கமும், கட்டுப்பாடுமுள்ள வாழ்க்கை பொருந்திவரவில்லை. பேரரசன் ஆர்கேடியஸின்

மந்திரிகளினதும், ஊழியர்களினதும் பாவங்களைக் கிறிசொஸ்தொம் கண்டித்தது அவர்களுக்கு பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. முக்கியமாக ஆர்கேடியஸின் அழகிய ஜேர்மன் மனைவியான யூடொக்சியா (Eudoxia) கிறிசொஸ்தொம்மை தீவிரமாக வெறுத்தாள். பழைய ஏற்பாட்டு எசபேலைப் பற்றி கிறிசொஸ்தொம் செய்த ஒரு பிரசங்கத்தை மக்கள் அரசியோடு ஒப்பிட்டுப் பார்த்ததால் அவளுக்கு கிறிசொஸ்தொம் மீது இருந்த வெறுப்பு அதிகரித்தது. கிறிசொஸ்தொம்மின் கண்டிப்பும், நேர்மையும் நிறைந்த விசுவாசமுள்ள பிரசங்கத்தை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி நகரில் இருந்த அதிகாரிகளையும் மற்றவர்களையும் நேர்மையான வாழ்க்கை வாழத்தூண்டியதால் கிறிசொஸ்தொம் நகரிலும் சுற்றி இருந்த பிரதேசங்கள் அனைத்திலும் அனேக எதிரிகளை சம்பாதித்துக் கொண்டார். கிறிசொஸ்தொம்மின் தீவீர எதிரியாக இருந்தவன் தியோபீலஸ் (Theophilus) என்பவன். அலெக்சாந்திரியாவின் அதிகாரியாக 385-ல் இருந்து 412-வரை பணிபுரிந்தான் தியோபீலஸ். 403-ல் கிறிசொஸ்தொம்மின் எதிரிகள் அனைவரையும் ஒன்று சேர்த்து கெல்சிடன் கவுன்சிலைக்கூட்டி கிறிசொஸ்தொம்முக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வற்புறுத்தினான் தியோபீலஸ். அவருக்கு எதிராக பல அநீதியான குற்றச்சாட்டுகள் கவுன்சில் முன்பு கொண்டுவரப்பட்டன. பேரரசன் ஆர்கேடியஸூம் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கிறிசொஸ்தொம்மை நாடுகடத்தினான். சில நாட்களுக்குப் பின்பு கொன்ஸ்தாந்திநோபிளை நிலநடுக்கம் அதிர வைத்தது. கடவுளிடம் இருந்து வந்த தண்டனையாக இதைக் கருதிய பேரரசி யூடோக்சியா பயமடைந்து கிறிசொஸ்தொம்மை மறுபடியும் நகருக்கு அழைத்துவர ஏற்பாடுகள் செய்தாள். நகர் மக்கள் பாதைகள்தோறும் நின்று மலர் பொழிந்து வரவேற்க கிறிசொஸ்தொம் நகர்ப்பிரவேசம் செய்தார். பேரரசனுடனான முதல் போராட்டத்தில் இப்படியாக கிறிசொஸ்தொம்முக்கு வெற்றி கிடைத்தது.

ஆனால், இந்த வெற்றி நிலைக்கவில்லை. 404-ல் யூடோக்சியா வெள்ளியிலான தன்னுடைய உருவச்சிலையை பரிசுத்த ஞான சபைக்கு அருகில் நிறுவினாள். அங்கு நடந்த ஆர்ப்பாட்டங்களால் சபை ஆராதனையை அமைதியாக நடத்த முடியாமல் போனது. இதனால், கிறிசொஸ்தொம் யூடோக்சியாவை யோவான் ஸ்நானனின் தலையைக் கேட்ட ஹெரோடியஸூக்கு ஒப்பிட்டு காரசாரமாக பிரசங்கித்ததால் ஆத்திரமடைந்த யூடோக்சியாவும், ஆர்கேடியஸூம் அவரை பதவி நீக்கம் செய்து ஆர்மீனியாவுக்கு நாடு கடத்தினர். மக்களின் ஆர்ப்பாட்டத்தால் போப் இனொசன்ட் 1 (Pope Innocent I) கிறிசொஸ்தொம்மை விடுவிக்குமாறு ஆர்கேடியஸை வற்புறுத்தினார். ஆனால், பேரரசன் கிறிசொஸ்தொம்மை 407-ல் இன்னும் தூரதேசத்திற்கு நாடு கடத்தினான். போகும் வழியில் வெய்யில் கொடுமையினால் நோயுற்று கிறிசொஸ்தொம் இறந்தார். 438-ல் பேரரசன் தியோடோசியஸ் 11 (Theodosius II 408-50) கிறிசொஸ்தொம்மின் அஸ்தியைக் கொன்ஸ்தாந்திநோபிளுக்கு கொண்டுவந்ததோடு அவருடைய பெற்றோரிடம் கிறிசொஸ்தொம்முக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்காக பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டார்.

கிழக்குப் பேரரசின் சபைத்தலைவர்களில் கிறிசொஸ்தொம் மிகவும் சிறந்த வேத அறிஞராகவும், பிரசங்கியாகவும் இருந்தார். கிழக்குப்பேரரசில் எந்த சபைத்தலைவரும் பேரரசர்களுக்கு எதிராக நிற்க முடியவில்லை என்பதை கிரிசொஸ்தொம்மின் வாழ்க்கையின் முடிவு காட்டுகிறது.

## ஜெரோம் (Jerome 347-420)

ஆதி சபையில் மிகவும் திறமைசாலியான வேதவல்லுனராக இருந்தவர் ஜெரோம். ஸ்டிரைடோனியா (Stridonia) என்ற இடத்தில் (இன்றைய குரொவேசியாவும் சுலொவேனியாவும் Croatia and Slovenia) 347-ல் செல்வமிக்கதொரு குடும்பத்தில் பிறந்தவர் ஜெரோம். தத்துவம், உளவியல், பேச்சாற்றல் ஆகியவற்றில் தேர்ந்த ஜெரோம் 370-ல் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார். 372-ல் மத்திய கிழக்குப்பகுதிகளுக்கு விஜயம் செய்த ஜெரோம் சிரியாவின் பாலைவனத்தில் 374-ல் சந்நியாச வாழ்க்கைக்கு தம்மை ஒப்புக்கொடுத்தார். சிரியாவில் இருக்கும்போது அவர் எபிரேய மொழியைக் கற்றுக்கொண்டார். அக்காலத்தில் கிறிஸ்தவர்களில் ஒருவருக்காவது யூத மொழியான எபிரேயம் தெரிந்திராததால் ஜெரோம் அம்மொழியறிந்த தனித்துவமிக்க மனிதராக விளங்கினார். 379-ல் அந்தியோகியாவில் மூப்பராக நியமனம் பெற்ற பின்பு கொன்ஸ்தாந்திநோபிளுக்குப் போய் அந்நகரின் பிரபலமான கெப்படோசியன் பிதாவாகவிருந்த நாசியேன்சஸின் கிரெகரி (Gregory of Nazianzus) என்பவரிடம் இரண்டு வருடங்களுக்கு இறையியலைக் கற்றார். கிரெகரியும், ஜெரோமும் நல்ல நண்பர்களாக மாறினார்கள். 382-ல் ஜெரோம் ரோம் நகருக்குப் போனபோது அங்கிருந்த போப் டெமாஸ்கஸ் (Pope Damascus 366-384) வேதத்தின் புதிய இலத்தீன் மொழிபெயர்ப்பைக் கொண்டுவரும்படியாக அவரைக் கேட்டுக் கொண்டார். ஜெரோம் அதற்கு இணங்கினார். அந்த மொழிபெயர்ப்பை முடிக்க ஜெரோமுக்கு 23 வருடங்கள் எடுத்தன. ஜெரோமின் காலத்தில் மேற்குப்பகுதியில் வேதத்தின் வேறு இலத்தீன் மொழிபெயர்ப்புகள் காணப்பட்டபோதும் எதுவும் ஜெரோமின் மொழிபெயர்ப்புக்கு ஈடாக இருக்கவில்லை. ஜெரோம் எபிரேய, கிரேக்க மொழிகளில் இருந்த பழைய, புதிய ஏற்பாடுகளை நேரடியாகப் பயன்படுத்தி தனது மொழிபெயர்ப்பைத் தயாரித்தார். 405-ல் அவருடைய மொழிபெயர்பு நிறைவு பெற்றது. ஒரு பெரும் ஆராய்ச்சியின் முடிவாக அமைந்த இந்த மொழிபெயர்ப்பு வல்கேட் (Vulgate) என்ற பெயரால் அழைக்கப்பட்டு மேற்குப்பிரதேச இலத்தீன் பேசும் பகுதிகளில் அங்கீகாரம் பெற்று பயன்படுத்தப்பட்டது. 16-ம் நூற்றாண்டின் சீர்திருத்த காலம்வரை இதுவே அங்கீகரிக்கப்பட்ட இலத்தீன் மொழிபெயர்ப்பாக இருந்தது. வல்கேட் என்ற இலத்தீன் வார்த்தைக்கு "பொதுவானது" என்று அர்த்தம். எல்லோராலும் பொதுவாகப் பயன்படுத்தப்பட கொண்டுவரப்பட்ட மொழிபெயர்ப்பாக இது இருந்தது.

எபிரேய மொழியைக் கற்றபின் ஜெரோமுக்கு ஒரு முக்கியமான உண்மை புலப்பட்டது. செப்டுவாஜின்ட் (Septuagint) என்று அழைக்கப்படும் கிரேக்க மொழிபெயர்ப்பான பழைய ஏற்பாட்டில் காணப்பட்ட சில நூல்கள் யூதர்கள் பயன்படுத்திய எபிரேய மொழியிலிருந்த பழைய ஏற்பாட்டில் காணப்படாததை அவர் உணர்ந்தார். அன்றைய கிறிஸ்தவர்களில் ஒருவருக்காவது எபிரேய மொழி தெரியாததாலும், பெரும்பாலானோர் கிரேக்க மொழி பேசியதாலும் கிரேக்க மொழிபெயர்ப்பான செப்டுவாஜின்ட்டையே சபையில் ஆராதனைக்காகவும், படிப்பதற்காகவும், பிரசங்கத்திற்காகவும் பயன்படுத்தி வந்தனர். ஆனால், ஜெரோம், யூதர்கள் தங்களுடைய எபிரேய மொழியில் இருந்த பழைய ஏற்பாட்டு நூலில் சேர்த்துக் கொண்டிருந்த நூல்களை மட்டுமே திருச்சபை அங்கீகரித்துப் பயன்படுத்த வேண்டும் என்றும், ஏனையவற்றை நிராகரிக்க வேண்டும் என்றும் சொன்னார். அதாவது எபிரேய பழைய ஏற்பாட்டு நூலில்

இருந்த நூல்கள் மட்டுமே செப்டுவாஜின்டிலும் இருக்க வேண்டும் என்றார். பழைய ஏற்பாட்டில் சேர்த்துக் கொள்ளப்படாதிருந்த இந்த நூல்களை சபை தள்ளுபடி ஆகமங்கள் என்று அழைத்தது. இந்நூல்கள் வேதத்துக்கு சமமான அதிகாரத்தைக் கொண்டிராததால் அவற்றைப் பொது ஆராதனைகளில் வாசிக்கக்கூடாதென்று சபை தடைவிதித்திருந்து. இன்று சுவிசேஷக் கிறிஸ்தவர்கள் பயன்படுத்திவருகின்ற பழைய ஏற்பாட்டையே அன்று ஜெரோம் அங்கீகரித்திருந்தார். ரோமன் கத்தோலிக்க டிரென்ட் கவுன்சில் (Council of Trent)) 1546-ல் தள்ளுபடி ஆகமங்களை வேதத்தின் ஒரு பகுதி எனக் கட்டளை பிறப்பித்து அவற்றை நிராகரித்தவர்களை கண்டித்து தண்டித்தது. 16-ம் நூற்றாண்டில் சபை சீர்திருத்தம் ஆரம்பமாவதற்கு முன்பு மத்திய காலப்-பகுதியில் (இருண்ட காலத்தில்) மேற்கு சபை பழைய ஏற்பாட்டில் எந்த நூல்கள் இருக்க வேண்டுமென்பதில் உறுதியான கொள்கையைக் கொண்-டிருக்கவில்லை. இன்று கிரேக்க பாரம்பரியச்சபை தள்ளுபடி ஆகமங்களை வேதத்தின் ஒரு பகுதியாகக் கருதுகிறது. ரஷ்யப் பாரம்பரிய சபையைச் சேர்ந்த அனேகர் அவை வேதத்தோடு சம்பந்தமற்றவை என்றே கருதுகின்றனர்.

ஜெரோம் ரோமில் இருந்தபோது அனேக ரோம செல்வந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களை சந்நியாச வாழ்க்கை வாழ உற்சாகப்படுத்தினார். செல்வந்தர்-கள் இப்படியான சந்தியாச வாழ்க்கை வாழ தங்களுடைய சொத்துக்களைத்-துறந்து சென்றதைப் பார்த்து சமுதாயம் வியந்தது. ரோம சமுதாயத்தின் ஒழுக்கக்கேடான வாழ்க்கை முறையைத்தாக்கிப் பேசி வந்ததால் ஜெரோமுக்கு அங்கு பல எதிரிகள் தோன்றினர். ஜெரோமை ஆதரித்த போப் டெமஸ்கஸ் 384-ல் இறந்த பின்பு தனது சீடர்களோடு ஜெரோம் ரோமைவிட்டு வெளியேறி எருசெலேமுக்கு போய் வாழ்ந்தார்.

386-ல் இருந்து தன்னுடைய இறுதிக்காலம்வரை ஜெரோம் பெத்லகேமில் வாழ்ந்தார். அங்கே எழுதுவதிலும், சந்நியாசிகளுக்கு போதிப்பதிலும் தனது காலத்தை செலுத்தினார். வேதத்தின் பல நூல்களுக்கு விளக்கவுரை எழுதி-னார். அனேக கிரேக்க இறையியல் நூல்களையும் இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தார். இலத்தின் மொழிப் பாண்டியத்தினாலும், எழுத்துத் திறத்தினா-லும் மேற்கு சபைப்பிதாக்களில் ஜெரோம் முக்கிய இடத்தை வகித்தார். அக்காலத்தில் பல இறையியல்கருத்து முரண்பாடுகளிலும் ஜெரோம் பங்கு பெற்றார். பெலேஜியன் கருத்து முரண்பாட்டில் அவர் ஆகஸ்தீனை ஆதரித்தார். இதனால் ஆத்திரமுற்ற பெலேஜியனின் ஆதரவாளர்கள் 416-ல் அவருடைய பெத்லெகேம் குருமடத்தை தீக்கிரையாக்கினர். இதனால் ஜெரோம் இரண்டு வருடங்களுக்கு தலை மறைவாக வாழநேர்ந்தது.

ஜெரோம் சந்நியாச வாழ்க்கையை பெரிதும் ஆதரித்து, திருமணமற்ற தனி வாழ்க்கையே திருமண வாழ்க்கையைவிட சிறந்தது என்று கருதினார். அநேக ரோம் நகரப் பணம்படைத்த பெண்கள் ஜெரோமின் சீடர்களாகி சந்நியாச வாழ்க்கைக்கு தங்களை ஒப்புக்கொடுத்ததோடு, பல மடங்களையும், வைத்திய-சாலைகளையும் கட்டினர்.

ஜெரோம் 420-ம் ஆண்டளவில் பெத்லெகேமில் பார்வையிழந்த நிலையில், நோயுற்று மரணத்தைத் தழுவினார். மேற்கின் கிறிஸ்தவர்கள் மத்தியில் ஹிப்போவைச் சேர்ந்த அகஸ்தீனுக்கு அடுத்தபடியாக ஜெரோமுக்கே அதிக மதிப்பிருந்தது.

# தெய்வீக பராமரிப்பு

**1689**
**அதிகாரம் 5**

*விளக்கவுரை: லமார் மார்டின் (Lamar Martin)*
*தமிழில்: ஆசிரியர்*

***(1689 விசுவாச அறிக்கையின் 5-வது அதிகாரத்திற்கான விளக்கவுரையின் ஆரம்பத்தை ஏப்பிரல்–ஜுன் 2002 இதழில் பார்க்கவும். அவ்வதிகாரத்திற்கான விளக்கவுரையின் இறுதிப்பகுதி இது. 1689 விசுவாச அறிக்கையை இதுவரை பெற்றுக் கொண்டிராதவர்கள் அதனை இந்தியாவிலும், ஸ்ரீ லங்காவிலும் 51-ம் பக்கத்தில் தரப்பட்டுள்ள முகவரிகளில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். திருச்சபைகள் சத்தியத்தில் வளர இந்த விசுவாச அறிக்கை மிகவும் உதவும்.)***

*இந்த அதிகாரத்தின் முதல் மூன்று பத்திகளை இதற்கு முன் ஆராய்ந்தோம். முதலாவது பத்தி தெய்வீக பராமரிப்பு என்றால் என்ன என்பதை விளக்கியது. அதாவது கர்த்தர் தன்னுடைய சிருஷ்டிகளைக் காத்து, வழிநடத்தி, கட்டுப்படுத்தி ஆளுவதே தெய்வீக பராமரிப்பாகும். இந்த முதலாவது பத்தி இரண்டாவதாக கர்த்தரின் பராமரிப்பு அவருடைய சிருஷ்டிகளில் எதையெல்லாம் தொட்டு எந்தளவுக்கு அவற்றைக் கட்டுப்படுத்தி ஆளுகை செய்கிறதென்பதை விளக்கியது. அதாவது, தான் படைத்த அனைத்தையும், பெரியதில் இருந்து சிறியவை வரையும் அனைத்தையும் கர்த்தர் பராமரிக்கிறார் என்பது இரண்டாவது உண்மை. இறுதியாக முதலாவது பத்தி தெய்வீக பராமரிப்பின் இறுதி நோக்கத்தை விளக்கியது. கர்த்தருடைய பராமரிப்பின் இறுதி நோக்கம் இரண்டு அம்சங்களைக் கொண்டிருப்பதாகப் படித்தோம். (1) எதற்காக அனைத்தும் படைக்கப்பட்டனவோ அந்த நோக்கத்தை நிறைவேற்றுதல். (2) பராமரிப்பின் மூலம் கர்த்தரின் ஞானமும், வல்லமையும், நீதியும், எல்லையற்ற நன்மையும், கருணையும் மகிமை அடைதல். சுருக்கமாகக் கூறப்போனால், கர்த்தர் தன்னுடைய மகிமைக்காகவே தான் படைத்த உலகத்தை ஆண்டு, பராமரிக்கிறார் என்று விசுவாச அறிக்கை விளக்குகிறது.*

*இவ்வதிகாரத்தின் 2-ம், 3-ம் பத்திகள் பராமரிப்பிற்காகப் பயன்படுத்தப்படுகின்ற சாதனங்களை விளக்கியது. இவற்றை நினைவுபடுத்திக் கொள்ள மறுபடியும் ஏப்பிரல்-ஜுன் 2002 இதழை ஒருமுறை வாசியுங்கள். இந்தப் பகுதியைப் படிக்கும்போது விசுவாச அறிக்கையையும், வேதப்புத்தகத்தையும் கையில் வைத்துக் கொண்டு வாசித்தால் தொடர்புபடுத்திப் படிக்க மிகவும் வசதியாக இருக்கும்*

*இனி இந்த அதிகாரத்தின் ஏனைய பகுதிகளை சுருக்கமாகப் பார்ப்போம். 4-ல் இருந்து 7-வரையிலான பத்திகளில் 4-6 வரையுள்ளவை, கர்த்தருடைய பராமரிப்பில் நமது பாவங்கள் எவ்வாறு உள்ளடங்கியுள்ளன என்பதை விளக்குகின்றன. 7-வது பத்தி திருச்சபையைப் பற்றி விளக்குவதாக இருக்கிறது.*

## (1) தெய்வீகப் பராமரிப்பில் பாவமும் உள்ளடங்கியிருக்கிறது (4–6 பத்திகள்)

*நான்காவது பத்தி இவ்வாறாக ஆரம்பிக்கிறது: **"கடவுளின் வல்லமையும், கண்டு அறியமுடியாத ஞானமும், எல்லையற்ற நன்மையும் எல்லையற்றதும், அனைத்தையும் உள்ளடக்கியதாயும் இருப்பதால் அவருடைய இறையாண்மையுடைய நோக்கங்களின்-***

*படி முதல் மனிதன் பாவத்தில் விழுந்தமையும், ஏனைய தேவதூதர்களும், மனிதர்களும் பாவத்தில் வீழ்ந்த செயல்களும் நிகழ்ந்தன."* விசுவாச அறிக்கையின் இந்த வார்த்தைகள், கர்த்தர் அனைத்தையும் தோற்றுவித்து, நடத்திப் பராமரித்து மனிதன் செய்கிற அனைத்து நல்ல காரியங்களையும் தன்னுடைய பராமரிப்பில் உள்ளடக்கியிருப்பதோடு அவன் செய்கிற பாவங்களையும் அதில் உள்ளடக்கிக் கொண்டிருக்கிறார் என்கிறது. இதை விளங்கிக் கொள்வதற்கும், ஏற்றுக் கொள்வதற்கும் நமக்குக் கஷ்டமாக இருக்கலாம். ஆனால், இந்த உண்மையைத்-தான் வேதம் போதிக்கின்றது. 1 நாளாகமம் 21:1-ஐ வாசியுங்கள். இதில் இஸ்ர-வேல் படைகளின் எண்ணிக்கையை தாவீது எண்ணுவதைப் பார்க்கிறோம். 7-ம் வசனம் அதற்காக கர்த்தர் இஸ்ரவேலைத் தண்டித்ததாகக் கூறுகிறது. ஏனெனில், தாவீது செய்தது பாவம். 8-ம் வசனம், தாவீதுக்கும் தான் செய்தது பாவம் என்பது தெரிந்திருந்ததாகக் கூறுகிறது. மறுபடியும் 1-ம் வசனத்தைப் பாருங்கள். அங்கே தாவீதைப் பாவம் செய்யத்தூண்டியது சாத்தான் என்று வாசிக்கிறோம். ஆகவே, விசுவாச அறிக்கையின் வாசகங்களின்படி மனித-னுடைய பாவச் செய்கைகளும் கர்த்தரின் பராமரிப்பில் உள்ளடங்கியுள்ளன. சாத்தான் தாவீதைப் பாவம் செய்யத் தூண்டினான். தாவீது சாத்தானின் தூண்டுதலுக்குள்ளாகி பாவம் செய்தான். ஆனால், இதே வேதப்பகுதியோடு தொடர்புடைய 2 சாமுவேல் 24-ஐ ஆராய்ந்து பாருங்கள். முதலாம் வசனத்தில் இஸ்ரவேல், யூதா என்பவர்களை இலக்கம் பண்ணத் தாவீதை ஏவியது கர்த்தர் என்று இருப்பதை வாசிக்கிறோம். 1 நாளாகமம் சாத்தான் தாவீதை ஏவியதாக-வும், 2 சாமுவேல் கர்த்தர் தாவீதை ஏவியதாகவும் சொல்வதைப் பார்க்கிறோம் அல்லவா? இதை வாசித்த பின் வேதத்தில் முரண்பாடு இருக்கிறது என்று முடிவு கட்டிவிடாதீர்கள். அது தவறு. தாவீதின் பாவச்செயல்களும் கர்த்தரின் பராமரிப்பில் அடங்கியிருக்கின்றன என்பதைத்தான் இந்த வசனங்கள் வலியுறுத்துகின்றன. இதையே 1 நாளாகமம் 10-வது அதிகாரத்திலும் பார்க்கலாம். அங்கே 4-ம் வசனத்தில் சவுல் தன்னுடைய ஆயுததாரியைப் பார்த்து மற்றவர்-கள் தன்னை அவமானப்படுத்தாதிருக்க தன்னைக் கொன்றுவிடும்படிக் கூறு-கிறான். ஆயுததாரி பயந்து அப்படி செய்ய மாட்டேன் என்றான். உடனே பவுல் பட்டயத்தை நட்டு அதன் மேல் விழுந்து இறந்தான் என்றிருப்பதாக வாசிக்கிறோம். ஆனால், 14-ம் வசனத்தில் கர்த்தர் சவுலைக் கொன்றதாக வாசிக்கிறோம். இங்கே எந்தவித முரண்பாடுகளும் இல்லை. சவுலினுடைய செய்கை கர்த்தரின் பராமரிப்பில் அடங்கியுள்ளதை வேதம் இந்தவிதமாக எடுத்துக்காட்டுகிறது. இந்த உண்மையை மேலும் விளங்கிக் கொள்ள பின்வரும் வசனங்களையும் ஆராய்ந்து பாருங்கள் - 1 இராஜாக்கள் 22:22, 23. அப்போஸ்தலர் 2:23-ஐ 4:27, 28-டோடு ஒப்பிட்டு வாசியுங்கள்.

இவை எந்தளவுக்கு கர்த்தருடைய பாராமரிப்பில் மனிதனுடைய பாவச்-செயல்களும் உள்ளடங்கியுள்ளன என்பதைப் புலப்படுத்துகின்றன. இந்த உண்மைகளை நாம் சரிவர விளங்கிக்கொள்ள வேண்டுமென்பதற்காக விசுவாச அறிக்கையை எழுதியவர்கள் இன்னுமொரு உண்மையையும் சேர்த்து விளக்கி-யிருக்கிறார்கள். இந்த 4-ம் பத்தி தொடர்ந்து பின்வருமாறு கூறுகிறது: "கடவுள் ***வெறுமனே இவற்றின் நிகழ்வுகளுக்கு அனுமதிகொடாமல், பலவிதங்களில் அவர் பாவத்தை வல்லமையோடும் ஞானத்தோடும் கட்டுப்படுத்தியும், கட்டளையிட்டும், அதிகாரம் செலுத்தியும் தனது பரிசுத்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்."*** "சென்ற காலங்களில் அவர் சகல ஜனங்களையும் தங்கள் தங்கள் வழிகளிலே நடக்கவிட்டிருந்தார்" என்று அப்போஸ். 14:16 சொல்லுகிறது. அதா-

வது, கர்த்தர் வெறுமனே சும்மா இருந்து, மனிதன் பாவம் செய்வதற்கு இடம் கொடுத்து, அதைப் பார்த்துக்கொண்டிராமல், தானே நேரடியாக மனிதன் அவற்றை செய்வதற்கு அனுமதியளித்தும், அவன் மீது அதிகாரம் செலுத்தியும், அவன் செய்யும் காரியங்களை வழிநடத்தியும், எல்லாவிதத்திலும் அவனைக் கட்டுப்படுத்துகிறவராகவும் இருக்கிறார்.

அப்போஸ்தலர் 14:16-ல், "சென்ற காலங்களில் அவர் சகல ஜனங்களையும் தங்கள் தங்கள் வழிகளிலே நடக்க விட்டிருந்தார்" என்று வாசிக்கிறோம். கர்த்தர் மனிதனுடைய செயல்களைக் கட்டுப்படுத்தி ஆளுவதை இவ்வசனம் விளக்குகிறது. அத்தோடு, சங்கீதம் 76:10-ல் சங்கீதக்காரன். "மனுஷனுடைய கோபம் உமது மகிமையை விளங்கப்பண்ணும்; மிஞ்சும் கோபத்தை நீர் அடக்குவீர்" என்று சொல்கிறான். இதிலிருந்து மனுஷனுடைய கோபத்தை கர்த்தர் அடக்குகிறார் என்பதை அறிந்து கொள்ளலாம். தான் நினைத்தபடி மனிதனால் எப்போதும் நடந்துவிட முடியாது. கர்த்தர் அவனைக் கட்டுப்படுத்துகிறார் என்கிறது விசுவாச அறிக்கை. பின்வரும் வசனங்களை வாசித்துப் பார்த்து இந்த உண்மையை மேலும் விளங்கிக் கொள்ளலாம் - 2 இராஜா. 19:28; ஆதி. 45:5; 50:20; ஏசாயா 10:6, 7.

அதிகாரம் 5-ன் நான்காவது பத்தி மேலும் தொடர்ந்து, "**இருப்பினும் இந்நிகழ்வுகளின் பாவம் தேவதூதர்களிடமிருந்தும், மனிதர்களிடமிருந்தும் தோன்றினவேயல்லாமல் மிகப் பரிசுத்தமும், நீதியும் கொண்ட கடவுளிடம் இருந்து தோன்றவில்லை. அவர் பாவத்தின் காரணகர்த்தரோ அல்லது அதை அனுமதிப்பவரோ அல்ல.**" என்று கூறுவதுடன் முடிவடைகிறது. 3-ம் அதிகாரத்தின் முதலாவது பத்தியில் சொல்லப்பட்ட அதே சத்தியத்தை மறுபடியும் இங்கு வலியுறுத்துகிறது விசுவாச அறிக்கை. கர்த்தர் பாவத்திற்கு காரணகர்த்தாவோ அல்லது அதைச் செய்வதில் அவருக்கு எவருடனும் எந்தக்கூட்டும் இல்லை என்றும் கர்த்தரைப் பாவத்திற்கு பொறுப்பாளியாக்க முடியாதென்பதையும் விசுவாச அறிக்கை விளக்குகிறது. பாவங்கள் சிருஷ்டிகளிடம் இருந்து புறப்படுகின்றனவேயன்றி சிருஷ்டிகர்த்தாவிடமிருந்தல்ல. 1 யோவான் 2:16, "ஏனெனில் மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்" என்கிறது. யாக்கோபு 1:13, 14-ல் யாக்கோபு, "சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாமலிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவனவன் தன்தன் சுய இச்சையினால் இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான்" என்கிறார். இந்த இரண்டு உண்மைகளையும் நமது குறைந்தளவான ஞானத்தைக்கொண்டு விளங்கிக் கொள்வது கஷ்டம்தான். ஆனால், கர்த்தரின் பராமரிப்பு மனிதனுடையதும், தூதர்களுடையதுமான பாவச்செயல்களை உள்ளடக்கியிருந்தபோதும் கர்த்தர் அவர்களுடைய பாவங்களுக்கு காரணகர்த்தாவும் இல்லை; அவற்றை ஆதரிப்பவரும் இல்லை என்ற உண்மையை வேதம் விளக்குகிறதை நாம் அறிந்து கொள்வது அவசியம். இந்த இரண்டு உண்மைகளையும் நம்மால் விளங்கிக் கொள்ள முடியாவிட்டாலும் கர்த்தருடைய வார்த்தை அவற்றைப் போதிக்கிறது என்பதை உணர்ந்து சமாதானமடைய வேண்டும்.

இனி 5-வது பத்தியைப் பார்ப்போம். 5-வது பத்தி கர்த்தரே பொதுவாக பாவத்தைக் கட்டுப்படுத்துபவராக இருப்பதோடு, அவர் தன்னுடைய மக்க-

ளுடைய பாவங்களையும் கட்டுப்படுத்தி ஆள்பவராக இருக்கிறார் என்று விளக்குகிறது. "*மகா ஞானமும், நீதியும், கருணையுமுள்ள கடவுள் தன்னுடைய மக்களை அடிக்கடி பலவிதமான சோதனைகளுக்குள்ளாகப் போகும்படியும், அவர்கள் தங்களுடைய சொந்த இருதயத்தின் பாவத்தை அறிந்து கொள்ளவும் அனுமதிக்கிறார். அவர்கள் செய்த பாவங்களுக்காக அவர்களைத் தண்டிப்பதற்காகவும், அவர்களுடைய இருதயங்களில் காணப்படும் பாவத்தின் வல்லமையையும், கபடத்தையும் வெளிப்படுத்தி தாழ்மையைப் படிப்பிப்பதற்காகவும் இதை அவர் செய்கிறார். எல்லா சமயங்களிலும் எப்போதும் அவர்கள் கடவுளில் தங்கியிருக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தி, எதிர்காலத்தில் பாவத்தில் இருந்து அவர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதையும் நோக்கமாகக் கொண்டே அவர் இவற்றைச் செய்கிறார். இவ்விதமாகவும், வேறு பலவிதங்களிலும் அவருடைய நீதியுள்ள பரிசுத்த நோக்கங்கங்கள் நிறைவு பெறுகின்றன. அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களில் நிகழும் அனைத்தும் அவருடைய தீர்மானத்தின்படி அவருடைய மகிமைக்காகவும், அவர்களுடைய நன்மைக்காகவுமே நிகழ்கின்றன.*"

இந்தப்பகுதி பராமரிப்பின் தேவனாகிய கர்த்தர் ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்கு (நிரந்தரமாக அல்ல) தன்னுடைய மக்கள் பாவத்தில் விழவும், தங்களுடைய இருதயங்களின் பாவத்தன்மைகளை அறிந்து கொள்ளவும், அனுமதிக்கிறார் என்ற உண்மையை விளக்குகிறது. இதற்கு விசுவாச அறிக்கை பல காரணங்களை நம்முன் வைக்கின்றது. முதலாவதாக, "அவர்கள் செய்த பாவங்களுக்காக அவர்களைத் தண்டிப்பதற்காகவும், அவர்களுடைய இருதயங்களில் காணப்படும் பாவத்தின் வல்லமையையும், கபடத்தையும் வெளிப்படுத்தி தாழ்மையைப் படிப்பிப்பதற்காகவும் இதை அவர் செய்கிறார். எல்லா சமயங்களிலும் எப்போதும் அவர்கள் கடவுளில் தங்கியிருக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தி, எதிர்காலத்தில் பாவத்தில் இருந்து அவர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதையும் நோக்கமாகக் கொண்டே அவர் இவற்றைச் செய்கிறார். இவ்விதமாகவும், வேறு பலவிதங்களிலும் அவருடைய நீதியுள்ள பரிசுத்த நோக்கங்கங்கள் நிறைவு பெறுகின்றன." என்கிறது விசுவாச அறிக்கை.

விசுவாச அறிக்கை சத்தியத்தைத்தான் விளக்குகிறதா என்பதை அறிந்து கொள்ள 2 நாளாகமம் 32:24-26 வரையிலுள்ள வசனங்களைப் பார்ப்போம். எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்தைச் சந்திக்க நேர்ந்தபோது கர்த்தரிடம் ஜெபித்தான். கர்த்தர் அவனுக்கு ஒரு அற்புதத்தைக் கட்டளையிட்டார். இருந்தும் எசேக்கியா அகங்காரத்தோடு நடந்து கொண்டான். அதனால் கர்த்தரின் கோபத்தை அவனும் அவனுடைய மக்களும் சந்திக்க நேர்ந்தது. எசேக்கியாவும், மக்களும் கர்த்தருக்கு முன் தங்களைத் தாழ்த்தியபடியால் அவருடைய கோபம் எசேக்கியாவின் காலத்தில் அவர்கள் மேல் வரவில்லை என்றிருப்பதை இவ்வசனங்களில் வாசிக்கிறோம். 31-ம் வசனம், பாபிலோனில் இருந்து வந்தவர்கள் தேசத்தில் நடந்த அற்புதத்தைக் கேட்க வந்தபோது, எசேக்கியாவின் இருதயத்தில் இருந்ததை அறியும்படி சோதிப்பதற்காக கர்த்தர் அவனைக் கைவிட்டார் என்று வாசிக்கிறோம். இனி ஏசாயா 39-ஐ வாசித்தால் அங்கே கர்த்தர் தன்னை வியாதியில் இருந்து காத்தபின்பு எசேக்கியா அதை மறந்து பாபிலோனில் இருந்து வந்தவர்களுக்கு இஸ்ரவேலின் சொத்துக்களைக் காட்டியதையும் அதற்குப்பின் நடந்தவைகளையும் வாசிக்கலாம்.

ஆனால், 2 நாளாகமம் 32-ல் எசேக்கியாவின் வாழ்கைக் குறிப்பை வாசிக்கும்போது யூதாவின் நீதியான இந்த அரசனின் வாழ்க்கையில் கர்த்தர் செயல்பட்ட விதத்தை நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது. இதெல்லாம் எசேக்கியாவுக்கு

அப்போது தெரிந்திருக்கவில்லை. எசேக்கியா அகங்காரத்திற்கு இடம் கொடுத்தபோது அவன் தன்னுடைய இருதயத்தின் பாவத்தன்மைகளை முழுவதுமாக அறிந்து கொள்வதற்காக குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்கு கர்த்தர் அவனுடைய அகங்காரச்செயல்கள் வெளிப்படும்படி அவனைக் கைவிட்டார். எசேக்கியா பாபிலோனில் இருந்து வந்தவர்களுக்கு இஸ்ரவேலின் சொத்துக்களைக் காட்டுவான் என்பதும் கர்த்தருக்கு ஏற்கனவே தெரிந்திருந்தது. அது அவன் தன்னுடைய அகங்காரத்தை வெளிப்படுத்தும் ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது. இப்படியாக கர்த்தர் தன்னுடைய மக்களை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அவர்களுடைய சோதனைகளை அனுபவிக்கும்படியாக கைவிடுகிறார் என்ற விசுவாச அறிக்கை போதித்த உண்மையை இப்பகுதி தெளிவுபடுத்துகிறது. இந்தவிதமாக கர்த்தர் தம் மக்களை சோதித்ததை 2 சாமுவேல் 1-ல் தாவீதின் சோதனைகளில் இருந்தும், 2 கொரிந்தியர் 12:7-ல் நாம் வாசிக்கும் பவுலின் சோதனைகளில் இருந்தும், லூக்கா 22:31, 32-ன் மூலம் பேதுருவின் சோதனைகளில் இருந்தும் அறிந்து கொள்ளலாம். இவ்வாறாக கர்த்தர் நமது நன்மைக்காக சில காலத்துக்கு நாம் சோதனைகளை அனுபவிக்கும்படியாக கைவிட்டுவிடுகிறார். ரோமர் 8:28 கூறுவது போல் இறுதியில் அவை எல்லாம் நமது நன்மைக்காகவே நடந்து முடிகின்றன என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இனி இவ்வதிகாரத்தின் 6-ம் பத்தியைப் பார்ப்போம். இப்பத்தி கர்த்தருடைய பராமரிப்பு பொதுவாக பாவத்தையும், தமது மக்களின் பாவச்செயல்களையும் மட்டுமன்றி அநீதிகளை இழைக்கும் மக்களின் பாவச்செயல்களையும் உள்ளடக்கியிருக்கிறது என்பதை விளக்குகிறது. "**நீதியுள்ள நீதிபதியாகிய கடவுள் கேடான, பரிசுத்தமற்ற மனிதர்களை நியாயந் தீர்க்கிறார். அவர்களுடைய பாவத்தினால் அவர்களுடைய இருதயத்தை இருளடையச் செய்து கடினப்படுத்துகிறார். அவர்களுடைய மனதிற்கு அறிவொளி தந்து, இருதயத்தில் கிரியை செய்திருக்கக்கூடிய கிருபையை அவர்கள் அடையமுடியாதபடி தடுத்துக்கொள்வதோடு, வேறு சிலருக்கு அவர் கொடுத்திருந்த வரங்களையும் திரும்ப எடுத்துக் கொள்கிறார். அவர்கள் தங்களுடைய கேடான இருதயத்தின் பாவத்தினால் பாவ சந்தர்ப்பங்களை நாடிப் பயன்படுத்திக் கொள்ளும்படியான சந்தர்ப்பங்களிலும் கடவுள் அவர்களை விடுகிறார். வேறுவிதத்தில் கூறப்போனால், அவர்களில் காணப்படும் உள்ளார்ந்த பாவத்தின் சீரழிவுகளுக்கும், உலகத்தின் சோதனைகளுக்கும், சாத்தானின் வல்லமைக்கும் அவர்களைக் கைவிட்டுவிடுகிறார். இதன் காரணமாக ஏனையோருடைய இருதயங்களை மென்மையாக்கக் கடவுள் பயன்படுத்தும் அதே சாதனங்களை அவர்கள் தங்களுடைய இருதயத்தைக் கடினப்படுத்தப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.**"

இந்தப் பகுதி நமக்குத் தெரிவிக்கின்ற முதலாவது உண்மை, கர்த்தர் நீதியுள்ள நியாதிபதியாக, அநீதியான மனிதர்களின் இதயக்கண்களைக் குருடாக்கி அவர்களுடைய இருதயத்தைக் கடினப்படுத்துகிறார் என்பதாகும். ரோமர் 1:24, 26, 28 ஆகிய வசனங்களை வாசிக்கவும். பராமரிப்பின் தேவன் அநீதியானவர்களை அவர்களுடைய பாவப்போக்கிலேயேவிட்டு தூக்கத்தில் இருப்பவர்களைப் போல இருக்க விட்டுவிடுகிறார் என்பதை ரோமர் 11:7, 8 விளக்குகின்றன. இதையே 6-ம் பத்தியின் பின்வரும் வாசகங்கள் விளக்குகின்றன: "அவர்களுடைய பாவத்தினால் அவர்களுடைய இருதயத்தை இருளடையச் செய்து கடினப்படுத்துகிறார். . . அவர்கள் தங்களுடைய கேடான இருதயத்தின் பாவத்தினால் பாவ சந்தர்ப்பங்களை நாடிப் பயன்படுத்திக் கொள்ளும்படியான சந்தர்ப்பங்களிலும் கடவுள் அவர்களை விடுகிறார். வேறுவிதத்தில் கூறப்போனால், அவர்களில் காணப்படும் உள்ளார்ந்த பாவத்தின்

*சீரழிவுகளுக்கும், உலகத்தின் சோதனைகளுக்கும், சாத்தானின் வல்லமைக்கும் அவர்களைக் கைவிட்டுவிடுகிறார்.'' சங்கீதம் 81:11-12-ம் இதையே சுட்டிக்காட்டுகின்றது: "என் ஜனமோ என் சத்தத்துக்கு செவி கொடுக்கவில்லை. .. . ஆகையால் அவர்களுடைய இருதயத்தின் கடினத்துக்கு விட்டுவிட்டேன்; தங்கள் யோசனைகளின்படியே நடந்தார்கள்.'' 2 தெசலோனிக்கேயர் 2:8-11 வரையுள்ள வசனங்களும் இதே உண்மையைத்தான் விளக்குகின்றன.*

*இந்த 6-ம் பத்தியின் இறுதிப்பகுதி, "**இதன் காரணமாக ஏனையோருடைய இருதயங்களை மென்மையாக்கக் கடவுள் பயன்படுத்தும் அதே சாதனங்களை அவர்கள் தங்களுடைய இருதயத்தைக் கடினப்படுத்தப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.**'' என்று முடிகின்றது. இது தேவபயத்தோடு சிந்தித்து வாசிக்க வேண்டிய உண்மை. எந்தக் கிருபையின் சாதனங்களைப் பயன்படுத்தி கர்த்தர் சிலருடைய இருதயங்களை மென்மைப்படுத்துகிறாரோ அதே சாதனங்கள் அநீதியானவர்களின் இருதயங்களை மேலும் கடினமாக்குவதற்கு கர்த்தரால் பயன்படுத்தப்படுகின்றன. பவுல் 2 கொரிந்தியர் 16-ல் "கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்துக்கேதுவான மரண வாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான வாசனையாகவும் இருக்கிறோம்'' என்று இதைக்குறித்துத்தான் சொல்கிறார். ஏசாயா 8:14, 1 பேதுரு 2:6-8 ஆகிய வசனங்களும் இதே உண்மையை விளக்குகின்றன.*

## (2) தெய்வீகப் பராமரிப்பில் திருச்சபை (7-ம் பத்தி)

*இறுதியாக இந்த அதிகாரத்தின் 7-வது பத்தி திருச்சபையைக் குறித்துப் பேசுகிறது. "**கடவுளின் பொதுவான பராமரிப்பு எல்லாப் படைப்புயிர்களையும் அடைகின்றது. ஆனால், மிகச்சிறப்பான விதத்தில் அது அவருடைய திருச்சபையின் நலனுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. திருச்சபையின் நலனுக்காக அனைத்தும் தேவ பராமரிப்பினால் கட்டுப்படுத்தப்படுகின்றன.**'' கர்த்தர் பெரியதில் இருந்து சிறியதுவரை தான் படைத்த அனைத்தையும் ஆண்டும், பராமரித்தும் வந்தபோதும் அவருடைய முழுக்கவனமும் திருச்சபையின் நலத்திலேயே இருக்கின்றது. இந்த உண்மையை 2 நாளாகமம் 16:9-ல் பார்க்கலாம். "தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது'' என்று தீர்க்கதரிசியாகிய அனானி அரசனாகிய ஆசாவிடம் கூறுகிறான். கர்த்தருடைய அக்கறை அவருடைய திருச்சபையின் மீதிருப்பதாக அனானி கூறுகிறான்.*

*இதை விளக்கும் இன்னுமொரு வேத வசனம் நீதிமொழிகள் 2:7, 8: "அவர் நீதிமான்களுக்கென்று மெய்ஞானத்தை வைத்திருக்கிறார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு அவர் கேடயமாயிருக்கிறார். அவர் நியாயத்தின் நெறிகளைத் தற்காத்து, தம்முடைய பரிசுத்தவான்களின் பாதையைக் காப்பாற்றுகிறார்.'' இதே உண்மையை ஏசாயா 43:1-ம் பார்க்கிறோம். புதிய ஏற்பாட்டில் ரோமர் 8:28 இதை அழகாக விளக்குகிறது. 1 தீமோத்தேயு 4:10, "எல்லா மனிதருக்கும் விசேஷமாக விசுவாசிகளுக்கு இரட்சகர் இயேசு'' என்கிறது. இந்த வசனங்கள் எல்லாவற்றையும் ஆண்டும், கட்டுப்படுத்தியும், பராமரித்தும் வருகிற கர்த்தர் தன்னுடைய மக்களுக்கு சிறப்பான விதத்தில் இரட்சகராகவும் இருக்கிறார். வேறு எவரையும் கவனிக்காதவிதத்தில் தன்னுடைய மக்களை அவர் போஷித்து வருகிறார். அவருடைய திட்டத்தில் அதிமுக்கியமான இடத்தை அவருடைய திருச்சபையே வகிக்கிறது. இது நமக்கு மிகவும் ஆறுதலளிக்கும் சத்தியம்.*

# ஜொனத்தன் எட்வர்ட்ஸ்

ஜொனத்தன் எட்வர்ட்ஸ் (Jonathan Edwards) அமெரிக்காவில் கொனெடிகெட் மாநிலத்தில் அக்டோபர் 5-ம் திகதி 1703-ல் பிறந்தார். அவருடைய தந்தை ஒரு கொங்கிரிகேஷனல் சபையில் (Congregational church) 64 வருடங்கள் போதகராக இருந்தார். அவருடைய தாயார் மசசுசெட்ஸ் மாநிலத்தில் (Massachussetts) இருந்த நொர்தாம்டன் (Northampton) என்ற ஊரில் இருந்த சபையின் போதகரான சொலமன் ஸ்டொடரின் (Solomon Stoddar) மகள். இத்தனையையும் பார்க்கிறபோது நிச்சயமாக ஜொனத்தன் எட்வர்ட்ஸ் கிறிஸ்தவனாக வராமலும், ஊழியத்துக்கு வராமலும் இருக்க முடியாது என்று தீர்மானித்து சிறுவயதிலேயே கர்த்தருக்கு அவரை அர்ப்பணித்திருப்பார்கள் இந்திய கிறிஸ்தவர்கள். கிறிஸ்தவமோ, போதக ஊழியமோ குடும்பச் சொத்து இல்லை. குடும்பப் பாரம்பரியத்தின் மூலம் ஒருவர் கிறிஸ்தவராகவோ போதகராகவோ வரமுடியாது. எத்தனை பெரிய ஆத்மீக வளமுடைய குடும்பத்தில் பிறந்திருந்தாலும், எத்தனை பெரிய போதகருக்கு மகனாக இருந்தாலும் ஒவ்வொரு மனிதனும் தானாக கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்து, அவரால் அழைக்கப்பட்டால் மட்டுமே போதக ஊழியத்திற்கு வரமுடியும். கர்த்தர் செய்ய வேண்டிய காரியத்தை மனிதன் செய்ய முடியாது.

ஜொனத்தன் எட்வர்ட்ஸ் 1721-ம் ஆண்டில் கர்த்தரை விசுவாசித்தார். சிறுவயதில் தன்னுடைய தந்தையின் சபைக்குப் போய்வந்தபடியால் அவருக்கு கர்த்தரில் நாட்டம் ஏற்பட்டிருந்தது. ஆனால், கல்லூரிக்குப் போய்வரும் காலத்தில்தான் அவருக்கு பாவத்தைப் பற்றிய உணர்வுகளும், மனந்திரும்புதலும், கிறிஸ்துவில் அன்பும் ஏற்பட்டன. கிறிஸ்துவை விசுவாசித்த பின்பு 1722-ம் ஆண்டில் அவருக்கு பிரசங்கம் செய்வதற்கு சபையின் அனுமதி கிடைத்தது. என்னடா! ஒருவருடத்திலேயே அவருக்கு ஊழியமா? என்று சிலர் அங்கலாய்க்கலாம். இன்று கிறிஸ்துவை விசுவாசித்த மூன்று மாதத்திலேயே பலர் சொந்தமாக சபை அமைக்கப் போய்விடுகிறார்கள். ஆனால், அந்தக் காலத்தில் சாதாரண மனிதன் அதிக வேத ஞானமுள்ளவனாக இருந்தான். குடும்பத்திலும், சபை மூலமாகவும் அதிக வேத ஞானத்தை மக்களால் பெற்றுக் கொள்ள முடிந்தது. எட்வர்ட்ஸ் வாழ்ந்த காலம் வேத பண்டிதர்களான பியூரிட்டன்களின் காலம் என்பதை மறந்துவிடக் கூடாது. அதுவும் போதகரின் குடும்பத்தில் பிறந்து, சிறுவயதிலேயே அதிக வேத ஞானத்தையும், பின்பு உறுதியான விசுவாசத்தையும், சிந்திக்கும் திறனையும் கொண்டிருந்த எட்வர்ட்ஸ் ஒருவருடத்தில் பிரசங்கிக்க ஆரம்பித்ததில் ஆச்சரியமில்லை. பவுல், ஸ்பர்ஜன் போன்றோரின் வரிசையில் வைத்துப் பார்க்கப்பட வேண்டியவர் எட்வர்ட்ஸ். எட்வர்ட்ஸ் விசுவாசித்த ஒருவருடத்தில் பிரசங்கம் செய்தார் என்று நாமும் புறப்பட்டுவிடக்கூடாது. உலகத்தில் சாதாரண மனிதர்கள் தான் அதிகம்; எட்வர்ட்ஸைப் போன்ற அசாதாரண மனிதர்கள் ஆயிரத்தில் ஒருவரே.

1721-ல் பிரசங்கிக்க ஆரம்பித்தாலும் இன்னும் நான்கு வருடங்களுக்கு எட்வர்ட்ஸ் கடுமையாகப் படிக்க வேண்டி இருந்தது. அதற்குப்பிறகு 1726-ல் தன்னுடைய தாத்தாவுக்கு உதவிப்போதகராக அவர் சபையில் நியமிக்கப்-

பட்டார். 1727-ல் தனது 24-ம் வயதில் அவர் ஆண்டவருடைய அழைப்பை ஏற்று போதக ஊழியத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டார். அதே வருடத்தில் அவர் சேரா பியர்பொன்ட் (Sara Piorpont) என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். இப்படியாக அமெரிக்கா பெற்றெடுத்த மிகப்பெரிய இறையியல் அறிஞன் என்று அழைக்கப்படும் ஜொனத்தன் எட்வர்ட்ஸின் ஊழியம் ஆரம்பமானது.

1726-ல் எட்வர்ட்ஸின் தாத்தா சொலமன் ஸ்டொடார்டுக்கு 83 வயதாயிருக்கும் போது எட்வர்ட்ஸ் அவருக்கு உதவிப்போதகரானார். ஸ்டொடார்டின் ஊழியம் பல ஆசீர்வாதங்களைப் பெற்றிருந்தபோதும் சபையில் ஒரு பிரச்சனை காணப்பட்டது. இது திருவிருந்து சம்பந்தமான பிரச்சனையாக இருந்தது. சபையில் வெகு சிலரே திருவிருந்து எடுப்பதற்கு முன்வந்தனர். இதனால் சலனமடைந்த ஸ்டொடார்ட், ஓரளவுக்கு கிறிஸ்தவத்தை பற்றிய அறிவிருந்து ஒழுக்கமான வாழ்க்கை வாழ்கிறவர்களை எல்லாம் திருவிருந்து எடுப்பதற்கு அனுமதித்தார். இதனால் திருவிருந்து எடுப்பதற்கு ஒருவர் ஏற்கனவே கிறிஸ்துவை விசுவாசித்திருக்க வேண்டும் என்ற நிலமை மாறி திருவிருந்தின் மூலம் விசுவாசத்தை அடையலாம் என்ற எண்ணப் போக்கு சபையாரிடம் ஏற்பட்டது. 1727-ல் ஜொனத்தன் எட்வர்ட்ஸ் சபையில் உதவிப் போதகராக சேர்ந்தபோது இந்த முறையே தொடர்ந்தும் இருந்தது. ஸ்டொடார்ட் இறந்தபின் இது எட்வர்ட்ஸுக்கு பெரும் பிரச்சனையை உருவாக்கியது. 1729-ல் எட்வர்ட்ஸ் சபையின் போதகராக பதவியேற்றார்.

எட்வர்ட்ஸ் இயற்கையிலேயே அதிக திறமைசாலியாகவும், சிந்தனையாளராகவும் இருந்தார். அதேவேளை தன்னுடைய பாவத்தைக் குறித்தும் பலவீனங்களைக் குறித்தும் உணர்வுள்ளவராகவும் இருந்தார். ஒவ்வொரு நாளும் ஜெபத்தில் தன்னுடைய பாவங்களுக்காக மன்னிப்புக் கேட்டு கர்த்தரின் கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு வாழ உறுதிபூண்டு அவருடைய துணையை நாடினார். இதற்காக எட்வர்ட்ஸ் ஒரு குறிப்புப் புத்தகத்தில் தான் ஒவ்வொரு நாளும் கர்த்தருக்காக செய்யவேண்டிய காரியங்களை எழுதி வைத்து படுக்கப்போகுமுன் அவற்றை நிறைவேற்றியிருக்கிறேனா என்று மனத்தூய்மையுடன் ஆராய்ந்து கர்த்தரிடம் ஜெபத்தில் வந்தார். அந்தளவுக்குத் தன்னுடைய பரிசுத்த வாழ்க்கையில் எட்வர்ட்ஸ் அக்கறை செலுத்தி, அன்றாடம் மனத்தூய்மையுடனும், பரிசுத்தத்துடனும் வாழ்வதில் அக்கறை செலுத்தினார்.

1731-ல் தன்னுடைய 28-வது வயதில் பொஸ்டனில் பிரசங்கம் செய்ய எட்வர்ட்ஸுக்கு அழைப்பு வந்தது. 1 கொரிந்தியர் 1:29-31 ஆகிய வசனங்களின் அடிப்படையில் எட்வர்ட்ஸ் செய்த பிரசங்கம் அவரது பிற்கால ஊழியங்களுக்கெல்லாம் அடிப்படையாக அமைந்தது. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய இரட்சிப்பிற்கும், விசுவாசத்திற்கும் கர்த்தரிலேயே முழுமையாகத் தங்கியிருக்க வேண்டும் என்று எட்வர்ட்ஸ் பிரசங்கித்தார். 1734-1735-களில் நொர்தாம்டன் சபை கர்த்தரின் எழுப்புதலைச் சந்தித்தது. இதைத்தொடர்ந்து 1739-ல் ஏற்பட்ட எழுப்புதல் நொர்தாம்டனையும் தாண்டி ஏனைய பகுதிகளையும் பாதித்தது. இது பெரும் எழுப்புதல் (Great Awakening) என்று அழைக்கப்பட்டது. இந்த எழுப்புதலுக்கும் இன்று நாம் கேள்விப்படும் பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் எழுப்புதல்களுக்கும் பெரிய வித்தியாசமுண்டு. இன்று நாம் கேள்விப்படுவது வெறும் மாம்சத்தை அடிப்படையாகக் கொண்ட மனித உணர்ச்சிப் பிரவாகம் மட்டுமே. ஆவியின் பெயரில் மனிதன் செய்யும் காரியம் இது. ஆனால்,

*எட்வர்ட்சின் காலத்தில் 18-ம் நூற்றாண்டில் ஏற்பட்ட எழுப்புதல் இறையாண்மையுள்ள கர்த்தருடைய மெய்யான எழுப்புதலாய் இருந்தது. அது எப்படி என்று நீங்கள் கேட்கலாம். அதற்குரிய இரண்டு காரணிகளை நாம் சுட்டிக் காட்ட முடியும்.*

*(1) முதலில், இது ஆவியின் கிரியையாக இருந்தது. அன்று அனேகர் தங்களுடைய பாவங்களை உணர்ந்து வருந்தி கிறிஸ்துவின் இரட்சிப்பை மெய்யாக நாடினார்கள். அனேகருடைய மனந்திரும்புதல் வெறும் மாயையாக இல்லாமல் கண்ணீரோடும், பெரும் பாரத்தோடும் ஏற்பட்டதாக இருந்தது. கர்த்தருடைய பிரசன்னத்தில் மனந்திரும்பிவர்கள் தங்கள் இரட்சிப்பிற்காக அவரைத்துதித்து ஆனந்தக் கண்ணீர் விட்டார்கள். பெந்தகொஸ்தே இயக்கங்கள் எதிர்பார்ப்பதுபோல் ஒருவரும் அன்று அந்நியபாஷையையோ, தீர்க்கதரிசனத்தையோ பேசவில்லை. எட்வர்ட்ஸ், பெனி ஹின்னைப் போல எவரையும் நிலத்தில் பிடித்து தள்ளவில்லை. ஒருவரும் கரடியாய்க் கத்தவோ, பித்தர்களைப்போல சிரிக்கவோ இல்லை. ஆவியின் தூய்மையான வல்லமையினால் அனேகர் தங்களுடைய பாவத்தை உணர்ந்து கர்த்தரிடம் சரணடைந்தனர். அதேவேளை பிசாசும் இந்த எழுப்புதல் காலத்தில் தன்னுடைய வேலையைக் காட்டாமல் இருக்கவில்லை. அதனால், மெய்யான கிறிஸ்தவம் என்றால் என்ன? என்றும், மெய்யான ஆவியின் வல்லமைக்கு அடையாளம் என்ன? என்றும் பலரும் அறிந்து கொள்ளும்படியாக விளக்கி எட்வர்ட்ஸ் ஒரு நூலை எழுதினார். மெய்யான மனந்திரும்புதல் இல்லாத இடத்தில் ஆவியின் கிரியை இருக்காது என்பது எட்வர்ட்ஸின் அசைக்க முடியாத நம்பிக்கையாயிருந்தது. இன்று எழுப்புதல் என்ற பெயரில் போலித்தனமான பித்தலாட்டங்களைத்தான் பார்க்க முடிகின்றதே தவிர மெய்யான மனந்திரும்புதலையும், பாவத்தைவிட்டு விலகியோடுகிறவர்களையும் பார்க்க முடியாதிருக்கின்றது.*

*(2) அன்று வல்லமையான பிரசங்கத்தை மக்களால் கேட்க முடிந்தது. அன்றைய பிரசங்கம் அறிவுபூர்வமான பிரசங்கமாக மட்டும் இருக்கவில்லை. ஜொனத்தன் எட்வர்ட்ஸ் ஒரு சிந்தனையாளர், ஞானி, வேதமறிந்த அறிஞன், நல்ல பிரசங்கி. இருந்தபோதும் இத்தனைக்கும் மேலாக எட்வர்ட்ஸின் ஊழியத்தில் இன்னுமொன்றும் காணப்பட்டது; அதுதான் ஆவியின் வல்லமை. அவருடைய பிரசங்கங்கள் அறிவுபூர்வமாக இருந்ததோடு ஆவியின் வல்லமையோடும் கொடுக்கப்பட்டதாக இருந்தது. அவற்றைக் கேட்டவர்கள் கூட்ட முடிவில் தங்களுடைய இருதயம் கிழிக்கப்பட்டு, பாவங்கள் உணர்த்தப்பட்டு நியாயத்தீர்ப்பு நாளில் கர்த்தருக்கு முன் நிற்பதுபோன்ற உணர்வை அடைந்தனர். இது எட்வர்ட்ஸின் பிரசங்கங்கள் எந்தளவுக்கு ஆவியானவரால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தது என்பதற்கு எடுத்துக்காட்டு. இன்றைய பிரசங்கங்களில் போதனைகள் இல்லை; அவை ஆத்துமாக்களை சிந்திக்க வைப்பதாக இல்லை; ஆவியின் வல்லமையும் அவற்றில் இல்லை. போலித்தனமான மனித மாம்ச செய்கைகளுக்கு இன்று எழுப்புதல் என்ற பெயர் கொடுக்கப்படுகிறது. நல்ல பிரசங்கங்கள் மட்டும் எழுப்புதலுக்கு காரணமாக இருந்துவிடாவிட்டாலும் ஆவியின் வல்லமை இருக்கின்ற இடங்களில் நிச்சயம் நல்ல பிரசங்கங்கள் இருக்கும் என்பதற்கு எட்வர்ட்ஸின் பிரசங்கங்களும், ஊழியமும் நல்ல உதாரணம்.*

*எட்வர்ட்ஸின் ஊழியத்தைக் கர்த்தர் ஆசீர்வதித்து எழுப்புதலை உண்டாக்கியபோது நொர்தாம்டனிலும், நியூ இங்கிலாந்திலும் மனந்திரும்பியவர்களில் பெரும் தொகையினர் இருபத்தாறு வயதிற்கும் குறைந்தவர்களாக இருந்தனர்.*

இந்த எழுப்புதலின் காரணமாக எட்வர்ட்ஸுக்கு அநேக சபைகளில் இருந்து பிரசங்கிக்க வருமாறு அழைப்பு வந்தது. எட்வர்ட்ஸின் எழுப்புதல் கூட்டங்களில் இங்கிலாந்தின் பெரும் பிரசங்கியான ஜோர்ஜ் விட்பீல்டும் (George Whitefield) பல தடவைகள் பிரசங்கம் செய்திருக்கிறார். இவர்கள் இருவரும் நல்ல நண்பர்கள்; ஊழியத்தில் பங்காளிகள்; சீர்திருத்த அறிஞர்கள்.

இத்தனை அற்புதமான எழுப்புதலைத் தன் வாழ்நாளில் எட்வர்ட்ஸ் கண்டிருந்தபோதும் அவருடைய ஊழியம் பிரச்சினைகளை சந்திக்காமல் இருக்கவில்லை. 1744-ல் அவர் தன்னுடைய சபையில் பெரும் பிரச்சினைகளை சந்திக்க நேர்ந்தது. அப்பிரச்சினைகளால் அவர் இறுதியில் சபையில் இருந்து நீக்கப்பட்டார். இதற்கு எட்வர்ட்ஸின் தாத்தா ஸ்டொடரின் காலத்தில் இருந்து திருவிருந்து கொடுப்பதில் சபை பின்பற்றிய முறை பெருங்காரணமாக இருந்தது. சபையில் இருந்த அனேகர் திருவிருந்து பெறும் தகுதியில்லாதவர்கள் என்று எட்வர்ட்ஸ் நம்பினார். அவருடைய நம்பிக்கையில் எந்தத் தப்பும் இல்லை. ஆனால், தவறாக வெறும் கிறிஸ்தவ அறிவைக்கொண்டிருந்தவர்களுக்கெல்லாம் திருவிருந்து கொடுக்கப்பட்டு வந்த முறையை அவர் மாற்றி மெய்யாக மனந்திரும்பியவர்களுக்கு மட்டும் திருவிருந்து கொடுக்க ஆரம்பித்ததால் பலர் அவருக்கு எதிராகக் கிளம்பினர். 1750-ல் சபையில் 230 பேர் அவருக்கு எதிராகவும் 23 பேர் மட்டுமே அவருக்கு ஆதரவாகவும் வாக்களித்தனர்.

அதற்குப்பிறகு எட்வர்ட்ஸ் ஸ்டொக்பிரிட்ஜ் (Stockbridge) என்ற இடத்தில் இருந்த சபையில் போதகராக சேர்ந்தார். இங்கிருந்தே 1751-ல் அவர் அமெரிக்க இந்தியர்களுக்கு சுவிசேஷம் சொல்லும் ஊழியத்தைத் தொடங்கினார். இந்த சபையில் இருந்த காலத்தில் ஜொனத்தன் எட்வர்ட்ஸ் மன அமைதி மிக்க ஊழியத்தைக் அநுபவித்திராவிட்டாலும் இங்கிருந்தபோதே அவருடைய அருமையான போதனைகளில் பெரும்பாலானவை நூலுருவம் பெற்றன. ஜோன் பனியன் பன்னிரண்டு வருடங்கள் சிறையிலிருந்த காலத்திலேயே மோட்ச பயணத்தை எழுதினார். தன்னுடைய ஊழியக்காரர்களைக் கர்த்தர் துன்பங்களுக்கு மத்தியிலேயே அதிகமாக ஆசீர்வதித்திருப்பதை வேதமும் சுட்டிக் காட்டுகிறது. 1751-ல் பிரின்ஸ்டன் கல்லூரியின் தலைமைப்பதவி எட்வர்ட்ஸை வந்தடைந்தது. ஆனால், அவர் அதில் அதிக காலம் வாழ முடியாதபடி அம்மை நோயினால் பாதிக்கப்பட்டு 1758, மார்ச் மாதம் 28-ல் இறைவனடியைச் சேர்ந்தார்.

ஜொனத்தன் எட்வர்ட்ஸின் எழுத்துகள் இன்றும் பலருக்கும் ஆசீர்வாதமாக இருக்கின்றன. "தேவ கோபமுள்ள கர்த்தரின் கையிலிருக்கும் பாவிகள்" என்ற தலைப்புக்கொண்ட எட்வர்ட்ஸின் பிரசங்கம் கர்த்தரால் பெரிதும் ஆசீர்வதிக்கப்பட்டு இன்றும் அனேகருக்கு ஆசீர்வாதமாக இருந்து வருகின்றது. எட்வர்ட்ஸின் எழுத்துக்கள் தொகுக்கப்பட்டு பல தொகுதிகளாக தொடர்ந்தும் ஆங்கிலத்தில் அச்சில் இருந்து வருகின்றன. அவருடைய பல ஆக்கங்களை உள்ளடக்கியதாக இருந்த இரண்டு முக்கிய தொகுதிகள் நாற்பது வருடங்களுக்கு தொடர்ச்சியாக அச்சிடப்பட்டு இன்றும் அச்சில் இருக்கின்றன.

ஜொனத்தன் எட்வர்ட்ஸ் அமெரிக்கா பெற்றெடுத்த அருமையான தேவ ஊழியர். மெய்யான பிரசங்க ஊழியத்திற்கு எட்வர்ட்ஸின் ஊழியம் இலக்கணம் வகுத்தது. தன் வாழ்நாளில் ஊழியத்தில் எழுப்புதலைச் சந்தித்திருந்த போதும் தாழ்மையையும், தேவ பயத்தையும் கொண்டு கர்த்தரின் மகிமைக்காக மட்டும் உழைத்த சிறந்த மனிதர் ஜொனத்தன் எட்வர்ட்ஸ்.

# அன்றாட வேதவாசிப்பு

வேத வாசிப்பு கிறிஸ்தவனுக்கு அன்றாட உணவைப் போல அவசியமானது. வேதத்தைத் தொடர்ச்சியாகவும், மெதுவாகவும், முழுமையாகவும் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளாதவர்கள் கிறிஸ்தவ வாழ்க்கையைப் பிரச்சனைகளில்லாமல் வாழ்ந்துவிட முடியாது. வாழ்க்கைப் பிரச்சனைகளை தைரியத்தோடு சந்திக்க உதவுவதே வேதம்தான். வேத வாசிப்பு இல்லாமல் ஆத்மீக வளர்ச்சி அடைய முடியாது. கர்த்தரோடு நாம் ஐக்கியத்தில் வரத் துணைசெய்யும் வேத வாசிப்பிற்கு ஒரு நாளில் ஐந்து நிமிடத்தை மட்டும் ஒதுக்குவதால் எந்தப் பயனுமில்லை. அதையும் கூட செய்யப் பலருக்கு சோம்பேறித்தனமாக இருக்கிறது. ஆவியின் அபிஷேகம் வேண்டும் என்று அலைந்து கொண்டிருக்கும் அனேகர் வேதத்தை ஆராய்ந்து படிப்பதில் நேரத்தை செலவிடுவதில்லை. ஆவிக்கும், வேதத்திற்கும் தொடர்பில்லை என்று இவர்கள் நினைக்கிறார்கள் போலிருக்கிறது. இதெல்லாம் இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தில் நாம் அன்றாடம் கவனிக்கும் விஷயங்கள்.

### வேதவாசிப்பின் அவசியம்

*கிறிஸ்துவை நேசிக்கிறவர்கள் வேதத்தை நேசிப்பார்கள். அதை ஒவ்வொரு நாளும் நீண்ட நேரம் வாசிப்பார்கள். அதை வாசிப்பதன் மூலமே அவர்கள் கர்த்தரோடு நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொள்கிறார்கள், ஆவியில் வளருகிறார்கள். வேதத்தை வாசிப்பதற்கு ஒருவனுக்கு நேரமில்லை என்றால் கிறிஸ்துமேல் அவனுக்கு இருக்கும் அன்பு குறைந்திருக்கிறது என்றுதான் அர்த்தம். தன் மனைவியோடு தனித்திருந்து பேசுவதற்கு ஒருவனுக்கு நேரமில்லாவிட்டால் அவனுக்கு தன் மனைவி மேல் இருக்கும் அன்பு குறைந்துவிட்டது என்றுதானே சொல்லுவோம். அதுபோல்தான் இதுவும். கர்த்தரோடு ஐக்கியத்தில் வர உதவும் வேத வாசிப்புக்கான நேரம் நம் வாழ்வில் குறைவதால்தான் நாம் பலவிதமான இடர்களை வாழ்க்கையில் சந்திக்க நேர்கிறது. பலவீனமான கிறிஸ்தவர்களாக, இருதயத்தில் பலவிதமான சந்தேகங்களுடன் நாம் வாழ்வதற்கும் அதுதான் காரணம். சபை மக்களோடு நமக்கிருக்கும் ஐக்கியம் குறைவதற்கும், சபைக் காரியங்களைச் செய்ய உற்சாகமில்லாமல் போவதற்கும், சுவிசேஷத்தைச் சொல்ல ஆர்வமில்லாமல் இருப்பதற்கும் அடிப்படைக் காரணம் கர்த்தரோடு ஐக்கியத்தில் வரும் நேரத்தை (வேத வாசிப்பை) நாம் அலட்சியப்படுத்துவதுதான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.*

### தொடர்ச்சியாக வாசிக்க வேண்டும்

*ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் வாழ்க்கையில் அதிகமான நேரத்தை ஒவ்வொரு நாளும் வேதவாசிப்பிற்கு கொடுக்க வேண்டும். அதில்லாமல் நீங்கள் வாழவே முடியாது. அதை எங்கிருந்து, எப்படிச் செய்கிறீர்கள் என்பதல்ல முக்கியம். நேரமெடுத்து நீங்கள் வேதத்தை வாசிக்காமலிருக்கக்கூடாது. வாசிக்க நேரமில்லை, வாசிக்கத் தடை ஏற்படுகிறதென்றால் ஆபத்து அருகில் நெருங்கி வருகிறது என்பதை ஒவ்வொரு கிறிஸ்தவனும் உணர வேண்டும். காலையில் ஒரு அத்தியாயம், மாலையில் ஒரு அத்தியாயம் என்று பழைய, புதிய ஏற்பாடுகளை வாசிப்பது அவசியம். அப்படி அன்றாடம் வாசிக்கின்றபோது தான் கர்த்தருடைய வேதத்தோடு நமக்குப் பரிச்சயம் ஏற்படும்; கர்த்தருடைய சத்தத்தையும் நம்மால் கேட்க முடியும். தொடர்ந்து வேதத்தை வாசிக்கின்ற-*

போது அதன் போதனைகள் நமக்கு ஒருநாளும் புதிராக இருக்காது.

## ஆராய்ந்து வாசிக்க வேண்டும்

ஒவ்வொரு நாளும் வாசிக்கும் பகுதிகளை நீங்கள் சிந்தித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும். மாடு, நுனிப்புல் மேய்வதுபோல வாசிக்கக்கூடாது. வாசித்த பகுதிகளின் மூலம் கர்த்தர் நமக்கு எதைப்போதிக்கிறார் என்பதை சிந்தித்து ஆராய வேண்டும். ஒரு நோட்டுப் புத்தகத்தையும், பென்சிலையும் வைத்துக் குறிப்பெடுத்துக் கொள்ள வேண்டும். வாசிக்கும் பகுதிக்கும் அது காணப்படும் நூலுக்கும் உள்ள தொடர்பையும், அதை யார் என்ன நோக்கத்தில் எழுதியிருக்கிறார்கள் என்பதையும் ஆராய வேண்டும். அதன் மூலம் கர்த்தர் நமக்கு சொல்லுவதென்ன என்பதை ஜெபத்தோடு சிந்திக்க வேண்டும். இதற்கெல்லாம் நேரம் கொடுப்பது அவசியம். பெந்தகொஸ்தேகாரர்கள் போல வெறும் வாக்குத்தத்த வசனங்களுக்காக அலையக்கூடாது. வசனம் கொடுக்கப்பட்டிருக்கிற பகுதியை ஆராயாமல், அதை சிந்தித்துப் படிக்காமல் கண்கட்டி வித்தைபோல் வேலை செய்யும் வசனங்களைத் தேடி அலையக்கூடாது. வேதத்தின் தன்மையும், அதன் அருமையும் தெரியாதவர்கள்தான் வாக்குத்தத்த வசனங்களை நாடி அலைவார்கள். வேதவசனங்களின் மூலம் கர்த்தர் மெஜிக் செய்வதில்லை.

## ஜெபத்தோடு வாசிக்க வேண்டும்

வேதத்தை ஏனைய நூல்களைப்போல வாசிக்க முடியாது. அது கர்த்தர் நம்மோடு பேசப் பயன்படுத்தும் சாதனமாக இருப்பதால் அதைப்படிக்கும்போது தேவபயம் அவசியம். அத்தோடு படிப்பை ஜெபத்தோடு ஆரம்பிக்க வேண்டும்; ஜெபத்தோடு ஆராய வேண்டும். படித்தவற்றில் இருந்து தெரிந்து கொண்ட சத்தியங்களின்படி நடக்க உதவுமாறு கர்த்தரிடம் ஜெபத்தில் வர வேண்டும். ஜெபிக்காமல் வேதத்தைப் படித்து விளங்கிக் கொள்ள முடியாது. வேதத்தைப் படிக்காமல் ஒருநாளும் மெய்யாக ஜெபிக்க முடியாது. இவை இரண்டையும் நாம் எப்போதும் பிரிக்கவே முடியாது.

## வேதபோதனையின்படி நடக்க வேண்டும்

நாம் படித்த பகுதிகள் தரும் போதனைகளின்படி அன்றாடம் தேவபயத்தோடு வாழ வேண்டும். கர்த்தர் நாம் எதைச் செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறார் என்பதை வேதத்தை வாசித்தறிந்து அதன்படி வாழ முயல்வதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை. நம் வாழ்க்கையில் பரிசுத்தம் ஏற்பட வேத போதனைகளின்படி வாழ்வதைத் தவிர வேறு வழியில்லை; வேறு வழிகளில் நம்மில் பரிசுத்தம் ஒருபோதும் ஏற்படாது. வேதத்தின் தன்மை புரியாமல் இருப்பதால்தான் பரிசுத்தத்திற்காக அபிஷேகத்தைத் தேடி அலைகிறது ஒரு கூட்டம். அபிஷேகத்தால் வாழ்க்கையில் பரிசுத்தம் கிடைக்கும் என்று வேதத்தில் நாம் எங்குமே வாசிப்பதில்லை. ஆழமாக, சிந்தித்து, ஆராய்ந்து ஜெபத்தோடு வேதத்தைப் படித்து அதன் போதனைகளின்படி நடக்கும்போதுதான் ஆத்மீக வாழ்க்கையில் நாம் பரிசுத்தத்தோடு வளருகிறோம்.

ஜோன் பனியனின் உடலில் குத்துகிற இடத்திலெல்லாம் வேதம் இரத்தமாக வழியும் என்று கூறுவார்கள். அந்தளவுக்கு பனியன் வேதத்தில் ஊறியிருந்தார். அவருடைய வாழ்க்கையின் வளத்துக்கும், ஊழியத்தின் சிறப்புக்கும் அதுதான் காரணம். வேதத்தை வாசிக்காமல் வேதநாயகனுக்கு நாம் எப்படி விசுவாசமாக இருக்க முடியும்? சோம்பல்தனத்தையும், வரட்டுத்தனமான சாக்குப்போக்குகளையும் தள்ளி வைத்துவிட்டு தவறாமல் வேதத்தை வாசிக்க முன்வாருங்கள்.

## ஸ்ரீ லங்காவில் திருமறைத்தீபம்

ஸ்ரீ லங்கா வாசகர்களுக்காக திருமறைத்தீபத்தை ஸ்ரீ லங்காவில் அச்சிட்டு அங்கிருக்கும் வாசகர்களுக்கு அனுப்ப வழி செய்திருப்பதை சென்ற இதழில் அறிவித்திருந்தோம். இது பத்திரிகை மேலும் அதிகமான வாசகர்களை சென்றடைய உதவும். பத்திரிகை தேவையானவர்கள் ஆசிரியருக்கோ அல்லது கீழ்வரும் முகவரிக்கோ எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். முகவரி மாறும்போதும் எழுதித் தெரிவிக்கவும்.

Diakrisis Book Service
19. Rajasinghe Road, Colombo 6

## புதிய வெளியீடு

ஆசிரியர் எழுதிய "சீர்திருத்த விசுவாசம்" என்ற புதிய நூல் இப்போது விற்பனைக்கு உண்டு. இதைப் பின்வரும் முகவரிகளுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

Diakrisis Books Service
19. Rajasinghe Road, Colombo 6
Sri Lanka
(SL Rs. 65/-)

Reformed Baptist Publications
22. T. P. K. Main Road, Pykara
Madurai 625 004, Tamil Nadu
(IN Rs. 35/-)

## பத்திரிகை குழுவினர்

திருமறைத்தீபம், பத்திரிகையை வெளியிடுபவர்களைப்பற்றி இதுவரை நாம் எழுதியதில்லை. எழுதுபவர்களையும், வெளியிடுபவர்களையும்விட சத்தியமே எப்போதும் முக்கியத்துவம் பெற வேண்டும். அத்தோடு பின்னணியில் இருந்து கருத்தோடு செயல்படுவது மட்டுமே வெளியிடுபவர்களின் நோக்கமாக இருந்து வருகின்றது. இருந்தாலும் வாசகர்களுடைய அன்போடு கூடிய ஜெபமும், ஆதரவும் பத்திரிகையை வெளியிடுகிறவர்களுக்கு அவசியம் தேவை. பத்திரிகை நியூசிலாந்திலுள்ள சவரின் கிறேஸ் சபையின் (Sovereign Grace Church) வெளியீட்டு நிறுவனமான சவரின் கிறேஸ் வெளியீடுகளால் (Sovereign Grace Publications) வெளியிடப்படுகிறது. இந்த ஆங்கில சபை வாஞ்சையோடு இந்த ஊழியத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. பத்திரிகை ஆசிரியரும் அவருடைய மனைவியும் இதை எழுதுகிற, சரிபார்க்கின்ற வேலைகளை செய்து வருகிறார்கள். சபையின் அதிகாரிகளும், அங்கத்தவர்களும் பத்திரிகை சம்பந்தமான ஏனைய பொறுப்புக்களை நிறைவேற்றி வருகிறார்கள். இந்த ஊழியத்தில் இந்த சபையோடு தொடர்புடைய அனேக சபைகள் இணைந்து உழைக்கின்றன. வேதபூர்வமான சீர்திருத்த போதனைகளைத் தமிழ் மக்களுக்கு அறியத் தருமாறு இந்த அன்பூழியத்தை நடத்தி வருபவர்களுக்காகவும், அவர்களோடு இணைந்து உழைப்பவர்களுக்காகவும் தொடர்ந்து ஜெபிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## சீர்திருத்த பாப்திஸ்து வெளியீடுகள்

தமிழ் நாட்டில் நமது வெளியீடுகளை வெளியிட்டு விற்பனை செய்துவருபவர்கள் மதுரையைச் சேர்ந்த சீர்திருத்த பாப்திஸ்து வெளியீடுகள் நிறுவனம். கீழ்வரும் நூல்களை தமிழக வாசகர்கள் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

1689 விசுவாச அறிக்கை (24/-)
சிறுவர்களுக்கான வேத போதனை (14/-)
பரிசுத்த வேதாகமம் (20/-)
சீர்திருத்த விசுவாசம் (35/-)

Reformed Baptist Publications
22. T. P. K. Main Road, Pykara
Madurai 625 004, Tamil Nadu

## பத்திரிகை தேவையானவர்கள்

திருமறைத்தீபம் உங்களுடைய ஆத்மீக வாழ்க்கைக்கு பலனளிக்கும் என்று கருதுவீர்களானால் அதைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ள நீங்கள் எங்களுக்கு எழுதலாம். சபைமக்களுக்குப் பயனளிக்கும் என்று கருதும் போதகர்கள் மேலதிகப் பிரதிகளுக்கு சபை விபரங்களுடன் எங்களைத் தொடர்பு கொள்ளவும். சென்ற வருடங்களின் பிரதிகள் தேவையானவர்களும் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

திருமறைத்தீபத்தைப் பல நாடுகளில் வாழும் அனேக தமிழ் வாசகர்கள் இணையத்தில் வாசித்து வருகிறார்கள். நமது இணைய முகவரி <www. biblelamp.org>

# கிறிஸ்தவ கோட்பாடுகள்

*கேள்வி: 73 ஏழாவது கட்டளை என்ன?*

*பதில்: "விபச்சாரம் செய்யாதிருப்பாயாக" என்பது ஏழாவது கட்டளையாகும்.*

*(யாத்திராகமம் 20:14)*

*கேள்வி: 74 ஏழாவது கட்டளை மூலம் என்ன எதிர்பார்க்கப்படுகிறது?*

*பதில்: நமது வாழ்க்கையிலும், மற்றவர்களுடைய வாழ்க்கையிலும், இருதயத்திலும், பேச்சிலும், நடத்தையிலும் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்துப் பாதுகாக்க வேண்டுமென்று ஏழாம் கட்டளை எதிர்பார்க்கிறது.*

*(1 தெசலோனிக்கேயர் 4:3-5; 1 கொரிந்தியர் 7:2; எபேசியர் 5:11-12;
2 தீமோத்தேயு 2:22; எபேசியர் 5:4; 1 பேதுரு 3:2)*

*கேள்வி: 75 ஏழாம் கட்டளை எதைத் தடை செய்கிறது?*

*பதில்: ஒழுக்கமற்ற எல்லாச் சிந்தனைகளையும், வார்த்தைகளையும், நடத்தையையும் ஏழாம் கட்டளை தடை செய்கிறது.*

*(மத்தேயு 15:19; மத்தேயு 5:28; எபேசியர் 5:3-4)*

**விளக்கக்குறிப்பு:** *இந்தக் கட்டளை பாலியல் உறவைப் (Sex) பற்றிய கட்டளையாகும். நீதியான முறையில் பாலியல் உறவில் ஆர்வம் இருப்பதும், அதில் ஈடுபடுவதும் தவறில்லை. கர்த்தர் தன்னுடைய படைப்பின் மூலம் இதை நமக்கு உணர்த்துகிறார். ஆதாமைக் கர்த்தர் படைத்தபோது அவனால் தனக்கு இணையான ஒரு துணையை உலகத்தில் தேடிக்கண்டுபிடிக்க முடியவில்லை (ஆதி. 2:20). அவன் தனிமையில் இருப்பது நல்லதல்ல என்று கண்ட கர்த்தர் தானே அவனுக்கு இணையான ஒரு துணையை உருவாக்கித் தந்தார் (ஆதி. 2:18). மனிதன் தன்னுடைய தாயையும், தகப்பனையும் பிரிந்து தன்னுடைய மனைவியோடு இணைந்து ஒருயிரும், ஒருடலுமாக வாழவேண்டுமென்று கர்த்தர் கட்டளையிட்டார் (ஆதி. 2:24). இதிலிருந்து பாவமற்ற நிலையில் நமது முதற் பெற்றோர் இருந்தபோது பாலியல் உறவு நன்மையானதாகவே கருதப்பட்டதை அறிந்து கொள்ளலாம். அதைக் கர்த்தரே உருவாக்கினார்; அதில் எந்தத் தவறும் இருப்பதாக அவர் கருதவில்லை. "ஆதாமும், அவன் மனைவியும் நிர்வாணிகளாயிருந்தும் வெட்கப்படாதிருந்தார்கள்" என்ற வார்த்தைகள் (ஆதி 2:25) இதைத்தான் விளக்குகின்றன. ஆகவே, மனிதனுக்கு பாலியல் உறவில் ஆர்வம் ஏற்படுவதில் எந்தத் தவறும் இல்லை. அதேநேரம், அத்தகைய உறவில் கர்த்தர் அனுமதித்திருக்கும் முறையில், அவர் வழிப்படி ஈடுபடுவதிலும் எந்தத் தவறும் இல்லை. இதன் காரணமாகத்தான் வேதம் மனிதர்கள் திருமண வாழ்க்கையில் ஈடுபடுவதன் அவசியத்தை உணர்ந்து அதை வலியுறுத்துகிறது.*

*ஆனால், அநீதியான முறைகளில் பாலியல் இச்சையை வளர்த்துக் கொள்வதையும், அந்த இச்சையைத் தீர்த்துக்கொள்வதையும் வேதம் கண்டிக்கிறது. இன்னொருவகையில் கூறப்போனால், தனக்கு கணவனாகவோ, மனைவியாகவோ இல்லாத ஒருவரோடு எவரும் பாலியல் உறவில் ஈடுபடுவதை வேதம் பாவமாகக் கருதுகிறது. பாவிகளான மனிதர்கள் செய்யும் கேடான*

பாலியல் குற்றங்களைப் பற்றிப் பேசுவதும் எழுதுவதும் சங்கடத்தை ஏற்படுத்தினாலும், வேதம் அவற்றைப் பற்றித் தயங்காமல் பேசுவதால் அதை நம்மால் கவனிக்காமல் இருக்க முடியாது. வேதம் நான்கு கொடிய பாலியல் இச்சைகளையும், உறவுகளையும் தவிர்க்க வேண்டுமென்று போதிக்கின்றது:

(1) மணமாகாத ஆணும் பெண்ணும் பாலியல் உறவில் ஈடுபடுதல் - உபாகமம் 22:28, 29-ல் இத்தகைய உறவில் ஈடுபட்டவன் தான் உறவுகொண்ட பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று தீர்ப்பளிப்பதைக் காணலாம். இதன் மூலம் திருமணமாகாதவர்கள் பாலியல் உறவில் ஈடுபடுவது தகாது; அது பாவம் என்று வேதம் போதிப்பதை அறிந்து கொள்ளலாம். திருமணத்திற்குப் பின்பு, திருமணமானவர்கள் மட்டுமே தங்களுடைய சொந்த மனைவியரோடும், கணவர்களோடும் பாலியல் உறவில் ஈடுபட வேண்டு-மென்பது வேதம் ஏற்படுத்தியிருக்கும் விதி முறை.

(2) விபச்சாரஞ் செய்தல் - நாம் மேலே பார்த்ததையும்விட மோசமான பாவம் விபச்சாரம் செய்தல் என்று வேதம் சொல்கிறது. ஏனெனில் மேலே நாம் பார்த்த பாவத்திற்கு பழைய ஏற்பாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட-வில்லை. ஆனால், விபச்சாரஞ் செய்தலுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்-டுள்ளது (உபா. 22:22). திருமணமானவர்கள் தங்களுடைய சொந்த மனைவி அல்லது கணவனுடனல்லாமல் வேறு எவருடனும் பாலியல் உறவில் ஈடுபடுவதையே வேதம் விபச்சாரம் என்று அழைக்கிறது.

(3) மிருகங்களுடன் பாலியல் உறவில் ஈடுபடுதல் - யாத்திராகமம் 22:19 சொல்கிறது: “மிருகத்தோடே புணருகிற எவனும் கொல்லப்பட வேண்டும்.” இந்தக் கேடான நடவடிக்கை மனிதனை மிருகங்களின் நிலைக்குத் தள்ளுகிறது. இத்தகைய கேடுகளை மனிதன் இன்றும் தொடர்ந்து செய்து வருகிறான்.

(4) தன்னினச் சேர்க்கை (Homosexuality) - “பெண்ணோடே சம்யோகம் பண்ணுகிறதுபோல ஆணோடே சம்யோகம் பண்ண வேண்டாம்” (லேவிய-ராகமம் 18:22). கர்த்தரை அறியாத சமுதாயங்களிலே காணப்பட்ட இந்தக் கேவலமான பாலியல் உறவுமுறை இன்று எங்கும் பரவலாகக் காணப்படு-கின்றது. மேலைத்தேசங்களில் இது சர்வசாதாரணமாக காணப்படுகின்றது. இது பரலோகத்திற்கெதிரான கொடிய பாவம்.

பாவத்தினால் மனிதன் எத்தனைக் கேடான நிலைக்குப் போய் மிருகங்-களைவிடக் கேவலமாக நடந்து கொள்ள முடியும் என்பதை மேலே நாம் பார்த்த பாவகரமான பாலியல் குற்றங்கள் புலப்படுத்துகின்றன. இதையே பவுல் ரோமர் 1:24-27-லும் விளக்குகிறார். இந்தப் பாவங்களை எந்த மனிதனும் செய்து விடமுடியும். தேவனுடைய கிருபையின் மூலம் மட்டுமே நாம் இந்தப் பாவங்களைச் செய்யாமல் வாழ முடியும் (1 பேதுரு 1:3, 4).

இனிப் பாலியல் உணர்வுகளை அடக்கி நமது சொந்த வாழ்க்கையில் சுகத்தோடு வாழவும், கர்த்தரை மகிமைப்படுத்துவதற்காகவும் நாம் செய்ய வேண்டியதென்ன என்றும் வேதம் தருகின்ற போதனைகளைப் பார்ப்போம்.

(1) திருமண வாழ்க்கையில் ஈடுபடாமல் இருத்தல் - இது எல்லோராலும் முடியாது. அத்தோடு எல்லோரும் இத்தகைய வாழ்க்கையை வாழ்வதற்காக அழைக்கப்படவும் இல்லை. பவுல் தன் வாழ்க்கையின் இறுதிக்காலத்தை திருமண வாழ்க்கையில் ஈடுபடாமல் கழித்தார். அவரால் பாலியல் உணர்வு-

களை அடக்கி வாழ முடிந்தது. சிலரால் திருமண வாழ்க்கையில் ஈடுபடாமல் பாலியல் உணர்ச்சிகளை அடக்கிப் பரிசுத்தமாக வாழமுடியும். அத்தகையோர் இந்த வாழ்க்கைக்காக அழைக்கப்பட்டிருக்கிறார்கள் (மத்தேயு 19:12). சிலரால் பாலியல் உறவில் ஈடுபடமுடியாதபடி அவர்களுக்கு நோயோ அல்லது துன்பமோ ஏற்பட்டிருக்கலாம். இவர்கள் தங்களைக் கட்டுப்படுத்தி கர்த்தருடைய மகிமைக்காக வாழ வேண்டியவர்களாக இருக்கிறார்கள். கர்த்தர் இவர்களுக்கு அதற்கான வல்லமையைக் கொடுக்கிறவராக இருக்கிறார்.

(2) திருமண வாழ்க்கையில் ஈடுபடுதல் - எல்லோராலும் திருமண வாழ்க்கையில் ஈடுபடாமல் இருப்பது முடியாத காரியமாததால் ஏனையோர் திருமணம் செய்து கொள்வது நல்லது. பாலியல் ஆர்வத்தையும், உறவையும் நீதியாக திருமண வாழ்வில் ஈடுபட்டு கர்த்தரின் மகிமைக்காக அனுபவிப்பதையே வேதம் வரவேற்கிறது (1 கொரிந்தியர் 7:-9). இன்றைய மோசமான சமுதாயத்தில் திருமணம் செய்து கொள்வது எல்லோருக்கும் நன்மை தரும் காரியம். அது ஆணுக்கும், பெண்ணுக்கும் பாதுகாப்பைத் தரும். நமது பாலியல் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி அவற்றை நாம் நியாயபூர்வமான முறையில் அனுபவிப்பதற்காகக் கொடுக்கப்பட்டிருப்பதே திருமணம். கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களை மட்டுமே திருமணம் செய்துகொள்ள வேண்டும் (1 கொரிந்தியர் 7:39). கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களைத் திருமணம் செய்து கொள்வது நமது திருமண வாழ்க்கைக்குப் பேராபத்தாக முடியும். ஒருவர் கிறிஸ்தவராக வருவதற்கு முன்பாக திருமணம் செய்திருந்தால் தனது மனைவியுடன் தொடர்ந்தும் வாழ்வது அவசியம். மிகவும் நெருங்கிய உறவினர்களோடு நாம் திருமண வாழ்வில் ஈடுபடக்கூடாதென்றும் வேதம் போதிக்கிறது (லேவி. 18, 20; மாற்கு 6:18; மத்தேயு 14:4; 1 கொரி. 5:1).

விபச்சாரத்தைப் பற்றி விளக்கிய இயேசு (மத்தேயு 5:28), ஒரு பெண்ணை நாம் இச்சையோடு பார்த்தாலே விபச்சாரம் செய்தவர்களாகிறோம் என்று விளக்கினார். ஒரு பெண்ணோடு பாலியல் உறவில் ஈடுபடுவது நமது இருதயத்திலேயே ஆரம்பமாகி நடந்து விடுகிறது. ஆகவே, பாலியல் குற்றங்களில் ஈடுபடாமல் இருக்க கேடான சிந்தனைகள் நமது மனதில் எழுவதற்கு இடம் கொடுக்கக் கூடாது. இன்டர்நெட்டில் அசிங்கங்களைப் பார்க்காமலும், அருவருப்பான புத்தகங்களை வாசிக்காமலும் நமது கண்களையும், மனத்தையும் பரிசுத்தமாக வைத்திருந்து பாதுகாக்க வேண்டும். எக்காலத்திலுமில்லாத வகையில் இன்று கிறிஸ்தவ ஆண்களும், பெண்களும், இளைஞர்களும் முன்னெச்சரிக்கையாக பல நடவடிக்கைகளை எடுத்து பாலியல் பாவங்களுக்கு தங்களை உட்படுத்திக் கொள்ளாமலிருக்க வேண்டும். இதற்காக பாலியல் உறவு பற்றி வேதம் தரும் போதனைகளில் கவனம் செலுத்த வேண்டும். சபைப் போதகர்கள் இதில் அலட்சியம் காட்டாமல் சபை மக்களைப் பாலியல் பாவங்களுக்கெதிராக எச்சரித்தும், பாலியல் உறவு பற்றி ஆக்கபூர்வமான போதனைகளைத் தந்தும் ஆத்துமாக்களுக்கு துணை புரிய வேண்டும். ஊழியக்காரர்கள் இந்தப் பாவங்களில் இன்று அதிகமாக விழுந்துவிடுவதால், ஊழியத்திலிருப்பவர்கள் முன்னெச்சரிக்கையாக இருந்து மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

இன்றைய சமுதாயத்தின் ஒழுக்கக் கேடான போக்கை நாம் நீதியின் மூலமும், ஒழுக்கத்தின் மூலமும் எதிர்க்க வேண்டும். பரிசுத்த வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தீமையை நன்மையின் மூலம் வெல்ல வேண்டும். அது இன்று கிறிஸ்தவர்களுக்கு முன் இருக்கும் பெரும் பொறுப்பு.




கடந்த எட்டு ஆண்டுகளாக திருமறைத்தீபத்தின் ஆசிரியராக இருந்து வேதத்தின் தெளிவான சத்தியத்தையும், உண்மைகளையும் எழுதுவது மட்டுமல்லாமல் வேதத்திற்கு விரோதமாக போதிக்கும் குள்ள நரிகளையும், பிசாசின் போதனைகளையும் எங்களுக்கு இனம்காட்டி, திருமறைத்தீபம் எங்களுக்கு தொடர்ந்து கிடைக்கும்படி உதவுகிற உங்களுக்கும் உங்களோடு இணைந்து உழைக்கின்ற பத்திரிகை குழுவினருக்கும் எங்கள் நன்றி! வருகிற ஆண்டுகளிலும் இப்படியே ஊழியம் தொடர எங்கள் வாழ்த்துக்கள். தேவன் உங்களைத் தொடர்ந்து பெலப்படுத்த ஜெபிக்கிறோம்.
*- ஜேம்ஸ் சுப்பிரமணியன், வில்லியம் கேரி வாலிபர் ஐக்கியம், தமிழ் நாடு*

நாங்கள் திருமறைத்தீபத்தை தொடர்ந்து வாசித்து வரும் குடும்பம். 1996-ல் இருந்து பத்திரிகை கிடைக்கின்றது. ஆரம்பத்தில் வாசித்தபோது அநேக காரியங்கள் எங்களுக்குத் தெளிவற்று இருந்தன. அதனால் வாசிப்பதிலும் ஆர்வம் குறைந்து இருந்தோம். ஆண்டவருடைய கிருபையினால் அண்மைக்காலமாக மீண்டும் உங்களுடைய ஆக்கங்களை வாசிப்பதில் ஆர்வம் ஏற்பட்டது. அதனால் ஆரம்பத்தில் இருந்து ஒவ்வொரு இதழையும் மீண்டும் வாசிக்கத் தொடங்கினோம். அவ்வாறு வாசித்தபோது வேதத்தின் சகல இரகசியங்களையும் அதன் அரிய பொக்கிஷங்களையும் அறிய முடிந்தது. கர்த்தர் எங்களுடைய கண்களைத் திறந்து அவருடைய சத்தியங்களை தீபத்தின் மூலமாக அறியும்படிச் செய்தார்.

இன்றைய தமிழ் கிறிஸ்தவ உலகில் போலியான போதனைகளுக்கும், வேதத்தில் இல்லாத பல காரியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வரும்போது உங்களுடைய ஆக்கங்கள் எங்களுக்கு மிகமிக பயனுள்ளதாக அமைகின்றன. மேலும் நீங்கள் எழுதுகின்ற கிறிஸ்தவக் கோட்பாடுகள், சீர்திருத்தப் போதனைகள், சுவிசேஷ ஊழியம், ஆராதனை பற்றிய கட்டுரைகள், கொரிந்தியர் நிருபவிளக்கம், சீர்திருத்த வரலாற்று நாயகர்களின் வரலாறு ஆகியவை மிக மிக அருமையானவை. இவை எங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக உள்ளன. வேதத்தில் எங்களுக்குத் தெரியாமலும், தெளிவற்றும் இருந்த பல இறையியல் தத்துவங்களை அழகு தமிழில் எங்களுக்குத் தருவதற்காக உங்களுக்கு நன்றி கூறுகிறோம். நாங்கள் நம்பி வந்திருந்த சில தவறான போதனைகளில் இருந்து விடுபடவும் திருமறையின் ஆதாரத்தோடு தீபம் வெளிவருவது எமக்கு பெரிய பிரயோஜனமாக உள்ளது. கர்த்தர் உங்கள் ஊழியங்களை ஆசீர்வதிப்பாராக.
*- தட்குரூஸ், ஸ்ரீ லங்கா*

தேவ நாமத்தில் வாழ்த்துக்கள்! தைரியமான ஒரு புது வேகத்தில் வரும் உங்கள் பத்திரிகையைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. வெளிவரும் கிறிஸ்தவ சஞ்சிகைகளில் "திருமறைத்தீபம்" ஒன்றுதான் உள்ளதை உள்ளபடி உண்மையாய் விளம்பி நிற்கிறது. என் பாராட்டுக்கள். பிரசங்கம் ஏன்? என்ற தலைப்பு மிகவும் பிரமாதம். இன்றும் அனேக ஊழியர்கள் பிரசங்க பீடத்தை தமது விளம்பரங்களுக்கும், ஏன், தம் மனக்கருத்தை புகுத்தவும் பயன்படுத்தும் இந்நாட்களில் மேற்படி தலைப்பு அவசியமானதே. மேலும் சஞ்சிகையின் தற்போதைய வடிவமைப்பு அபாரம். உங்கள் தேவபணி வளரட்டும். *- பாஸ்டர் பொன்னையா, கனடா*

போதகராகிய என் நண்பர் ஒருவரிடமிருந்து திருமறைத்தீபத்தைப் பெற்று வாசித்தேன். மிகவும் பிரயோஜனமாக இருந்தது. ஊழியம் என்றால் என்ன, ஒரு ஊழியன் எப்படி வேதத்தைப் போதிக்க வேண்டும், எப்படி ஜீவிக்க வேண்டும் என்று தெள்ளத் தெளிவாக எழுதி இருந்தீர்கள். இதை வாசிக்கும்போது என்

சீர்திருத்த போதனைகளைத் தரும் நமது வெளியீடுகள்

## 1689 விசுவாச அறிக்கை

## சிறுவர்களுக்கான வேத உபதேசம்

## பரிசுத்த வேதாகமம்

எழுதியவர்கள்: ஆர். பாலா, ஜோன் ரூத்தர்

## சீர்திருத்த விசுவாசம்

எழுதியவர்: ஆர். பாலா


**இந்தியாவில் இருப்பவர்கள் இந்நூல்களையும் நமது ஏனைய வெளியீடுகளையும் கீழ்வரும் இந்திய முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.**

*Reformed Baptist Publications*
*22 T. P. K . Main Road*
*Pykara, Madurai 625004, Tamil Nadu. S. India*
*Phone: (452) 2371659*

**ஸ்ரீ லங்காவில் இந்நூல்களையும் நமது ஏனைய வெளியீடுகளையும் வாசகர்கள் கீழ்வரும் முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.**

*Diakrisis Book Service*
*19 Rajasinghe Road, Colombo 6, Sri Lanka*

உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது. திருமறைத்தீபத்தை தொடர்ந்து படிக்க விரும்புகிறேன். தயவு செய்து பத்திரிகையை எனக்கு அனுப்பி உதவுமாறு தாழ்மையுடன் வேண்டுகிறேன். என்னுடைய ஊழியத்துக்கும், ஜீவியத்துக்கும் அது பிரயோஜனமாக இருக்கும். - *பாஸ்டர் எஸ். மார்டின், தமிழ் நாடு*



பயனுள்ள திருமறைத்தீபம் பத்திரிகையை தொடர்ந்து அனுப்பி வருவதற்காக நன்றி கூறுகிறேன். தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் வேதபூர்வமான ஆத்மீக எழுப்புதலை ஏற்படுத்த உங்களுடைய இலக்கியப்பணியை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக! 1 கொரிந்தியர் 12-14 வரையுள்ள பகுதிகளின் மூலம் சபைகள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் பற்றி நீங்கள் பத்திரிகையில் தந்துள்ள விளக்கங்களை நான் மிகவும் வரவேற்கிறேன். பலருக்கும் நிரந்தரமான பலனளிக்கக்கூடியதாக இருக்க அவற்றை நூலாக வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். "ஏன் பிரசங்கம்" என்ற தலைப்பில் நீங்கள் எழுதிய பயனுள்ள ஆக்கம் தகுந்த நேரத்தில் வந்திருக்கிறது, அதைத் தனியாக அச்சிட்டு விநியோகித்தால் அனேக பிரசங்கிகளும், வேதபோதனையளிப்பவர்களும் பயனடைவார்கள். அதை நான் மிகவும் அக்கறையோடு வாசித்தேன்; என் இருதயத்திற்கு இதமாக இருந்தது. - *என். ஜோன் ஜெயானந்தம், தமிழ் நாடு*

---

*அட்டைப் படம் - ஸ்ரீ லங்காவில் அதன் தலைநகரமாகிய கொழும்பில் இருந்து தென்பகுதியிலுள்ள காலிக்குப் போகும் வழியில் உள்ள ஒரு அழகிய கடற்கரையின் வண்ணக் காட்சி.*

மலர் 9 ஜூலை - செப்டெம்பர் 2003 இதழ் 3

1. பிரசங்கம் தயாரித்தல் - 1

2. பின்நவீனத்துவமும், கிறிஸ்தவமும்

3. உலகத்தில் அன்புகூராதிருங்கள் - 1

4. திறமைவாய்ந்த சில திருச்சபைத் தலைவர்கள் - 1

5. தெய்வீக பராமரிப்பு (1689 விசுவாச அறிக்கை 5:4-7)

6. ஜொனத்தன் எட்வர்ட்ஸ்

7. அன்றாட வேத வாசிப்பு

8. தகவல்கள்

9. கிறிஸ்தவ கோட்பாடுகள்

10. எண்ணங்கள்!

Te Rau Print